நன்றி - நூலகத்திட்டம்

SARINIHAR


சரிநிகர்

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 208 நவ.05-நவ.11. 2000 விலை ரூபா 12.00

பூட்டி வைத்தாற் போதாது!
புலியாகிப் போனாலும் போகாமல் விட்டாலும்
புலியென்று சொல்லிப் பிடித்துவிடு- கிலிபோக
பூட்டி வைத்தாற் போதாது: பூந்துவெட்டு: அன்னாரின்
நாட்டிலுள்ளார்: தமிழர் பேர்! -ஈழமோகம்



## படுகொலைக் களமாகிய பண்டாரவளையும் அதன் பின்பும்!



## யுத்தம் காரணமாக அதிகம் பாதிக்கப்படுவது எமது சிங்கள மைந்தர்களே! ஜனாதிபதி சொல்கிறார்



## சந்திரசேகரனை விடுதலை செய்!



தொடரும் போராளியின் கதை...



கலையின் முழுமையை அவாவி நிற்கும் காத்திருப்பு! கதையின் செய்தி விரிவடையும் புதிய பரிமாணம்!

நன்றி - நூலகத்திட்டம்



# வோட்டுப் போட்டதற்கு கிடைத்த பரிசு! - புளொட்

~ பரமர்

கடந்த ஒக்டோபர் 9ம் திகதி அன்று யாழ்ப்பாணத்தில் குரூரமாகக் கொலை செய்யபப்பட்ட பத்திரிகையாளர் நிமலராஜனின் படுகொலையைக் கண்டிக்கும் முகமாக ஒக்டோபர் 28ம் திகதி அன்று யாழ்ப்பாணத்தில் மௌன ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்த வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் தீர்மானித்தது.

இதே தினத்தில் பண்டாரவளையில் தடுப்பு முகாமலில் வைத்துக் கொல்லப்பட்ட இளைஞர்களின் படுகொலையைக் கண்டிக்கும் வகையில் யாழ் குடாநாட்டில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு ஈ.பி.டி.பி. கோரிக்கை விடுத்தது. பத்திரிகையாளர்களின் ஆர்ப்பாட்டத்தைச் செயழலிழக்கச் செய்யும் நோக்கிலேயே ஈ.பி.டி.பி. அவசர அவசரமாக இந்த அறிவித்தலைச் விடுத்ததாகப் பத்திரிகையாளர்கள் கருதினர். இதனால் வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் தனது ஆர்ப்பாட்டத்தை பிறிதொரு தினத்திற்கு ஒத்தி வைத்தது.

பண்டாவரவளையில் படுகொலை செய்யப்பட்ட இளைஞர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் யாழ் குடாநாடு எங்கும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது: ஈ.பி.டி.பிக்குப் பெருவெற்றி. அன்றைய தினம் கடைகளெதுவும் திறக்கப்படவில்லை. வடபிராந்திய போக்குவரத்துச் சபைப் பேரூந்துகளெதுவும் சேவையிலீடுபடுத்தப்படவில்லை. தனியார் பேரூந்து சேவைகள் கூட இடம்பெறவில்லை.

ஸ்ரீதர் தியேட்டரில் சோக இசை ஒலிபரப்பட்டது. என்ன இருந்தாலும்; ஈ.பி.டி.பி. ஏற்பாடு செய்த ஹர்த்தால் அல்லவா? அது நிச்சயம் வெற்றியளிக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

சிலவேளை பத்திரிகையாளர்ள் அல்லது த.வி.கூ. போன்ற வேறு யாராவது ஹர்த்தாலை ஏற்பாடு செய்திருந்தால் அது சிலவேளை பிசுபிசுத்துப் போயிருக்கும்.

இது கூட்டணியினர் நடாத்தும் ஹர்த்தால் அல்ல எமது ஹர்த்தால் நிச்சயம் வெற்றியளிக்கும் என ஈ.பி.டி.பியினர் முதல் நாளே கூறியுள்ளனர். அத்துடன் நாளை கடை திறந்தால் தெரியும் தானே என கடை உரிமையாளர்களை மிரட்டியும் உள்ளனர்.


ஹர்த்தால் தினத்தன்று இடம்பெற்ற சில சம்பவங்கள்: நல்லூரில் தேனீர்ச் சாலை உரிமையாளர்கள் ஒருவர் ஒற்றைக் கதவில் கடையைத் திறந்து வைத்திருந்தார். அவருக்கு வாகனத்தில் வந்த சிலர் சொன்ன பதில் இப்ப ஒற்றைக் கதவிலை திறந்து வைச்சிருங்கோ. பிறகு தெரியும் தானே.

சட்டநாதர் கோயிலடியிலும் ஒரு கடை திறந்திருந்தது. வாகனத்தில் வந்த சிலர் கடை உரிமையாளர்களிடம் சொன்னார்கள். இப்ப இருபாலைக்குப் போறம். வரேக்கை திறந்திருந்தால் கடையைக் கொளுத்துவம். திருநெல்வேலிப் பகுதியிலும் சில கடைகள் திறந்திருந்தன. அந்த கடை உரிமையாளர்களிடம் சிலர் சென்று அழகு 'செந்தமிழில்' மிகவும் பவ்வியமாக கடைகளைப் பூட்டுமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

அதற்குப் பிறகும் கடைகளைத் திறந்து வைத்து வியாபாரம் செய்கிற அளவுக்கு பண்பாடற்றவர்களா யாழ்ப்பாண வர்த்தர்கள். உடனடியாகத் தமது கடைகளை இழுத்து மூடிவிட்டு வீடுகளுக்குப் பறந்தனர்.

கடைபூட்டும் படலம் இவ்வாறிருக்க இராணுவத்தினர் கடைகளைத் திறக்கும் பணியிலீடுட்டு வந்தனர். பண்டதரிப்பு, சங்கானை, நெல்லியடிப் பகுதிகளிலும், யாழ் நகரிலும் கடைகளைத் திறக்கும் வேலையை இராணுவத்தினர் வெற்றிகரமாகச் செய்து முடித்தனர்.

ஒரு இடத்தில் கடை உரிமையாளர் ஒருவர் இராணுவத்தினரிடம் ஐயா நீங்கள் கடையைத் திறக்கச்சொல்கிறீர்கள். ஆனால், நான் கடையைத் திறந்தால் அவங்கள்



வந்து எனக்கு அடிக்கப் போறங்கள் என்றார்.

ஒரு ஜனநாயக நாட்டில் அமைதியான முறையில் ஹர்த்தால் செய்வதற்குக் கூட உரிமையில்லையா என்று ஆவேசப்படாதீர்கள். எமது ஜனநாயக நாட்டில் தான் அவசரகாலச்சட்டம் என்று ஒரு சட்டமும் உலகில் வேறெந்த நாட்டிலுமில்லாதவாறு இரு தசாப்தங்களுக்கு மேலாக அமுலில் உள்ளது.

இச்சட்டத்தை அன்று முதல் இன்று வரை- உயிர் கொடுத்துக் காத்து வருபவர் எமது மாண்புமிகு அமைச்சர் தான். அவர் அன்றைய தினம் பண்டாரவளைச் சம்பவத்த நினைத்து மிகவும் உணர்ச்சிக் கொந்தளிப்பிலிருந்தபடியால் அவசரகாலச் சட்டத்தை மறந்து விட்டார் போலிருக்கிறது.

பாவம் தோழர்கள் அவர்களது உயிர்த் தோழர்கள் கடைகளைத் திறக்கும் போது அவர்களுடன் பகைப்பதா? என்ன இருந்தாலும் அவர்கள் எமது உயிர் காக்கும் தோழர்களல்லவா என்று பேசாமலிருந்து விட்டார்கள் போலிருக்கிறது.

பண்டாரவளைச். சம்பவம் வன்மையாகக் கண்டிக்கபட வேண்டிய ஒன்று. ஆனால், அது கொச்சைப்படுத்தப்பட்டு விட்டது.

யாழ். குடாநாடு மீண்டும் இந்திய இராணுவ காலப்பகுதி போன்ற இருண்ட காலப்பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறதா என்ற அச்சம் யாழ் மக்களிடையே ஏற்பட்டுள்ளது. பத்திரிகையாளர்கள் நிமலராஜனின் மரணச்சடங்கின் போது புளொட் உறுப்பினரான அன்ரன் பொன்னையா சொன்னார். "நீங்கள் இதுக்குத் தானே வோட் போட்டு அவங்களைப் பாளிமென்ற்றுக்கு அனுப்பினனீங்கள். இது துவக்கம். இது தான் இனித் தொடரப் போகிறது. யாழ் மக்களுக்கு அவங்கள் தந்த பரிசு இது தான்"என்று.




## பெட்டியில் வந்த செய்தி!

பிரசன்ன விதானகேயின் தயாரிப்பான "புரஹந்த களுவர" என்ற திரைப்படம் பற்றி இதழ் 205இல் வெளிவந்த கட்டுரையை வாசகர்கள் படித்திருக்கக் கூடும்.

போர்க்களத்தில் இறந்து போன இராணுவச் சிப்பாயான தனது மகனின் சவப்பெட்டியை புதைகுழியிலிருந்து மீட்டெடுத்து தந்தை வன்னிஹாமி உடைத்துப் பார்க்கும் காட்சி ஒன்று அதில் வரும். அந்தப் பெட்டியில் உடலுக்குப் பதில் இரு கற்களும் ஒரு வாழைத்தண்டும் வைக்கப்பட்டிருக்கும்.

இது திரைப்படக் கதை. இந்தக் கதை அரசாங்கம் யுத்தத்தின் பேரால் எப்படி சிங்கள மக்களை ஏமாற்றுகிறது என்பதை வெளிப்படுத்தும் ஒரு யதார்த்தக் கதை.

ஆனால், பண்டாரவளை சம்பவத்தின் பின் வடக்குக் கிழக்கை நோக்கி பெட்டிகளில் கொல்லப்பட்ட இளைஞர்களின் சடலங்கள் எடுத்துச் செல்லப்பட்டன.

கொல்லப்பட்ட தமது உறவுகளைப் பார்க்கக் கூடியிருந்தவர்களுக்கு பார்க்கக் கிடைத்தது, அந்த இளைஞர்களின் முழு உடலல்ல.

வாழைத்துண்டோ கற்களோ அல்ல.

வெட்டியும் கொத்தியும் பிளக்கப்பட்ட சதைத் துண்டங்களும் அல்ல.

இனவெறியின் கோரத்தை, அது எடுத்துள்ள இன்றைய வடிவத்தை வடக்கு கிழக்கு மக்களின் முகத்தில் அறைந்து சொல்கின்ற செய்தி அது.

ஆம். செய்தி!

## தலைவிதி!

இந்த உரையாடலைப் பாருங்கள்!

"பண்டாரவளை கொலைகளை பொலிஸ் தான் செய்ததாம்?"

"அப்படித் தான் சொல்கிறார்கள்"

"சொல்கிறார்கள் என்ன சொல்கிறார்கள். தெளிவாகத் தெரியுது. சனங்கள் வேறை தங்களுக்கு சம்பந்தமில்லை எண்டு தெரிவிச்சீட்டுது..."

"சரி இப்ப என்ன அதுக்கு"

"இல்லைக் காவலுக்கு வைச்ச பொலிசே இப்பிடிச் செய்தால்...? அப்ப பொலிஸ் இருக்கிறதிலை என்ன பிரயோசனம்?"

"ஆருக்கு என்ன பிரயோசனம் எண்டு கேக்கிறாய்"

"எங்களுக்கு தான் ... ... மக்களுக்கு"

"மக்களுக்கு...? எந்த மக்கள்? சிங்கள மக்களா, தமிழ் மக்களா? எந்த மக்கள்"

"எல்லோருக்கும் தான்"

"எல்லோருக்குமாக இங்கை ஒருதரும் பொலிஸ் வைச்சிருக்கேல்லை... அது ஆட்சியிலை இருக்கிறவைக்கும், சிங்கள பௌத்த இனவாதத்திற்கும் சேவை செய்யத்தான் பொலிஸ்...."

"என்ன உப்பிடிச் சொல்லுறாய்...."

"நான் சொல்லேல்லை. பண்டாரவளைச் சம்பவம் சொல்லுது" -இது இரு பத்திரிகையாள நண்பர்களுக்கிடையில் நடந்த உஸ்ரயாடல் (உரையாடல் எழுத்துக்காக சாரப்படுத்தப்பட்டுள்ளது)

இதைப்பாருங்கள்.

இந்தியாவிலிருந்து வந்த ஒரு சிறிலங்கன் விமானத்தில் நடந்த உரையாடல். உரையாடல் ஆங்கிலத்தில் நடைபெறுகிறது.

"எங்கிருந்து வருகிறீர்கள்"

"சென்னையிலிருந்து"

"இருக்கிற இடம்?"

"கொழும்பு.... நீங்கள்"

"நான் மாத்தறை... இராணுவத்திலை மேஜராக இருக்கிறன்.... ஒருரெயினிங்குக்காக ஹைதரபாத்துக்கு போயிட்டு வாறன்... நீங்கள் என்ன செய்கிறீர்கள்"

"நான் ஒரு ஆசிரியர்..." - திடுக்கிட்ட குரலில்

"சொந்த ஊர்"

"யாழ்ப்பாணம். ஆனால், இப்ப பத்துவருஷமா க போகேல்லை" -கொஞ்சம் தயக்கத்துடன்.

"அதுதானே ... இந்த யுத்தம் எவ்வளவு அநியாயம்... எத்தினை பேரை அநியாயமாகச் சாக்காட்டுது. எனக்கெண்டால் இந்த வேலையே பிடிக்கேல்லை... யார் யாருக்கோவாக எங்கடை வாழ்க்கையை அநியாயமாக்கிறம் ... தமிழீழத்தை எதிர்க்கிற எந்த சிங்களவனென்டாலும் பிரச்சினை தீர்ந்தால் யாழ்ப்பாணத்திலை போய் இருப்பான் என்று நினைக்கிறியளா? நான் நினைக்கேல்லை..." ஆசிரியருக்கு கொஞ்சம் தெம்பு வருகிறது.

"நீங்கள் வேலையை விடுங்கோவன்"

"விடத்தான் போறன். ஆனா இன்னும் ஒருவருஷம் வேலை செய்தாத்தான் 20 வருச சேவிஸ் கிடைக்கும். இப்ப பாருங்கள் உங்களைப் பார்க்கேக்கை எனக்கு தமிழ் என்று வெறுப்பு வரவில்லை. உங்களுக்கும் அப்பிடித்தான். எங்களால் பேச முடிகிறது. இந்த அரசியல்வாதியளுக்காக நாங்கள் வாழ்க்கையை வீணாக்க முடியாது. ஆனா ஒரு வருஷத்திலை என்ன நடக்குமோ...?" இது இன்னொரு பக்கம்.

முதலாவது இலங்கையின் அரசியல் நிலமை. இரண்டாவது இலங்கையின் மனிதத்தின் துயரம்.

இரண்டும் சேர்ந்த நிலை எமது நாட்டின் தலைவிதி!

நன்றி - நூலகத்திட்டம்



# ஜனாதிபதிக்குத் தந்தி!
# பத்திரிகைகளுக்கு அறிக்கை!!
# பாராளுமன்றத்தில் பேச்சு!!!
# தமிழ் மக்களுக்கு ?

~ டி.சிவராம்

*கண்ணீரை மட்டும் ஊற்றி வளர்க்கவில்லை*
*நாம் இப்பயிரை.*
*இரத்த ஆற்றோரம் வளர்ந்த விருட்சமன்றோ அது.*
*பொறுத்தது போதும் பொங்கி எழுந்திடுக.*

பழைய தமிழ் படங்களிலும் தற்போது சக்தி தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் சில தொடர் நாடகங்களிலும் ஒரு அபலைப் பெண் வருவாள். (திக்கற்ற பார்வதி, அபலை சாந்தா, நல்லதங்காள் இந்த வகை) அவளுக்குத் துன்பங்களே தொடர்ந்து வரும். கேவிக்கேவி அழுது கொண்டே எல்லாவற்றையும் அவள் பொறுத்துக் கொள்வாள். இதைப் போற்றுவதற்குரிய ஒரு பண்பாகக் காட்ட இயக்குனர்கள் கடும் முயற்சி செய்திருப்பார்கள். தமிழ் மக்கள் எல்லா வகையிலும் இந்த அபலைப் பெண் பாத்திரம் போலவே கடந்த பத்து வருடங்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

தம்மீது அநீதியாக இழைக்கப்பட்ட பெரும் கொடுமைகளையும் அப்பட்டமான அட்டூழியங்களையும் சொல்லொணாத் துயரத்தோடும் நெஞ்சு வெடிக்கும் சோகத்தோடும் அவர்கள் மேற்படி அபலைப் பெண்ணின் பாணியில் தாங்கிக் கொண்டார்கள். சிறிலங்கா பொலிசாரும் படையினரும் அவர்களுடன் கூடியிருக்கும் தமிழ் இயக்கங்களும் நம்மை நாய்களை விடக் கேவலமாகவும் பூச்சி புழுக்களை விடத் துச்சமாகவும் நடத்திய சந்தர்ப்பங்கள் ஞாபகம் இருக்கின்றதா? என்ன செய்தோம்?

தன்மானத்தைக் கொன்று ஊமைக் காயங்கள் எம்முள் ஆயிரமாய்ப் பெருக மௌனமாகவிருந்தோம். நமது தமிழ் அரசியல்வாதிகளும் சிறிலங்கா அரசின் தரகர்களாக எம்மத்தியிலிருக்கும் வேறுசிலரும் ஜனாதிபதிக்குத் தந்தி அடித்தோம் என்றார்கள். பாராளுமன்றத்தில் பேசிவிட்டோம் என்றார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளோம் என்றார்கள். (கூட்டணிக்காரர்கள் ஜனாதிபதிக்கு அடித்த நூற்றுக்கணக்கான தந்திகள் ஞாபகம் இருக்கிறதா? செம்மணிக்கு நீதி கிடைக்குமென்று காணாமல் போனோரின் பெற்றோரை டக்ளஸ் கொழும்புக்கு அழைத்து வந்து ஜனாதிபதியைச் சந்திக்க வைத்தது ஞாபகமிருக்கிறதா?)

எம்மீது தொடரும் அநீதிகளையும் அட்டூழியங்களையும் கொடூரமான அநீதி-களையும் சிங்களப் பேரினவாத அட்டூழியங்களையும் இவர்களது தந்திகளாலும் செய்தித்தாள் அறிக்கைகளாலும் தடுத்திட முடிந்ததா? அரசாங்கத்தில் இணைகிறோம் உங்களுடைய வாழ்க்கையை மேன்மைப் படுத்துகிறோம் எனப் புளுகிச்சென்ற டக்ளஸ் தேவானந்தாவும், கணேசமூர்த்தியும் என்ன செய்தார்கள்? தீபாவளிப் பரிசாக எமது மக்களுக்கு அடித்துக் கொல்லப்பட்ட அவர்களுடைய இளம் பிள்ளைகளின் சிதைந்த உடலங்கள் அனுப்பப்பட்டன.

ஜனாதிபதியுடன் பேசுகிறோம். நீதி கிடைக்கும் என எம்மிடம் பம்மாத்துவதைவிட இவர்களும் சரி தமிழர் உரிமையென்று இவ்வளவு காலமும் கப்சா விட்டு வந்த கூட்டணிக்காரர்களும் சரி வேறென்ன செய்துவிட முடியும்?

இவர்கள் இன்று ஒன்றேயொன்றை மட்டும் ஒழுங்காகச் செய்கின்றார்கள்.

சிங்களப் பேரினவாத அரசு எமக்கிளைக்கும் அநீதிகளை எதிர்த்து நிற்கும் துணிவையும் தன்னம்பிக்கையையும் எமது மக்களிடம் இல்லாதொழிப்பதும் தமிழர் தாயகத்தில் மும்மாரி பொழிகிறது, நீதியும் தர்மமும் தழைத்தோங்குகின்றன என்னும் அப்பட்டமான பொய்மையை பரப்புவதுமே இவர்கள் இன்று ஒழுங்காகச் செய்து வரும், செய்யப்போகும் வேலையாகும்.

இந்த அரசியல் தந்திரத்தை ஆரம்பித்து வைத்தது திராவிட முன்னேற்றக் கழகம். தனிநாட்டுப் போராட்டமென்று கோடிக்கணக்கான தமிழர்களை அணிதிரட்டி நூற்றுக் கணக்கான இளைஞர்களைப் பலிகொடுத்து ஆட்சியைப் பிடித்தது தி.மு.க. இன்று அந்தக் கட்சி என்ன செய்கின்றது என்பது உங்களுக்குத் தான் தெரியும். தனித்தமிழுக்காகவும், பகுத்தறிவுக்காகவும், போராடிய தி.மு.கவின் கட்டுப்பாட்டிலியங்கும் சண் தொலைக்காட்சி அரைகுறை ஆங்கிலமும் அரைகுறைத் தமிழும் கலந்த ஒரு கொச்சை மொழியைப் பரப்புவதிலும் முட்டாள்த் தனங்களை விதைப்பதிலும் முன்னிற்கின்றது. தமிழ் இளைஞர்கள் விழித்தெழாது போயிருந்தால் கூட்டணியும் இதே வேலையைத் தான் செய்திருக்கும்.

சிறிலங்கா பேரினவாதிகள் கடந்த பத்து வருடங்களாக என்றுமில்லாதளவிற்கு எம்மக்களிடையில் பயங்கர வெறியாட்டம் ஆடியுள்ளார்கள். அவர்களுடைய அட்டூழியங்கள் குறைந்த பட்சம் இனிவரப்போகும் ஆறு வருடங்களுக்காவது எந்தவிதத் தங்குதடையுமின்றித் தொடரும் என்பதே நிமலராஜனின் படுகொலையும் மலையகத்தில் நடந்தேறியுள்ள கொடுமைகளும் தெளிவாகக் காட்டுகின்றன.

அங்ஙனமாயின் சிறிலங்கா ஜனாதிபதிக்குத் தந்தி அடிப்பவர்களையும் செய்தித்தாள்களில் அறிக்கைவிட்டுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு தேடுபவர்களாக நாடகமாடுபவர்களையும், ஜனாதிபதியுடன் பேசிவிட்டோம், நீதி கிடைக்கும், சம்பவங்களை விசாரிப்பதற்கு ஆணைக்குழு நியமிக்கப்படும் என்று பித்தலாட்டமாடுபவர்களையும் நாம் தொடர்ந்தும் எம்தலையில் மாவரைக்க விடப்போகின்றோமா என்பது தான் எம்முன் இன்றுள்ள முக்கியமான கேள்வி.




சிங்களப்பேரினவாதிகளின் செருப்பை நக்கி வாழ்பவர்கள் நக்கிக் கொண்டு தான் இருக்கப் போகின்றார்கள். ஆனால் அவர்களை நம்பி அவர்கள் பின் செல்லும் அந்த அபலைத் தமிழர்களுக்குத் தன்னம்பிக்கையை ஊட்டுவதும் அவர்களிடம் சுயமரியாதையை வளர்ப்பதுமே எம்முன் இன்றுள்ள தலையாய கடமையாகும்.

தமிழ் மக்களிடம் கடந்த பத்து வருடங்களில் மேற்படி அபலைப்பெண் உளப்பாங்கு உருவாகி வளர்ந்தமைக்கு புலிகளின் வெளிநாட்டு செய்தித்துறை மற்றும் பிரச்சாரத்துறைப் பொறுப்பாளர்களும் (கொமிசார்கள்) பொறுப்பேற்க வேண்டும். நாம் வெற்றியையே பெற்று அதைத் தங்கத்தட்டில் வைத்து உங்களுக்குத் தருவோம் என்ற பாணியிலே இவர்கள் பேசுகிறார்கள்.

நானொரு முறை வெளிநாடு சென்றிருந்த போது புலிகள் எதிர்நோக்கும் நெருக்கடிகளைப் பற்றி ஒரு கூட்டத்தில் பேசினேன். கூட்டம் முடிய ஒரு புலிப் பிரமுகர் என்னிடம் வந்து "நீங்கள் அப்படிப் பேசியிருக்கக் கூடாது. அது எங்கள் ஆதரவாளர்களைக் குழப்பிவிடும்." என்றார். "உங்களுக்குச் சோதனைகளும் வேதனைகளும் ஏற்படும் போது அவற்றை உணர்ந்து அவற்றில் பங்கு கொள்கின்ற ஆதரவாளர்களை வளர்க்க நீங்கள் விரும்பவில்லை. அதற்காக உண்மையை மறைத்திட வேண்டுமென்று நீங்கள் என்னிடம் எதிர்பார்க்க முடியாது." என்று நான் அவரிடம் கூற வேண்டியதாயிற்று.

சிறிலங்காவின் கிரிக்கெட் ஆட்டங்களில் சொக்கிப் போய் இருக்கின்ற தமிழ் நடுவர்க்கத்தினர் பலர் புலிகள் அங்கே காரியத்தைப் பார்ப்பார்கள் நாமிங்கே யாருக்கு கூஜா தூக்கியேனும் சலுகைகளைப் பெற்றுக் குஷியாக வாழ்ந்து விட்டால் போதும் என்ற நினைப்பில் இருக்கின்றார்கள்.

சிங்களப் பேரினவாதத்தின் தரகர்களாக எம்மிடையில் செயற்படுபவர்களுக்கு அரசியல் அடித்தளமாக இருப்பவர்கள் இவர்களே. அரசியல் அபலைத்தனத்தை தமிழ் மக்கள் மத்தியில் வேரூன்ற வைப்பதற்கு இவர்களுடைய உளப்பாங்கும் ஒரு காரணியாக அமைகின்றது. சக்தி தொலைக்காட்சி, மற்றும் தொலைக்காட்சி, பண்பலை வானொலிகள் உட்படப் பல ஊடகங்கள் இந்தக் கும்பலை உரமூட்டி வளர்க்கின்றன. இதை எழுதும் போது கவிஞர் நீலாவணனின் உணர்ச்சிகள் என் நெஞ்சில் ஏனோ நிழலாடுகின்றன.

கண்ணீரை மட்டும் ஊற்றி
வளர்க்கவில்லை நாம் இப்பயிரை.
இரத்த ஆற்றோரம் வளர்ந்த விருட்சமன்றோ
அது.
பொறுத்தது போதும் பொங்கி எழுந்திடுக!

⊙

நன்றி - நூலகத்திட்டம்




# நிமல்ராஜன்
# இனிவருபவற்றிற்கு ஒரு குறியீடு!

~ என். சரவணன்

பத்திரிகையாளர் நிமலராஜனின் படுகொலைச் சம்பவம் இலங்கையில் இதற்கு முன்னர் கொல்லப்பட்ட எந்தவொரு பத்திரிகையாளருக்கும் கிடைக்காத எதிர்ப்பலைகளையும், அனுதாபங்களையும் வெளிப்படுத்தியிருந்தது. ஆனால் இதில் முக்கியமாக நோக்கத்தக்க இன்னொன்றும் உள்ளது.

தமிழ் பத்திரிகையாளருக்கு எதிரான முதல் வன்முறை இதுவல்ல என்பதை முழு நாட்டு மனித உரிமையாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் அறிவிக்க வேண்டியிருக்கிறது. இதற்கு முன்னர் சிங்கள தொடர்பூடகங்களைச் சேர்ந்தவர்களுக்கு எதிராக எந்தவொரு வழக்கோ, வன்முறை நடவடிக்கைகளோ இடம் பெற்றதும் அது எந்தளவு முக்கியத்துவமிக்க செய்தியாக ஆக்கப்படுகிறது என்பதும், அதற்கு



எதிராக தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் எந்தளவு எதிர் நடவடிக்கைகளும், கண்டனங்களும் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன என்பதற்கும் சம்பவங்கள் ஏராளம் உள்ளன.

தமிழர்களின் தலைவிதி இப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட அவர்கள் கொல்லப்படவே வேண்டும் என்பது தான். இதனால் தான் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் தேவைப்பட்டதும், ஆரம்பிக்கப்பட்டதும். மேலும் நிமலராஜனின் படுகொலையை எதிர்த்து மேற்கொள்ளப்பட்ட இத்தகைய நடவடிக்கைக்கு இன்னுமொரு காரணம் அவர் சிங்கள மற்றும் சர்வதேச ஊடகங்களுக்கு அறிமுகமானவர் என்பதும் தான். வெறும் தமிழ் தெரிந்த தமிழ் பத்திரிகையோடு மட்டுமே தொழில் புரிகின்ற பத்திரிகையாளர்ளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை எதிர்க்க நாதியில்லாத நிலையே இதுவரை இருந்து வருகிறது.

தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் ஆரம்பித்ததன் பின்னர் தான் தமிழ் ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் வெளிக் கொணரப்படுகின்றன.

சரிநிகரில் பணியாற்றிய குகமூர்த்தி 1991இல் பிரேமதாச அரசாங்கத்தால் காணாமல் ஆக்கப்பட்ட போது அதற்காகக் குரல்கொடுக்க சரிநிகர் மட்டுமே இருந்தது என்பதையும் நாங்கள் நினைத்துப் பார்க்கலாம்.

எந்தவொரு அடக்குமுறை ஆதிக்க அரச இயந்திரமும் தனது அடக்குமுறைகளை செவ்வனே நிறைவேற்ற தொடர்பூடகங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க சகல வித உபாயங்களையும் கையாள்வது வழக்கமே. அவ்வாறான நடவடிக்கையின் அங்கமாகவே படுகொலைகளையும் பார்க்கவேண்டியிருக்கிறது.

பிரேமதாசா காலத்தில் சிங்கள இளைஞர்களின் மீதான நரவேட்டையை நடத்துவதற்கு ஒட்டுமொத்த தொடர்பூடகங்களுமே தடையாக இருப்பதைக் கண்டு அவ்வாறானவர்களைத் தேடித்தேடி வேட்டையாடியது பிரேமதாச அரசு. தொடர்பூடகங்களை நசுக்குவதில் இலங்கையின் வரலாற்றில் அதற்கு முன்னர் இருந்த அனைவரையும் மிஞ்சினார் பிரேமதாச. இன்று சந்திரிகா பிரேமதாசவையும் மிஞ்சி விட்டார்.

இன்றைய நிலையில் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளின் ஒரு அங்கமாகவே தமிழ் தொடர்பூடகங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை அரசு திட்டமிட்டு மேற்கொண்டு வருகிறது. பேரினவாதமயப்பட்டு வருகின்ற சிவில் சமூக அமைப்பில் தமிழ் தொடர்பூடகங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைகள் குறித்து சக சிங்கள பத்திரிகை உலகம் கூட அலட்டிக் கொள்ளாதது ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கு இல்லைத் தான்.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகளை தடை செய்கின்ற வர்த்தமானி அறிவித்தலை அரசு அறிவித்த போது சிங்களப் பேரினவாத இயக்கங்கள் மாத்திரமல்ல பல சிங்களத் தொடர்பூடகங்கள் கூட அதனால் மகிழ்ந்தன. அந்த மகிழ்ச்சியில் சொக்கிப் போயிருந்த நிலையில் கூடவே அந்த தடை அறிவிப்பு சரத்துகளில் சில கருத்துச்சுதந்திரத்தைப் பறிக்கின்ற ஏற்பாடுகள் இருந்ததைக் கூட கவனிக்கவில்லை. சரிநிகர் உள்ளிட்ட சில தமிழ் பத்திரிகைகள் தான் அதனை சுட்டிக் காட்டியிருந்தன. அதன் பின்னர் சில நாட்கள் கடந்து தான் சுதந்திர பத்திரிகை இயக்கம் உள்ளிட்ட பல்வேறு மனித உரிமைகள் இயக்கங்களும் கண்டனங்களை வெளியிட்டன. ஆனால் ஒன்றும் பண்ணமுடியவில்லை. ஏனென்றால் அறிக்கை விட்டால் தங்கள் கடமை முடிந்து விடும் என்கிற ஒரு மரபு செயற்பாட்டாளர்கள் என்று சொல்லிக் கொள்ளும் பல இயக்கங்கள் மத்தியில் வந்து விட்டது.

அதன் பின்னர் தான் அவசரகால சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் மட்டுமல்ல, இந்த புலித்தடைச் சட்டத்தைக் கூட அரசு பிரயோகித்து அதன் பின்னர் அனைத்து கருத்து வெளிப்பாட்டு உரிமைகளையும் பறித்தது. அரசு நேரடியாக செய்ய இருந்ததை ஏனைய சக்திகள் செய்தால் அத்தகைய சக்திகளை பாதுகாப்பது அரசின் கடமையாகி விடுகின்றது. அந்த வகையில் ஈ.பி.டி.பி.க்கு அரசு நன்றிக் கடன்பட்டிருக்கிறது.

செய்தித் தணிக்கையைக் கொண்டு வந்தது. செய்தித் தணிக்கை அதிகாரியாக இராணுவ அதிகாரியை நியமித்தது. மீறியதாக குற்றம் சாட்டி, உதயன், இரிதா பெரமுன, சண்டே லீடர் போன்ற பத்திரிகைகளை மூடியது. சர்வதேச செய்தி ஊடகங்கள் மீதும் தணிக்கையைப் பிரயோகித்தது. அரசை விமர்சித்து எழுதிய பலருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தது, கைது செய்து சிறையிலடைத்தது. அரச படைகளைக் கொண்டு தாக்கியது. சிலர் கொல்லப்பட்டார்கள். (பார்க்க பட்டியல்)

இவற்றுக்கு எதிரான அமைதியான ஊர்வலங்கள், கண்டன ஆர்ப்பாட்டங்கள் என்பனவற்றை நசுக்கியது. இது வரை கால இலங்கை வரலாற்றில் எந்த ஒரு ஆட்சியிலும் நடக்காத அளவுக்கு தொடர்பூடகங்கள் மீதான அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. எந்த பிரேமதாசவை விமர்சிக்கவும் தூக்கியெறியவும் பிரேமதாசவால் மேற்கொள்ளப்பட்ட தொடர்பூடக சுதந்திரப் பறிப்பை இந்த பொ.ஐ.மு. பிரச்சாரமாக பாவித்து ஆட்சியில் அமர்ந்ததோ அதே பொ.ஐ.மு. தொடர்பூடக சுதந்திரப் பறிப்பில் வரலாற்று சாதனையைப் படைத்தது.

இறுதியாக நடந்து முடிந்த 11வது பொதுத் தேர்தலின் போது பொ.ஐ.மு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தொடர்பூடக சுதந்திரம் பற்றி எதுவுமே கூறாத அளவுக்கு அது கருத்துச் சுதந்திரம் குறித்து பேச சகல வித தார்மீகத்தையும் இழந்து விட்டிருந்தது. (பொ.ஐ.மு அரசாங்க காலத்தில் நடந்த சகல கருத்துச் சுதந்திர பறிப்புகளையும் கீழ் குறிப்பிட்ட இணையத் தளங்களில் விலாவாரியாக பட்டியல்கள் இடப்பட்டிருக்கின்றன.)

இவ்வருடத் தொடக்கத்திலிருந்து ஒக்டோபர் வரை 36 தொடர்பூடகவியலாளர்கள் உலகம் முழுவதும் கொல்லப்பட்டுள்ளதாக சர்வதேச பத்திரிகையாளர் நிறுவனம் (IPI-International Press Institute) எனும் சுவிஸில் இயங்கும் அமைப்பு தெரிவிக்கிறது. 1999இல் மொத்தம் 50 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 1998இல் 31பேர் கொல்லப்பட்டிருந்தனர். 1997 இல் 27 பேர் கொல்லப்பட்டிருந்தனர். உலகப் பத்திரிகை நிறுவனம் (World Association of Press) எனும் நிறுவனம் வெளியிட்டுள்ள வருடாந்த அறிக்கையில் சென்ற வருடம் உலகம் முழுவதும் கொல்லப்பட்ட பத்திரிகையாளர்களின் எண்ணிக்கை 54 என்கிறது.

பத்திரிகையாளர்களை பாதுகாப்பதற்கான குழு (Committee to Protect Journalists - CPJ) எனும் சர்வதேச அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் இதுவரை இலங்கையில் இடம் பெற்றுள்ள பத்திரிகையாளர்



களுக்கு எதிரான நடவடிக்கைகளின் பட்டியலையே இட்டிருக்கிறது.

பொ.ஐ.மு வின் காட்டாட்சி போய் பேயாட்சி நிறுவப்பட்டுள்ள நிலையில் அடக்குமுறைகள் தீவிரப்படுத்தப்பட்டு வரும் நிலையில் இனி நிலைமை மேலும் மோசமடைவதற்கான வாய்ப்புகளே தெரிகின்றன. எனவே இன்னும் பல நிமலராஜன்களும், ரோகண குமாரக்களும் கொல்லப்படத் தான் போகிறார்கள். நிமலராஜன், இனி பொ.ஐ.மு. அரசு எடுக்கப்போகும் நடவடிக்கைக்கான குறியீட்டு எச்சரிக்கை மட்டுமே. இந்த நிலையில் தான் சிங்கள தமிழ் ஊடகவியலாளர்களின் ஒன்றிணைந்த செயல்பாடுகளின் அவசியம் கண்டிப்பாகின்றது.

ஆக முரண்பட்டு அழிவோமா, சேர்ந்து போராடி வெல்வோமா என்கிற நிலைப்பாட்டை அனைவருமாக எடுப்போமாக.


| ஆண்டு | பெயர் | தொடர்பூடகம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1987 | என்.கருணபால | ரூபவாஹினி | இறந்த நால்வரின் சடலங்களும் கொல்லப்பட்ட நிலையில் ஒன்றாகக் கண்டெடுக்கப்பட்டன. |
| 1987 | காமினி ஜயந்த | ரூபவாஹினி | இறந்த நால்வரின் சடலங்களும் கொல்லப்பட்ட நிலையில் ஒன்றாகக் கண்டெடுக்கப்பட்டன. |
| 1987 | நிலந்த குணவர்தன | ரூபவாஹினி | இறந்த நால்வரின் சடலங்களும் கொல்லப்பட்ட நிலையில் ஒன்றாகக் கண்டெடுக்கப்பட்டன. |
| 1987 | ஏ.எம்.ஆர்.அத்தநாயக்க | ரூபவாஹினி | இறந்த நால்வரின் சடலங்களும் கொல்லப்பட்ட நிலையில் ஒன்றாகக் கண்டெடுக்கப்பட்டன. |
| 1989 மே | வீ.மகாலிங்கம் | தி ஐலண்ட் | மே மாதம் இந்தியப் படையினரால் கொல்லப்பட்டார். |
| 1989 யூலை 23 | குருகே தேவிஸ் | எஸ்.எல்.பி.சி. | ஜே.வி.பியினரால் கொல்லப்பட்டார் என கூறப்படுகிறது. |
| 1989 யூலை 29 | பிரேமகீர்த்தி டி அல்விஸ் | ரூபவாஹினி | ஜே.வி.பியினரால் கொல்லப்பட்டதாக பிரச்சாரம் செய்யப்பட்ட போதும் பிரேமதாச அரசாங்கத்தினரால் கொல்லப்பட்டதாக நம்பப்படுகிறது. |
| 1989 ஓகஸ்ட் 13 | குலசிறி அமரதுங்க | ரூபவாஹினி | ஜே.வி.பியினரால் கொல்லப்பட்டதாக பிரச்சாரம் செய்யப்பட்ட போதும் பிரேமதாச அரசாங்கத்தினரால் கொல்லப்பட்டதாக நம்பப்படுகிறது |
| 1990 பெப்ரவரி 18 | ரிச்சர்ட் டி சொய்ஸா | ரூபவாஹினி | ஜே.வி.பியினரால் கொல்லப்பட்டதாக பிரச்சாரம் செய்யப்பட்ட போதும் பிரேமதாச அரசாங்கத்தினரால் கொல்லப்பட்டதாக உறுதி செய்யப்பட்டது. |
| 1991 ஒக்டோபர் | குகமூர்த்தி | சரிநிகர். எஸ்.எல்.பி.சி | கொழும்பில் இவரது மோட்டார் பைக் மாத்திரம் கண்டெடுக்கப்பட்டது. பிரேமதாச அரசாங்கப் படையினரால் கொல்லப்பட்டதாக நம்பப்படுகிறது. |
| 1995 | மூன்று பேர் | லேக் ஹவுஸ் | செய்தி சேகரிப்பதற்காக யாழ்ப்பாணத்திற்கு விமானத்தில் சென்றவர்கள் விமானம் தாக்கப்பட்டதில் கொல்லப்பட்டனர். |
| 1999 செப்டம்பர் 07 | ரோகண குமார | சட்டன | ஜனாதிபதி ஆலோசகர் சனத் குணதிலக்கவின் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. |
| 1999 நவம்பர் 02 | அற்புதராசா நடராசா | தினமுரசு | ஈ.பி.டி.பி எம்பியான இவர் பட்டப்பகலில் கொல்லப்பட்டார். |
| 1999 டிசம்பர் 18 | இந்திக பதினிவாசன் | எம்.டீ.வி. | சந்திரிகாவின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில். |
| 1999 டிசம்பர் 18 | அனுர பிரியந்த குரே | ஐ.டீ.என். | சந்திரிகாவின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில். |
| 1999 டிசம்பர் 31 | வஸ்தியன் அந்தனி மரியதாஸ் | எஸ்.எல்.பி.சி. | செய்தி சேகரிப்பின் போது இனந்தெரியான நபர்களால் சுடப்பட்டார். |
| 2000 ஒக்டோபர் 19 | மயில்வானம் நிமலராஜன் | பி.பி.சி.. ராவய | யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி. யினரால் கொல்லப்பட்டதாக நம்பப்படுகிறது. |

நன்றி - நூலகத்திட்டம்



# சந்திரசேகரன் கைது:

# தலையை விட்டு வாலைப் பிடித்த கதை!



பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் நடைபெற்ற படுகொலைச் சம்பவங்களிற்கு காரண-மானவர்கள் அவ்வூர் கிராமவாசிகளே என்ற கதை இப்போது விசாரணைகள் மற்றும் நேரடித் தகவல்களினால் பிசுபிசுத்து விட்டது. முகாமில் காவலுக்கு நிறுத்தப்பட்ட பொலிசாரே இப்படுகொலைகளைத் திட்டமிட்டுச் செய்திருக்கிறார்கள் என்ற தகவல்கள் இப்போது வந்துகொண்டி-ருக்கின்றன. ஆயினும், இப்படுகொலைகள் வெறும் பொலிசாரின் நடவடிக்கைகள் மட்டுமல்ல, இதற்குப் பின்னால் ஆளும் கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதிகளும் சம்பந்தப்பட்டிருக்கின்றார்கள் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது.

புனர்வாழ்வு முகாம் படுகொலைகட்கு முன்பாகவும் பிறகும், ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள் ஆளுங்கட்சி சுவரொட்டிகளின் பின்புறத்தில் எழுதப்-பட்டிருந்தன என்றும் இவற்றில் சிலவற்றில் ஜனாதிபதியின் படம் பொறிக்கப்பட்டு பொதுத் தேர்தல் காலத்தில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் என்றும் தெரிய வந்துள்ளது.

படுகொலைகள் தொடர்பான நீதியான விசாரணையை நடாத்த விரும்பாமல் விசாரணையைத் திசைதிருப்பும் விதத்தில் புதுப்புது கதைகளைக் கட்டி விடுகின்றனர் இரகசிய பொலிஸ் விசாரணையாளர்கள் என்று ஆதங்கப்பட்டு இப்பத்தியாளருடன் பேசினார் மலையக நண்பர் ஒருவர். முகாமுக்குள் திட்டமிட்டு புலிகள் தமது ஆட்களை அனுப்பி இப்படியான ஒரு சம்பவத்தை உருவாக்கியிருக்கிறார்கள் என்றும் ஒரு கதையைச் சிருஷ்டித்துள்ளனர். இந்தச் சி.ஐ.டி. விசாரணையாளர்கள். கொலையில் நேரடியாகச் சம்பந்தப்பட்டு இளைஞர்களை வெட்டியும், கோடாரியால் கொத்தியும் மொங்கான் போன்றவற்றால் தலைகளை உடைத்துச் சப்பளித்தும் கொலை செய்யும் போது அங்கு துப்பாக்கிகளை ஏந்தியபடி சுட்டுக் கொண்டிருந்த பொலிசாரின் குண்டுகள் எதற்குக் குறி வைத்துச் சுடப்பட்டன? கைதிகளோ அல்லது தாக்குதலில் ஈடுபட்டதாக பொலிசார் கூறும் சிவிலியன்களோ பொலிசாரைத் தாக்கிய எந்தத் தடயங்களும் இல்லாதிருப்பதும் ஒரு பொலிசார் கூட தாக்கப்படடிருக்காமையும் மிகத் தெளிவாக இந்தச் சம்பவத்தில் பொலிசாருக்குள்ள சம்பந்தத்தை வெளிக்-காட்டுகின்றன.

இந்தப் படுகொலைச் சம்பவத்தைத்தான் அரசு விசாரணை அது இதென்று கதையளந்து, உண்மைக் குற்றவாளிகளை தப்பிக்கொள்ள வாய்ப்பளித்ததென்றால், அதைத் தொடர்ந்த கடையெரிப்பு கொலை போன்றவற்றிலும், அது அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. சந்திரசேகரன் பா.உ. தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தை குழப்ப வந்தவர்கள் நடந்து கொண்ட முறை காரணமாக எழுந்த சர்ச்சையை அடக்க துப்பாக்கிப் பிரயோகம் செய்த அரச படைத்தரப்பினர். இருபத்தி எட்டுப் பேர் கொல்லப்பட்டும், இன்னும் இருபது பேர் காயமடைந்தும் போன அந்தச் சமயத்தில் ஒரு துப்பாக்கிக் குண்டைக் கூடத் தாக்கியவர்கள் மீது பாவிக்காதது ஏன்?

நுவரெலியா, பதுளை மாவட்டங்களில் ஊரடங்கு போட்டு நிலைமையை கட்டுப்-படுத்துவதாக அரசாங்கம் அறிவித்த போதும், அதன் பிறகு தொடர்ச்சியான கடையெரிப்புக்கள் நடந்துள்ளன. நிலைமையைக் கட்டுக்குள் கொணர முயற்சி எடுக்க வேண்டிய அரச பாதுகாப்புப் படைகள் பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான சந்திரசேகரனை கைது செய்து வந்து நாலாம் மாடியில் வைத்திருக்கின்றன. நடந்த சம்பவத்தை அடுத்து வன்முறை பரவுவதை நிறுத்துமாறு கோரி மக்களிடம் அறிக்கை மூலம் கேட்டுக் கொண்ட சந்திரசேகரனை சிறையில் விசாரணைக்காகக் கொண்டு வந்த சி.ஐ.டியினர், கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் பற்றிய விசாரணைக்கு புதுப்புதுக் கதைகளைச் சோடிப்பதிலேயே கவனமாக இருக்கின்றனர்.

சிங்கள வீரவிதானவின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், இனத்துவேசத்தையும் இன வன்முறையையும் தூண்டி விடுகின்ற தன்மையைக் கொண்டதாக இருந்தும் கூட அவர்கள் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காத அரசாங்கம் அதுவும், முன்பொருமுறை கொழும்பிலுள்ள இ.தொ.கா காரியாலயத்தில் பறந்து கொண்டிருந்த கொடியைப் பிடுங்கி வீசிவிட்டுச் சென்றவர்களின் அடையாளம் பற்றிய முழுமையான தகவல் அறிக்கைகள் இருந்தும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காத அரசாங்கம் சந்திரசேகரன் அவர்களை வேகமாகக் கைது செய்திருக்கிறது.

ஒரு பாராளுமன்ற உறுப்பினர்க்குரிய அரவது சிறப்புரிமையையோ, அவர் வன்முறையற்ற ஒரு கண்டன ஊர்வல நடவடிக்கையை மட்டுமே நடாத்தினார் என்பதையோ கணக்கில் எடுக்காமல் அவரைக் கைது செய்திருக்கிறது இந்த அரசாங்கம்.

**இனவாத அரசு ஏற்படுத்தும் அரசியல் சூழல் மிகத் தெளிவான தூரநோக்குடைய பொறுப்பான தலைமைத்துவத்தை மலையக மக்களுக்கு வழங்க வேண்டிய பொறுப்பை தலைமைகளிடம் கோரி நிற்கிறது. இதை அவர்கள் அரசுடன் கூட்டுச் சேர்ந்து நின்று கடந்த காலங்களைப் போல சாதித்துவிட முடியும் என்று நினைப்பார்களானால், அது நீண்ட காலம் நடக்கப் போவதில்லை. புதிய இளம் சந்ததி - இனவாத நஞ்சினால் நேரடியாக பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சந்ததி– இதற்கெதிரான போராட்டத்தை சமாதான வழிகளில் செய்ய முடியாது என்ற முடிவு நோக்கித் தள்ளப்பட்டுக் கொண்டு வருகிறது.**

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு பிரதிநிதிக்கே இந்தக் கதி என்றால், மலையகத்தில் வாழ்கின்ற லட்சக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களின் நிலைமை என்னாவது?

சந்திரசேகரன் கைது தொடர்பாக எதிர்க்கட்சியும் பிற தமிழ்க்கட்சிகளும் கருத்துத் தெரிவித்த போதும், அரசில் அங்கம் வகிக்கும் இ.தொ.காவின் வாய் இதை எழுதிக்கொண்டிருக்கும் வரை மௌனமாகவே இருக்கிறது.

மலையக மக்களை, தொழிற்சங்கப் போராட்டம் அல்லாத, அவர்களது வாழ்வுப் பிரச்சினைகளில் ஒன்றான இன ஒடுக்கு முறைக்கெதிரான ஒரு அரசியல் நடவடிக்-கைக்கு தலைமை தாங்க சந்திரசேகரன் அவர்கள் முன்வந்ததும், அதில் பெருமளவுக்கு மக்கள் கலந்து கொண்டதும், இ.தொ.காவுக்கு பொறாமையாக இருந்திருக்கலாம். அல்லது அரசாங்கத்தின் மடியில் படுத்திருந்தபடி அதற்கு எதிராக செயற்பட முடியாத அவர்கள் 'செஞ்சோற்றுக்கடன்' காரணமான கையா-லாகாத்தனம் இந்த மௌனத்திற்குக் காரணமாக இருந்திருக்கலாம்.

முன்பு சந்திரசேகரன் அவர்கள் கைது செய்யப்பட்டிருந்த காலத்திலும் அவரை விடுவிப்பதற்கு ஏந்த முயற்சியையும் இ.தொ.கா எடுக்கவில்லை என்பது இவ்விடத்தில் நாம் ஞாபக மூட்டிக்கொள்ள வேண்டிய ஒரு விடயமாகும்.

இந்த உள்வீட்டுச் சண்டையும் பொறா-மையும் மலையக மக்களை அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் அனாதைகளாக்குவதில் பெரும் பங்கு வகித்து வந்திருக்கின்றன. இப்போது அவர்களை புவியியல் ரீதியில் அனாதைகள் ஆக்கும் மட்டத்திற்கு இது போயுள்ளது மிகுந்த விசனத்திற்கும் கண்டனத்திற்கும் உரியதாகும்.

மலையக மக்கள் மீதான பொலிஸ் காடைத்தனமும், அடக்குமுறையும் இன-ரீதியான வன்முறைகட்கு சார்பாகச் செயற்படும் போக்கும் கடந்த சில வருடங்களாக நடந்து கொண்டு தான் இருக்கின்றன. புலிகளுடன் தொடர்பு என்ற போர்வையில் பல மலையக இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியல்களில் காலவரையறை அற்று வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அண்மையில் பிந்துனுவேவ்யில் கொல்லப்பட்ட மலையகத்தைச் சேர்ந்தவரான சந்தனம் செல்வராசாவின் இறுதிக்கிரிகையைத் தொடர்ந்து மலையகம் முழுவதும் அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தால். கடையடைப்பு, சத்தியாக்கிரகம், ஆர்ப்பாட்டம் என்பன பொலிசாரினால் தடுக்கப்பட்டுள்ளன. சமாதான வழிகளில் தமது உணர்வுகளையும், எதிர்ப்-புகளையும் வெளிப்படுத்த அனுமதிக்காத பொலிசாரின் நடடிக்கை பல சந்தர்ப்பங்களில் அத்துமீறிய நடவடிக்கைகட்கு இட்டுச் சென்றுள்ளது. கடைகளுக்கு தீவைப்பு, லொறி எரிப்பு போன்ற பல சம்பவங்கள் அங்கு நடந்துள்ளன. இரு இனங்களை சேர்ந்தவர்-களதும் உடமைகள் இவ்வாறு சேதமாக்கப்-பட்ட போதும் பொலிசாரின் சார்பு நிலை தெளிவாக சிங்கள இனவாதிகளது பக்கமே இருந்தது என்கிறார் அங்கிருந்து தொடர்பு-கொண்ட ஒரு பத்திரிகையாளர்.

சந்திரசேகரன் அவர்களது கைதும், விசாரணையும் இத்தகைய ஒரு ஒரு தலைப்பட்சமான, பாரபட்சமான நடவடிக்கை என்பதில் சந்தேகம் இல்லை. இந்தச் செயலை ஐ.தே.க செயலாளர் கரு ஜயசூரிய அவர்களே வெளிப்படையாக பக்கச்சார்பான நடவடிக்கை என்று கூறிக் கண்டித்துள்ளார்.

சமாதான வழிகளில் தமது எதிர்ப்பு-களையும், உணர்வுகளையும் வெளிக்காட்டு-வதை அனுமதிக்காமல் நசுக்குகிற ஒவ்வொரு கணமும் இந்த அரசு, ஒரு வன்முறை அரசியலுக்கான வித்துக்கள் வளர்வதற்கான உரத்தை வீசிக் கொண்டிருக்கிறது என்பதே அர்த்தம். மலையகத்தை ஆயுதமேந்திய இளைஞர்களின் போராட்டக் களமாக மாற்றுவதற்கான ஒரு நிலைமையையே இந்தப் போக்கு உருவாக்கும். மலையகத் தலைமை மலையக மக்களின் அரசியல் பிரச்சினைகளைவிட அவர்களது சொந்த நலன்களை மட்டும் கவனிப்பவர்களாக இருப்பார்களே் ஆனால் விரைவிலேயே அவர்களது தலைமை துாக்கி எறியப்பட்டு விடுவதற்கான வாய்ப்பு தோன்றவே செய்யும்.

இனவாத அரசு ஏற்படுத்தும் அரசியல் சூழல் மிகத் தெளிவான துாரநோக்குடைய பொறுப்பான தலைமைத்துவத்தை மலையக மக்களுக்கு வழங்க வேண்டிய பொறுப்பை தலைமைகளிடம் கோரி நிற்கிறது. இதை அவர்கள் அரசுடன் கூட்டுச் சேர்ந்து நின்று கடந்த காலங்களைப் போல சாதித்துவிட முடியும் என்று நினைப்பார்களானால், அது நீண்ட காலம் நடக்கப் போவதில்லை. புதிய இளம் சந்ததி - இனவாத நஞ்சினால் நேரடியாக பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சந்ததி- இதற்கெதிரான போராட்டத்தை சமாதான வழிகளில் செய்ய முடியாது என்ற முடிவு நோக்கித் தள்ளப்பட்டுக் கொண்டு வருகிறது. மலையகம் இன்னொரு வடக்கு கிழக்காக மாறாமல் இருக்க வேண்டுமானால், அதற்கான பொறுப்பை எடுத்து செயற்பட வேண்டியவர்கள் முதலில் மலையகத் தலைமைகள். அவர்களது ஒற்றுமையான அரசியல் அக்கறை மிக்க செயற்பாடு மூலமே அரசின் இனவாத அரசியலை கட்டுப்பாட்டினுள் வைத்திருக்க முடியும்.

[illegible]:

நன்றி - நூலகத்திட்டம்



# வானம் தெரியும் கூரை! வளமே இல்லா வாழ்க்கை!! என்று தீருமோ இவை!!!

## வடக்கு முஸ்லிம் உரிமைக்கான அமைப்பின் தலைவர் பி.ஏ.எஸ்.சுப்பியான் பேசுகிறார்

~ நேர்காணல் : எம்.ஏ.எஸ்.எஸ்

**1994ம் ஆண்டு தேர்தலை பகிஷ்கரித்த உங்கள் அமைப்பு இலங்கையின் 11வது பாராளுமன்றத் தேர்தலில் ஏன் இறங்கினீர்கள்?**

1994ல் யாழ் தேர்தல் மாவட்டத்தில் மக்கள் வாக்களிப்பதற்கான ஜனநாயக உரிமைகள் முற்றாக மறுக்கப்பட்ட நிலை இருந்தது. அரசாங்கக் கட்டுப்பாட்டிலுள்ள தீவுப்பகுதியில் சில இடங்களிலேயே மக்கள் வாக்களிக்கும் நிலை இருந்தது. எனவே அந்த ஜனநாயக விரோதத் தேர்தலை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இத்தேர்தலில் பங்குபற்றி வெற்றியைத் தட்டிக் கொண்டு செல்வதானது தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகம் என்றே கருதினோம். எனவே தான் அத்தேர்தலை பகிஷ்கரிப்பது என்று அன்று முடிவெடுத்தோம். மேலும் 1994ல் பொதுத் தேர்தல் இடம் பெற்ற பொழுது யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்டு நான்கு வருடங்கள் கழிந்திருந்தன. எனினும், விரைவில் மீண்டும் எமது பிரதேசங்களுக்கு சென்று விடமுடியும் என்று நம்பிக்கையில் கஷ்டங்களையும், துன்பங்களையும் தாங்கிக் கொண்டு மீண்டும் தமிழ் மக்களுடன் இணைந்து ஒற்றுமையாக வாழும் நாள் விரைவில் வரும் என்று எதிர்பார்த்தோம். ஆனால், 2000ம் ஆண்டாகியும் அந்த நிலை இன்னும் எமக்கு ஏற்படவில்லை.

அரசியல் குறிக்கோளற்ற அமைப்பாக செயல்பட்டு வந்த இவ்வமைப்பு தனது செயல் திட்டங்களை முன்னெடுத்து செல்கின்ற பொழுது அரசியல் பலம் இல்லாததினால் சில நேரங்களில் ஒரு சில முட்டுக்கட்டைகளை எதிர்நோக்கியுமுள்ளது.

இதனால் இவ்வமைப்பானது கடந்த பெப்ரவரி மாதம் வடமாகாண முஸ்லிம்கள் தேர்தலை எவ்வாறு எதிர்நோக்குவது" என்ற கருத்துக்கணிப்பை நடத்தியது.

இக்கருத்துக்கணிப்பின் பிரகாரம் 78 வீதமானோர் வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு பாராளுமன்றத் தேர்தலில் சுயேட்சைக் குழுவை நிறுத்த வேண்டும் என்று விரும்பினர். இதனடிப்படையிலேயே வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு யாழ் / கிளிநொச்சி மாவட்டத்தில் சுயேட்சைக்குழுவை நிறுத்துவது என்ற முடிவை எடுத்தது.

உண்மையில் இப்பாராளுமன்ற பிரதிநிதித்துவம் மூலம் எல்லாவற்றையும் சாதித்து விடலாம் என்று நாங்கள் கருதியிருக்கவில்லை. எங்களுக்குத் தெரியும் இதற்கு முன்பு சூராதி சூரர்களான தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தபொழுது தான் தனிச் சிங்களச்சட்டம் முதல் தமிழ் பேசும் மக்களை இரண்டாம் தரப்பிரஜைகளாக்கும் அரசியல் அமைப்புக்கள் வரை கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டன.

நாங்கள் பாராளுமன்றத்தை நம்பவில்லை. பயன்படுத்தவே முயற்சித்தோம். பாராளுமன்ற வீர முழக்கங்களால் உரிமைகள் கிடைக்காது என்பது நன்கு தெரியும். வெகுஜனப் போராட்டங்கள் மூலம் அரசுக்கு ஏற்படுத்தும் நிர்ப்பந்தங்களும், நெருக்கடிகளுமே நியாயமான தீர்வொன்றைக் காணக்கூடிய முன்னெடுப்புகளாகும். இப்பணியை ஏற்கெனவே செய்து வந்திருக்கின்றோம். உ-ம். உலர் உணவு நிவாரணப்பிரச்சினையை பாராளுமன்ற உறுப்பினர்களாலோ அமைச்சர்களாலோ தீர்க்க முடியாமல் போய்விட்டது. நாம் செய்துவரும் மக்கள் போராட்டங்களை உலகின் கவனத்திற்கு கொண்டு செல்ல பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பயன்படுத்தலாம் என்று தான் நம்பினோம்.

**யாழ். முஸ்லிம் மக்களின் வாக்களிப்பு NMRO விற்கு எப்படி இருந்தது?**

இத்தேர்தலில் யாழ் தேர்தல் மாவட்ட முஸ்லிம் மக்களின் வாக்குப்பலமும் பிரயோகிக்கப்பட்ட முறையையும் நோக்கும்போது வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பின் அணி வீறுநடைபோட்டு முன்னணியில் வந்திருப்பதனை யாரும் மறுத்துவிட முடியாது. இத்தேர்தலின் முடிவுகள் NMRO வின் இருப்பை மேலும் பலப்படுத்தியுள்ளது. அதாவது உண்மையில் இத்தேர்தலில் மொத்தமாகவே யாழ். தேர்தல் மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம்களில் செல்லுபடியான வாக்களித்தோர் 3603 நபர்களாகும். இதில் எமது சுயேட்சைக் குழுவிற்கு விழுந்த மொத்த வாக்குகள் 2234 ஆகும். ஏனைய வாக்குகள் போட்டியிட்ட மற்றைய கட்சிகளுக்குப் பிரிந்து சென்றன. அதாவது 75சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளை நாங்களே பெற்றுள்ளோம்.

**நீங்கள் எதிர்பார்த்தபடி வெற்றிவாய்ப்புக் கிடைக்காததற்குக் காரணம்?**

இத்தேர்தலில் யாழ் தேர்தல் மாவட்டத்தில் 1,19,065 வாக்காளர்கள் வாக்களித்தே தங்களது பிரதிநிதிகளைத் தெரிவு செய்துள்ளார்கள் என்பது தேர்தல் ஆணையாளரின் முடிவாகும். எனவே இவ்வாறான ஓர் நிலையில் எமக்கான குறைந்த வாக்குப்பலத்துடன் நாம் வெற்றி பெற முடியாதென்பது எமக்கு ஏற்கெனவே தெரிந்ததே. நாங்கள் எங்களது பிரச்சாரக் கூட்டங்களின்போது மிகத் தெளிவாக இதனை முன்வைத்தோம். அதாவது "தனித்து சுயேட்சையாக வெற்றி வாய்ப்பின்னை பெறும் சூழ்நிலையில்லாத நிலையில் எமது வாக்குப்பலத்தினை தனித்துவமாக எடுத்துக்காட்டி இதன் மூலம் எமது மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணியைத் தொடர்வோம்." என்று கூறியிருந்தோம். அதே நேரத்தில் சிலர் கூறுவதைப் போன்று யாழ் முஸ்லிம்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து வாக்களித்திருந்தால் ஒரு பிரதிநிதியைப் பெற்றுக்கொண்டிருக்க முடியும் என்ற வாதமானது தேர்தல் முடிவுகள் தொடர்பான



விடிவு தான் வரவில்லை!
கிடுகு தானும் வராதோ?

படம்:முனாப்தீன்

விளக்கமின்மையால் கூறமுற்படுவதாக இருக்கலாம்.

ஏனெனில் யாழ்ப்பாணத்தில் ஒன்பதாவது ஆசனத்தைப் பெற்றுக் கொண்ட அ.இ.த. காங்கிரசுக்குக் கிடைத்த மொத்த வாக்குகள் 10,648ஆகும். ஆனால், யாழ் முஸ்லிம்களிடத்தில் மொத்தமாகவே இத்தொகைக்கு நிகரான வாக்குப்பலம் இல்லை. இந்நிலையில் எப்படி எல்லோரும் ஒற்றுமையாக செயல்பட்டிருந்தால் ஒரு பிரதிநிதியைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற வாதத்தை ஏற்றுக் கொள்ள முடியும்.

யாழ்ப்பாணத்தில் எங்களுடைய பிரச்சாரப் பணிகள் போதாது என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதாகும். யாழ்ப்பாணத்தில் எங்களால் சாத்தியமான அளவு நாங்கள் எடுத்த முயற்சியின் பயனாக எங்களுக்கு 241 தமிழ் மக்களின் வாக்குகள் கிடைத்திருந்தன. அவர்களுக்கு எமது மனப்பூர்வமான நன்றிகளை சரிநிகர் மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தே.ஐ.முன்னணி (நுஆ) ஈ.பி.டி.பி. போன்ற கட்சிகள் முஸ்லிம் மக்களிடத்தில் குறைந்தளவு வாக்குகளையே பெற்றதற்கான காரணம் என்னவென்று நினைக்கின்றீர்கள்?**

தே.ஐ.மு.(நுஆ), ஈ.பி.டி.பி. முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி போன்ற கட்சிள் எடுத்த வாக்கு வீதத்தினை பார்க்கும் போது இந்தக் கட்சிகள் தேர்தலுக்கு முன்னரே மக்களிடையே செல்வாக்கினை இழந்திருந்தன. இக்கட்சிகள் தங்களது வேலைத்திட்டங்களைத் திட்டமிட்டு நடத்தவுமில்லை. சிறந்த அமைப்பாளர்களைக் கொண்டிருக்கவுமில்லை. மக்கள் தங்கள் குறைகளை தேவைகளை முன்வைத்தபொழுது அதற்குரிய முக்கியத்துவத்தைக் கொடுக்கவுமில்லை. மக்களை உள்ளடக்கிய போராட்டங்கள் எதனையும் முன்னெடுத்துச் செல்லவுமில்லை. இவையனைத்தையும் அவர்கள் முன்நிறுத்த வேட்பாளர்கள் பற்றி மக்களுக்கிருந்த நம்பிக்கையின் வெளிப்பாடே அவர்களுக்கு கிடைத்த தோல்வியாகும்.


**தங்களது அடுத்த கட்ட முயற்சி என்ன?**

இத்தேர்தல் மூலமாக மக்கள் மீண்டும் வடக்கு முஸ்லிம் உரிமைக்களை NMRO அமைப்பிற்கு தங்களது ஆணையைத் தந்திருக்கிறார்கள். தற்போது யாழ் மாவட்ட முஸ்லிம் வாக்காளர்களைப் பொறுத்தவரையில் சென்ற பாராளுமன்றத்தில் பெயருக்கு இருந்த பிரதிநிதித்துவமும் இப்பாராளுமன்றத்தில் கிடைக்கவில்லை.

இம் மக்கள் தந்திருக்கும் வாக்குப்பலத்தக் கொண்டு அதாவது இந்த வாக்கு வங்கியைக் கொண்டு ஏனைய அரசியல் சக்தியின் மூலம் எமது மக்களுக்கு ஆற்ற வேண்டிய சேவைகளைச் செய்து பாராளுமன்ற பிரதிநிதி இல்லாத குறையை நீக்க வேண்டும் என்பதே எனது எண்ணமாகும்.

**ஒரு தசாப்தத்தினை இவ் ஒக்டோபருடன் அடைந்திருக்கும் வடமாகாண முஸ்லிம்களின் நிலை குறித்து?**

ஒரு தசாப்தம் கடந்துவிட்டாலும், இன்னும் துயரங்களையே எமது மக்கள் அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள். இன்னும் ஒரு வேளை உணவுக்கு அல்லல்படும் மக்கள், மிக மோசமான அடிப்படை வசதிகளற்ற நிலையில் வாழ்ந்து வரும் மக்கள் கிடுகுகள் கற்கள் கொண்டு திருத்தியமைக்கப்படாத குடிசைகளின் கூரைகிடுகளின்றி வானம் தெரியும் நிலையில் தங்களது விதியை நொந்தவர்களாக தமது கைக்குழந்தைகளையும், வைத்துக் கொண்டு நாட்களைக் கடத்தி வரும் மக்கள் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் எனும் பொழுது தான் சகிக்க முடியாமலிருக்கிறது. அரசியல்வாதி-



களினதும் அரச அதிகாரிகளினதும் அசமத்தனமான போக்கினால் தான் இவற்றில் கூட மாற்றம் ஏற்படுத்த முடியாமலிருக்கிறது.

எமது மக்களுக்கு இதுவல்லாத இன்னும் பல முக்கிய பிரச்சினைகள் இருக்கின்றன. அப்பிரச்சினைகள் தொடர்பாக எமது மக்கள் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அவை தீர்க்கப்பட வேண்டும். அந்த உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அப்பிரச்சினைகள் அசையாத சொத்துகளை பாதுகாப்பது, அரச அரசல்லாத ஊழியர்களின் நஷ்டஈடு, 1990க்கு முன்பு கஷ்டகால பிரதேசதத்திற்கான அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவு, உயர்கல்வி, அரச உத்தியோகம், மீள்குடியேற்றத்திட்டம் தொடர்பு முறையில் கொடுக்கப்படாத கொடுப்பனவுகள், மரண, திருமணக் கொடுப்பனவுகள், காணாமல் போனோர், நஷ்டஈடு, இது போன்ற பிரச்சினைகளுக்கு எதுவித வழியும் தெரியாமல் எமது மக்கள் திணறிக் கொண்டிருக்கின்றனர்.

இது தவிர சமாதான அரசியல் தீர்வில் வடமாகாண முஸ்லிம்களின் உரிமைகள், பாதுகாப்பு, மீள்குடியேற்றம் தொடர்பான ஏற்பாடுகளை உத்தரவாதப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும், மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. கடந்த காலங்களில் மேற்கொண்ட நடைமுறைகளைவிட புதிய யுக்திகளையும் கையாண்டு இதற்கான அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டியுள்ளது.

வடமாகாணத்திற்கு வன்னிக்காக தே.ஐ.முன்னணியில் ஒரு பிரதிநிதியாக என்.எம்.மன்சூர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அவர் சமூகத்தைப்பற்றிய கவலை உள்ளவர். NMROவின் நடவடிக்கைகளை கடந்த காலங்களில் வரவேற்று ஊக்கமளித்தவர். எனவே அவர் வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகளை விளங்கியவராதலால் இப்பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கும் உரிமைகளை வென்றெடுப்பதற்கும் தகுந்த நடவடிக்கைகளை எடுப்பார் என்று எதிர்பார்க்கலாம். இப்பணிகளைச் செய்ய முன்வருவாரானால் NMROவும் இதற்காக அவருடன் ஒத்துழைக்கும். இல்லையெனில் இவ்வுரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான தன்னால் முடிந்த அனைத்து நடவடிக்கைகளையும் மக்களையும் இணைத்து மேற்கொள்ளும்.

நன்றி - நூலகத்திட்டம்



# ஆளுங்கட்சியா? அமைச்சர்கள் கட்சியா?

## – ஸ்ரீலங்காவின் புதிய ஜனநாயக சித்தாந்தம்!

~ சிசைரோ

பாராளுமன்ற ஜனநாயகம் நிலவும் நாட்டில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற இரண்டு அணிகள் நிச்சயம் இருக்கும். இந்த அணிகளில் ஒன்றோ அதற்கு மேற்பட்ட கட்சிகளோ இடம் பெற்றிருக்கலாம். எதிர்க்கட்சியைவிட ஒரு வாக்கு அதிகமுள்ளகட்சி அல்லது கூட்டணி ஆளுங்கட்சியாகி விடும். ஆகவேண்டும். இதுதான் பாராளுமன்ற ஜனநாயகம். இலங்கையில் இன்னும் நிலவுவது பாராளுமன்ற ஜனநாயகம் என்றுதான் கூறவேண்டும். ஆனால், 1978இலிருந்து இந்த ஜனநாயகம் நிறைவேற்றுத்துறை அதிகாரம் கொண்ட ஜனாதிபதியினது தத்துவங்களுக்கும், கட்டுப்பட்டதாக நடந்துகொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுத்தப்பட்டுவிட்டது.

பாராளுமன்றத்தின் மதிப்பும், அந்தஸ்தும், குறைக்கப்பட்டு ஜனாதிபதி முதன்மைப் படுத்தப்படுவதால் ஜனநாயக விழுமியங்கள் பாதிக்கப்படும் என்று அப்போது கவலை தெரிவிக்கப்பட்டதாயினும் மக்கள் போதிய கவனஞ் செலுத்தியதாக இல்லை.

புதிய அரசியலமைப்பின் கர்த்தாவான முன்னாள் ஜனாதிபதி காலஞ்சென்ற ஜே.ஆர். ஜெயவர்த்தன புதிய ஆட்சிமுறையை அறிமுகப்படுத்திய போது குறிப்பிட்டவிடயம் மிகவும் முக்கியமானது. அரசியல் ஸ்திரத்தன்மையப் பேணுவதற்கும் பாராளுமன்றத்தின் விருப்பு வெறுப்புகளுக்கு எல்லாம் தலையாட்டி மலினப்படாமல் தாராள பொருளாதாரக் கொள்கையை முன்னெடுக்கவும் ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரங்கொண்டவராக இருப்பது அவசியமென்றார் அவர். அதாவது அரசியல் ஸ்திரத்தன்மையை வலுவான அரசாங்கம் பொருளாதார வளர்ச்சி இவை எல்லாவற்றுக்கும் ஆசைப்பட்டால் பாராளுமன்றத்தின் அதிகாரங்களைக் குறைக்க வேண்டும் என்று சொல்லாமல் சொன்னார் ஜே.ஆர். அதுவும் 5/6பங்கு பெரும்பான்மை தனக்குப் பாராளுமன்றத்தில் இருந்தபோதும் மிகவும் தியாக மனப்பான்மையுடன் தான் அவர் இதனைக் கூறியிருக்க வேண்டும்.

ஆக, புதிய அரசிலமைப்பு நடைமுறைக்கு வந்த போதே பாராளுமன்றத்தின் இறக்கைகள் வெட்டப்பட்டுவிட்டன. பாராளுமன்ற ஜனநாயகம் என்பதன் மீது ஜனாதிபதி ஆட்சி முறைமை என்ற குடை கவிழ்க்கப்பட்டு விட்டது. ஆக, இம்முறைமையின் கிழான முதலாவது பாராளுமன்றத்தையே இரண்டாவது பாராளுமன்றமாகவும் பிரசிதிபெற்ற சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அவர் மாற்றிய போது ஜே.ஆரின் உள்நோக்கங்கள் தெட்டத்தெளிவாகி விட்டன. அதன் பின்னர் எல்லாமே இறங்கு முகந்தான்.

### ஜே.ஆர் காட்டிய வழியம்மா!

ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சியின் பாணியை ஒப்பிட்டு நோக்கும் பலரும் கூறும் கருத்து அம்மையாரின் ஆட்சிப்பாணி எல்லாவிதங்களிலும் ஜே.ஆரின் அதே ஸ்ரைலை ஒத்திருக்கின்றது என்பதாகும். ஆனாலும் இங்கே முக்கிய ஒரு வேறுபாடும் இல்லாமலில்லை. ஜே.ஆரின் பாராளுமன்றத்தில் அவருக்குத் தேவைக்கதிகமான (5/6) பெரும்பான்மைப் பலம் இருந்தது. பிரேமதாசா ஜனாதிபதியாக இருக்கையில் அவரது பாராளுமன்றம் 2/3 பங்கு பெரும்பான்மையைக் கொண்டிருக்கவில்லை.

ஆனால், சந்திரிகா அம்மையாரின் முதலாவது பாராளுமன்றத்தில் ஒரேயொரு வாக்குப் பெரும்பான்மையும், இரண்டாவது பாராளுமன்றத்தில் நான்கு வாக்குகள் பெரும்பான்மையும் இருந்த போதிலும், அவர் ஜே.ஆரின் 'ஸ்ரைலை' பின்பற்றுவதென்றால் "அசாத்தியத்துணிவும், அபார அரசியல் அறிவும்" நிச்சயம் தேவைப்பட்டேயிருக்கும். அத்தோடு நிறுத்திவிடாமல், எந்த அரசியலமைப்பு நாட்டுக்கு உதவாது எதனை உடனே அகற்ற வேண்டும் எனத்தான் பாடுபடுகின்றதாகக் கூறிவருகின்றாரோ அதே அரசியலமைப்பின் உச்சப்பயன்பாட்டினைப் பெறும் விதத்தில் சந்திரிகா அம்மையாரின் நடவடிக்கைகள் அமைந்திருப்பதைக் காணலாம். இவ்விடயத்தில் அவர் ஜே.ஆரையும் மிஞ்சிச் செயற்படும் விதத்தைப் பின்னால் பார்ப்போம்.

1994 ஒகஸ்ட் தேர்தலில் பொதுஜன முன்னணியின் தலைவியாகத் தேர்தலில் நிற்கையில் மூன்று முக்கிய வாக்குறுதிகளை அவர் வழங்கியிருந்தார். அவையாவன: நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறைமையை ஒழித்து பாராளுமன்றத்தைப் பலப்படுத்துதல், அதிகார துஷ்பிரயோகம், லஞ்சம், ஊழல் என்பவற்றை ஒழித்து பொறுப்புக்கூறும் ஆட்சிமுறைமையைக் கொண்டுவருதல், இனப்பிரச்சினைக்கு உடனடிச் சமாதானத்தீர்வு என்பனவேயாகும்.



1994 டிசெம்பர் ஜனாதிபதித் தேர்தலிலும், இந்தக் கோஷங்கள் எவ்விதத்திலும் மாற்றமடையவில்லை. இந்த மூன்று வாக்குறுதிகள் எதுவுமே கடந்த ஆறு ஆண்டுகால ஆட்சியின் முறையின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அந்த விபரத்துக்குள் இப்போது நான் புகவிரும்பவில்லை. 1994 டிசெம்பர் ஜனாதிபதித் தேர்தலிலும் மக்களிடம் ஆணை சமாதானத் தீர்வுக்கென்றே கோரப்பட்ட போதிலும் தேர்தல் முடிந்த கையோடு சமாதானத் தீர்வு விடயமும் எட்டிப் போயிற்று. காரணங்கள் வரலாற்றிவிட்டன.

இந்த வேளையில் தான் 11வது பாராளுமன்றத்துக்கான தேர்தலும் புதிய வாக்குறுதிகளின் வருகையும் ஒருங்கே வேண்டியதாயின. பிராந்தியத் தலைமை கொண்ட முஸ்லிம் காங்கிரசின் நட்பை நாடிய ஆளுங்கட்சி சில விட்டுக் கொடுப்பனவுகளைச் செய்ய வேண்டியதாயிற்று. இது சிறுபான்மைக் கட்சிகளின் பேரப்பேச்சு என்று கணிக்கப்பட்டது.

ஆக, பாராளுமன்றம் இலங்கையில் பொறுத்தளவில் பெரும் பான்மை இனங்களது கையில் இருக்க வேண்டும். அவர்களே தீர்மானம் எடுக்கும் வகையிலும் அமைந்திருக்க வேண்டும்.

இது புதிய தத்துவமில்லையா? இதை ஜே.ஆர். வேறுவிதமாகக் கையாண்டார். பாராளுமன்றப் பெரும்பான்மை "அலுங்காமல், குலுங்காமல்" இருப்பதற்கென பாராளுமன்ற உறுப்பினர்களது இராஜினாமாக் கடிதங்களை ஏற்கெனவே பெற்று "சேர்ட் பொக்கற்றில் வைத்திருந்ததாகச் செய்தி. ஆனால், இன்று நடப்பது மற்றொரு நாடகம். எம்.பி.க்கள் ஒவ்வொருவருக்கும் நியமனக் கடிதங்களை வழங்கி அவர்களது "பொக்கற்றுள்" ஒவ்வொரு பதவியை வைத்திருக்குமாறு கொடுத்திருக்கிறார் தற்போதைய ஜனாதிபதி.

### சொன்னது நீ தானா?

1994 ஒகஸ்ட் தேர்தலின் போது பொதுஜன முன்னணி தடல்புடலாக வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் நிறைவேற்று அதிகாரங் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறைமை காரசாரமாகக் கண்டிக்கப்பட்டது.

பாராளுமன்றம் பல்லுப்பிடுங்கப்பட்ட நிலையிலுள்ளது. அதனை மீண்டும் பலமுள்ளதாக்குவோம் என்று கூறி பதவிக்கு வந்தனர். இது தொடர்பில் பேராசிரியர் பீரிஸ் குழுவினர் தொடர்ச்சியான் கட்டுரைகளைப் பத்திரிகைகளுக்கு எழுதி நிறையவே விளம்பரங் கொடுத்தனர். இவர்கள் வடித்த கண்ணீர் உண்மையானது தானா என்பதைப் பின்வரும் விடயங்களை வைத்துத் தீர்மானிக்கலாம்.

இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரைகள் 44,45 இன்படி ஜனாதிபதியே அமைச்சர்களை நியமிக்கின்றார். இலாகாப் பொறுப்பில்லாத அமைச்சர்களை நியமிப்பதையும் இது உள்ளடக்கும். (தற்போது விஜேபால மெண்டிஸ், இந்தச் சேவையை ஆற்றுகின்றார்) உறுப்புரை 46இன்படி பிரதியமைச்சர்களையும், ஜனாதிபதியோ நியமிக்கின்றார். எத்தனை அமைச்சர்கள், எத்தனை இலாக்கள், எத்தனை பிரதியமைச்சர்கள், தனக்கு எத்தனை அமைச்சு என்பதையெல்லாம் ஜனாதிபதி தானே தீர்மானிக்கிறார். உலகில் வேறெந்த ஜனநாயக நாட்டிலும் இவ்வளவு அதிகாரம் அரச அதிபருக்கு இருப்பதில்லை.

மேலும் உறுப்புரை 47(இ)யின்படி பார்ப்பின் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் யாவரும் கட்டாயமாகப் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே இருந்துதான் நியமிக்கப்பட வேண்டும். ஜனாதிபதி பாராளுமன்றத்தின் பிரசன்னமாக இருப்பதும், உரையாற்றுவதும் அவர் அமைச்சர் என்ற ரீதியில் பணிபுரியும்போது மட்டுமே பொருத்தமாகின்றது. ஆனால், அவர் சட்டமூலங்களை அறிமுகப்படுத்த முடியுமா என்பது சர்ச்சைக்குரிய இன்னொரு விடயமாகும்.

எமது அரசியலமைப்பின்படி, ஆளுங்கட்சியில், எத்தனைபேர் அமைச்சர், பிரதியமைச்சர் ஆவது என்பதை ஜனாதிபதி தீர்மானிக்கக் கூடியதாக இருக்கும்வரை ஜனாதிபதி - ஆளுங்கட்சியாக எது வரவேண்டும் எனத் தீர்மானிப்பதும், மிக எளிதாகிவிடுகின்றது.

113 ஆசனங்கள் கிடைப்பின் ஆட்சியமைக்கலாம் என்றுள்ளபோது ஜனாதிபதி 55 அமைச்சர்களையும், 58 பிரதியமைச்சர்களையும் நியமித்துவிடில், சுலபமாக ஆட்சியமைத்து விடலாம். ஆக, தேவையானது எப்படியாவது 113 பேரைக்கண்டுபிடிப்பதுதான். யார் ஆட்சியமைக்கின்றார்கள் என்பதையிட்டு இங்கு நாம் அலட்டிக்கொள்ளவில்லை. ஆனால், அதைவிட முக்கிய விடயம் ஒன்றுள்ளது.

ஜனநாயகம், சட்ட ஆட்சித்தத்துவம், என்பவற்றின் பிரதான அம்சமாகத் திகழும் அதிகாரங்களின் சமநிலை அல்லது வலுவேறாக்கல் கோட்பாடு என்பதற்கு இலங்கை ஜனநாயகம் சாவுமணி அடித்து விடுகின்றதே என்பது தான் எங்களின் விசனமாகும். இக்கோட்பாட்டினை முன்வைத்த பிரெஞ்சு அரசியறிஞரான மொன்ரெஸ்கியூ (1689 - 1755) தற்போது உயிரோடிருந்திருந்தால் தனது தத்துவங்களை வெல்லும் வல்லமை இலங்கை ஆட்சியாளர்களுக்கு உள்ளதையெண்ணி வியந்து பாராட்டியிருப்பார் எனலாம்.

பாராளுமன்றம் குறிப்பாக பொதுச் செலவீனம் என்ற விடயத்தில் நிறைவேற்றுத்துறை மீது கண்டிப்பான கட்டுப்பாட்டை, பிடியைக் கொண்டிருக்க வேண்டும். அங்ஙனமில்லையெனில், பாராளுமன்றம் இருப்பதற்கான அறிவார்த்த அடிப்படையே கேள்விக்குட்படுத்தப்படும். பிரிட்டனில் 1911இலும், 1949இலும் பாராளுமன்றம் இந்த மேலாண்மையை நிலைநாட்டியது. அமெரிக்காவில் காங்கிரஸ் இந்தப் பிடியைச் சற்றும் தளர்த்தாமல் ஜனாதிபதி மீதான கட்டுப்பாட்டைச் செலுத்தும் வழிவகையினைத்தக்க வைத்துள்ளது. பிரான்சில் அமைச்சர்கள் சட்டவாக்கசபை உறுப்பினர்களாக இருக்க முடியாது என்பதால் பிரச்சினைக்கு இடமேயில்லை. ஆனால், இலங்கையில் மட்டும் மிகவிநோதமான நிலைமை.

⇨19

ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சியின் பாணியை ஒப்பிட்டு நோக்கும் பலரும் கூறும் கருத்து அம்மையாரின் ஆட்சிப்பாணி எல்லாவிதங்களிலும் ஜே.ஆரின் அதே ஸ்ரைலை ஒத்திருக்கின்றது என்பதாகும். ஆனாலும் இங்கே முக்கிய ஒரு வேறுபாடும் இல்லாமலில்லை. ஜே.ஆரின் பாராளுமன்றத்தில் அவருக்குத் தேவைக்கதிகமான (5|6) பெரும்பான்மைப் பலம் இருந்தது. பிரேமதாசா ஜனாதிபதியாக இருக்கையில் அவரது பாராளுமன்றம் 2|3 பங்கு பெரும்பான்மையைக் கொண்டிருக்கவில்லை.

ஆனால், சந்திரிகா அம்மையாரின் முத்லாவது பாராளுமன்றத்தில் ஒரேயொரு வாக்குப் பெரும்பான்மையும், இரண்டாவது பாராளுமன்றத்தில் நான்கு வாக்குகள் பெரும்பான்மையும் இருந்த போதிலும், அவர் ஜே.ஆரின் 'ஸ்ரைலை' பின்பற்றுவதென்றால் 'அசாத்திய துணிவும், அபார அரசியல் அறிவும்' நிச்சயம் தேவைப்பட்டேயிருக்கும்.

நன்றி - நூலகத்திட்டம்



### புலிகள் - நோர்வே பிரதிநிதிகள் பேச்சு

# திருப்பம் ஏதாவது வருமா?


- கே.ஆர்., பி.வி

ஒக்.31 அன்று செவ்வாய்க்கிழமை வன்னிக்குச் சென்ற நோர்வே தூதுக்குழுவினரை நவ.முதலாம் திகதி அன்று புதன்கிழமை மாலை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். புதன் மாலை பிரத்தியேகமாக ஒழுங்கமைக்கப்பட்ட கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இதில் பிரபாகரன் அவர்கள் போராட்டத்தின் உண்மை நிலையையும், மக்கள் மீது அரசால் மேற்கொள்ளப்படும் இன அழிப்பு போரையும் விரிவாக விளக்கி எடுத்துக் கூறியுள்ளார். இது நிச்சயம் அனைத்துலக சமூகத்திற்கு எமது போராட்டத்தின் நியாயத்தையும், உண்மைத்தன்மையையும் எடுத்துச் சொல்வதோடு, சந்திரிகா அரசின் இனஅழிப்பு நடவடிக்கையினை அம்பலப்படுத்தி அனைத்துலக சமூகத்திற்கு விழிப்புணர்வை உருவாக்கும் என நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றோம் விடுதலைப்புலிகளின் வானொலி தெரிவித்தது. அரசின் அனைத்துலக சமூகத்தை ஏமாற்றும் நடவடிக்கையான சமாதான முயற்சி, அரசியல் தீர்வு, அரசியல் சீர்திருத்தம் என்ற பரப்புரை மாயையைகளை அம்பலப்படுத்தி அரசாங்கம் தமிழ் மக்கள் மீது போரையே தீவிரப்படுத்துகின்றதென்ற உண்மை நிலையை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார் எனவும் அது குறிப்பிட்டது.

சமாதான முயற்சிகளுக்கான வாய்ப்புகள் பற்றியும் இந்தக் கலந்துரையாடலின் போது ஆராயப்பட்டது. விடுதலைப் புலிகளின் தலைவரை சந்தித்ததையும் நிலமைகளை நேரில் கண்டறிந்ததையிட்டும் தாம் திருப்தி அடைவதாக நோர்வே தூதுக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.



சந்திப்பின் போது, பேச்சுவார்த்தை ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டுமெனில் போரை நிறுத்த வேண்டும் எனவும், வன்னிக்கான பொருளாதாரத் தடையினை நீக்க வேண்டும் எனவும் புலிகள் தரப்பில் வலியுறுத்தப்பட்டது. வன்னிக்குச் சென்ற தூதுக்குழுவினர் புதன் காலை அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களையும் சந்தித்துப் பேசியதுடன், வன்னிப் பிரசைகள் குழுவினர், வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஆகியோரைச் சந்தித்ததுடன், படைநடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து அவல வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் குடியிருப்புக்களையும் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இந்தச் சந்திப்பின் போது விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தூதுக்குழுவினரில் நோர்வே அரசால் நியமிக்கப்பட்ட சமாதான முயற்சிக்கான விசேட தூதுவர் எரிக்ஸ் சோல்கெய்ம், இலங்கைக்கான நோர்வே தூதுவர், நோர்வே வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

வன்னிக்குச் சென்ற அதிகாரிகள் பேச்சுவார்த்தைக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள நம்பிக்கை கொண்டு செயற்பட்டு வருகின்றனர் என்றாலும், பேச்சுவார்த்தைக்கான முன்னெடுப்புகள் ஒருபக்கமிருக்க, இன்னொரு பக்கம் வன்னியின் உண்மை நிலையையறியும் வாய்ப்பும் நோர்வே தூதுக்குழுவினரிற்கு கிடைத்துள்ளது ஒரு முக்கியமான விடயம் என்கிறார் ஒரு அரசியல் அவதானி.

இரண்டாவது தடவையாகவும் பொ.ஐ.மு ஆட்சி பீடமேறியிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நோர்வே தூதுக் குழுவினர் வன்னிக்குச் சென்று புலிகளின் தலைவரைச் சந்தித்திருப்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கியமான ஒரு விடயம் என்கிறார் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினரான விநாயகமூர்த்தி.

இரண்டாவது முறையும் ஆட்சிக்கு வந்திருக்கும் அரசாங்கம் ஆட்சியை நடாத்துவது என்றால் புலிகளுடன் பேசாமல் சாத்தியமில்லை. அது படைகளுக்கு ஆட்சேர்ப்பதற்கும் மிகுந்த நெருக்கடிகளை எதிர்கொள்கிறது. ஆகவே புலிகளுடன் பேச்சை ஆரம்பிப்பதற்கான அனுமதியை அரசாங்கம் நோர்வேப் பிரதிநிதிகளுக்கு வழங்கியிருக்கிறது.

பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் புலிகளுடன் பேசுவதைத்தவிர வேறு வழியில்லை என்று நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

இக்கட்டத்திலாவது பேச முயற்சிப்பது வரவேற்கத் தக்கது என்கிறார் அவர்.

# ஹர்த்தாலா நடாத்துகிறீர்கள்?

- விவேகி

27ம் திகதி மாபெரும் ஹர்த்தால் ஒன்று திருகோணமலையில் இளைஞர்களால் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. அண்மைக்கால வரலாற்றில் திருகோணமலை நகரத்தை முழுமையாகச் செயலிழக்க வைத்த பெருமை இந்த ஹர்த்தாலுக்கே உரியது.

தெருவெங்கும் சுவரொட்டிகள் காணப்பட்டன. வீதிக்கும் குறுக்கே சில இடங்களில் பதாதைகள் கட்டப்பட்டிருந்தன. தனியார் நிறுவனங்கள், போக்குவரத்துக்கள், பாடசாலைகள் மாத்திரமல்ல அரச நிறுவனங்களும் செயலிழந்து காணப்பட்டன.

சில இளைஞர்கள் சந்திகள் தோறும் டயர்கள் போட்டு எரிய வைத்துப் போக்குவரத்து நிகழாவண்ணம் தடை செய்திருந்தனர். வீடுகள், கடைகள் தோறும் கறுப்புக் கொடிகள் காணப்பட்டன. பல இளைஞர்கள் மோட்டார்கள் சைக்கிள் ரோந்து இராணுவப் பிரிவினரால் படுமோசமாகத் தாக்கப்பட்டனர். கொடிகளைக் கழற்றும்படியும், எரியும் டயர்களை அணைக்கும்படியும் தெருவில் காணப்பட்ட இளைஞர்கள் இராணுவத்தினரால் பணிக்கப்பட்டுத் தாக்கப்பட்டனர்.

தாக்குதலுக்குள்ளான சூசைப்பிள்ளை மகிமைதாசன் இது பற்றிக் கூறுகையில், "நான் சிகையலங்கரிப்பாளர் சங்கத் தலைவன்" எங்கள் சங்க உறுப்பினர்களின் விடயங்களைக் கவனித்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். இடைவழியில் நிஷாந்தன் என்பவர் எனது சைக்கிளில் ஏறிக் கொண்டார். நிஷாந்தன் எனக்கு அறிமுகமானவர். கணேசன் சந்தியில் இறக்கி விட்டால் அவர் வீடு செல்வது இலகுவாக இருக்கும்.

கடற்காட்சி வீதிவழியாக கணேசன் சந்தியை அண்மித்துக் கொண்டிருந்தோம். ஒரு பஸ் டயர் எரிந்து கொண்டிருந்தது. நாங்கள் அதைக் கடந்து வந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த இராணுவத்தினர் எங்கள் இருவரையும் மறித்து எரியும் டயரை அணைக்கும்படி எங்களைத் தாக்கினர். நாங்கள் அணைக்க முடியாது திண்டாடினோம். கைகளால் அணைக்கும்படி கூறி அடித்தார்கள். எரியும் டயர்களைக் கைகளால் எப்படி அணைப்பது என்று கேட்டோம். அப்படியானால் கால்களால் அணையுங்கள் என்று மேலும் தாக்கினார்கள். எங்களுக்கு நடக்கும் சித்திரவதையைப் பொறுக்க மாட்டாத எதிர்வீட்டுக்குப் பெண்மணி வாளியில் தண்ணீர் கொண்டு வந்து டயரை அணைக்க உதவினார். டயர் அணைக்கப்பட்டதும் அதை உருட்டி வரும்படி இராணு வத்தினர் எங்களைத் தாக்கினர். வேறு வழியில்லாமல் பாதி எரிந்த டயரை உருட்டத் தொடங்கினோம். கைகள் எல்லாம் வெந்து விட்டன. துவக்குப்பிடியால், கையில் கிடைத்த கம்பால் சப்பாத்துக் கால்களால் எல்லாம் அடித்தது மாத்திரமல்லாமல் தங்கள் ஹெல்மெட்டுக்களைக் கழற்றி எனது காதில் அடித்தனர். உடல் எங்கும் வலியும் ரத்தமுமாக இருந்தன.

**எரியும் டயரை கைகளால் உருட்டினோம்**

டயரை நாங்கள் தெருவில் உருட்டிச் செல்ல அவர்கள் பின்னே மெதுவாக மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தனர். கடற்காட்சி வீதியூடாக ஏகாம்பரம் வீதிக்குச் சென்று அங்கிருந்து மணிக்கூட்டுக் கோபுரம் வரை கொண்டு போய் நேராக கோணேஸ்வரம் ஆலய வீதியூடாக சென்று கோட்டையை அடைந்தோம். அங்கு வைத்து மீண்டும் தாக்கப்பட்டு கோணேசர் கோவில் ஏற்றத்துக்கு டயரை உருட்டுமாறு பணிக்கப்பட்டோம். பிறகு அங்கிருந்து திரும்பி வரவைக்கப்பட்டோம்.

கோட்டைவாசலுக்கு மீண்டும் வந்த போது எங்களுக்காக பொல் வானகம் காத்துக்கொண்டு நின்றது. அதில் டயருடன் ஏற்றப்பட்டோம். அங்கிருந்து தந்தை செல்வா வீதிக்குள் கொண்டு வரப்பட்டோம். தந்தை செல்வா வீதியும், கிறீன் வீதியும் சந்திக்கும் இடத்தில் மீண்டும் இறக்கப்பட்டு பொலிஸ் நிலையம் வரை டயரை உருட்டி வருமாறு நிர்ப்பந்திக்கப்பட்டோம். நாங்கள் டயரை உருட்டும் போது பொலிஸ் பஸ் எங்கள் பின்னால் மெதுவாக வந்து கொண்டிருந்தது.

பொலிஸ் நிலையம் கொண்டு வரப்பட்டு அங்கு வைக்கப்பட்ட வேளையில் பொலிஸ் அதிகாரி ஒருவர் வந்து "யார் டயர் எரித்தது?" என்று கேட்டார். "நான் இல்லை. எனக்குத் தெரியாது" என்று பதிலித்தேன். அப்படியானால் "ஏன் முதலில் ஒத்துக் கொண்டாய்?" என்று கேட்டார். "அடிதாங்காமல் ஒத்துக் கொண்டோம்". ஆனால் நான் டயர் எரித்தால் கூடப் பிழையில்லை என்று நினைத்தேன். ஏனென்றால் பண்டாரவளைத் தடுப்பு முகாமில் கொல்லப்பட்ட புஸ்பராசா காண்டீபன் எனது மருமகன்" என்றேன். அந்த அதிகாரி அனுதாபத்துடன் என்னைப் பார்த்து என்று விபரித்தார்.

புளொட் அமைப்பினரும் சட்டத்தரணி ஆறுமுகம் ஜெகஜோதியும் தான் விடயத்தில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டதால் அன்று மாலையே விடுவிக்கப்பதாக மகிமைதாசன் கூறுகிறார்.

மகிமைதாசனும், நிஷாந்தனும் டயர் உருட்டிய தூரம் சுமார் ஐந்து கிலோ மீற்றராவது இருக்கும். அடிகாயங்களும் அவர்களது உடம்பில் காணப்படுகின்றன.

அன்புவழிபுரத்திலும், மோட்டார் சைக்கிள் ரோந்துப் பிரிவினர் அட்டகாசம் செய்கிறார்கள். அன்புவழிபுரம் சந்தியில் நின்ற போது இளைஞர்களின் சைக்கிள்களை எரியும் டயரின் மேல் தூக்கிப் போட்டு தங்கள் மோட்டார் சைக்கிள் பெற்றோலை இளநீர் கோம்பை மூலம் ஏந்தி சைக்கிள்கள் மேல் ஊற்றி எரித்து விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

காண்டீபனின் உடல் 29ம் திகதி காலை 10.00 மணிக்கு மாபெரும் ஊர்வலமாக தெருக்கள் தோறும் பொலிஸ் காவல் மத்தியில் எழுச்சியுடன் எடுத்துச் செல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனந்தபுரி என்ற இடத்தைச் சேர்ந்த இளைஞரது உடல் இச்செய்தி எழுதும் வரை கொண்டு வரப்படவில்லை.

இவ்வளவும் நடந்த பிறகும் ஹர்த்தால் துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகை, வானொலி அறிக்கைகள் என்பவற்றுடன் அரசியல்வாதிகள் கடமை முடிந்தது என்று "சிவனே" என இருக்கப் போகிறார்களா அல்லது போர் முனைப்புடன் தலைமையேற்று மக்களுக்கு முன் சென்று மக்களை விடிவு நோக்கி இழுத்துச் செல்லப் போகிறார்களா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

நன்றி - நூலகத்திட்டம்



## ஒரு தமிழீழப் போராளியின் கதை - 3

# கேட்ட கேள்வியில் தப்பினோம் பிழைத்தோம் என ஓடினோம்!

### ஏன் தமிழீழ விடுதலை இயக்கத்தில் (TELO) சேர்ந்தேன்?

நான் ஏன் ரெலோவிற்குப் போனேன் என்பதற்கு சில காரணங்கள் உள்ளன. முதலாவது, குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை அவர்களின் நீதிமன்ற உரையும் அந்த உரையை எழுதியவர்களின் எதிர்காலப் பார்வையும் அப்போது என்னைக் கவர்ந்தது. இரண்டாவது, புலிகளைத் தவிர்த்ததற்குரிய காரணங்களை மேலே சொல்லியுள்ளேன். ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ், போன்றவற்றின் (மலையகம் உட்பட) ஈழம் என்பதில் பெரிதாக விருப்பம் இருக்கவில்லை.

GUES மாணவர் அமைப்பாக இருக்கும் போது அவர்களுடன் வேலை செய்த நான் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியினர் தமிழீழ வரைபடத்தினைக் கீறிக் காட்டியபோது குழப்பமடைந்தேன். மலையகம் உட்பட ஈழம் என்பதில் ஆரம்பத்தில் எனக்கு பெரிய கருத்துக்கள் இருக்கவில்லை. இலங்கை வரைபடத்தில் அவர்களின் ஈழத்தினைக் காட்டியபோது ஆசையாகத்தான் இருந்தது.

ஏனெனில் இலங்கைத்தீவின் அரைவாசிக்கு மேற்பட்ட பகுதி ஈழத்தில் இருந்தது. இவர்கள் கூட இடத்திற்கு ஆசைப்படுகிறார்கள் போலத் தென்பட்டது. இருக்கின்ற நிலம் தினமும் பறிபோகும் போது அதைக் காப்பாற்றுவதற்குப் பதிலாக மலையகத்தினையும் இழுத்து வைப்பது என்னவென்று தெரியவில்லை. இது நடக்கின்ற காரியமா என்பது அடுத்த வினாவாக எழுந்தது. ப்ளொட் எனது ஊரில் அந்தக் காலகட்டத்தில் வேலை செய்யவில்லை. அவர்களின் தொடர்பு கிடைக்கவில்லை.

இதற்கு மேலாக முக்கியமான காரணம், எமக்கு தொடர்பை ஏற்படுத்திய முன்னாள் GUES தோழர் ரெலோவைச் சிபார்சு செய்தார் என்பதும் முதல் தடவையாக ரெலோ என்ற கவர்ச்சியினாலும் தங்கத்துரையின் தலைமையில் ரெலோ இயங்கியது எனவும் விளக்கமளிக்கப்பட்டதும் தான். அந்தக் காலத்தில் முற்போக்கு அமைப்புக்கள் எனக் கருதப்பட்ட தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி பின்னர் தமீழீழ தேசிய விடுதலை முன்னணி (என்.எல்.எவ்.ரி) தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை என்பன நான் கேள்விப்படாத பெயர்களாகவே இருந்தன.


1983 செப்ரெம்பர் மாதம். ஒரு திங்கள் மாலை. கல்லூரி மைதானத்தில் வழமை போல் நாட்டு நிலைமைகளை நண்பர்களுடன் கதைத்துக் கொண்டிருக்கும் போது இயக்கமொன்றில் சேர வேண்டும் என்ற எண்ணத்தை நான் சொன்னேன். அது பலராலும் வரவேற்கப்பட்டாலும் எந்த இயக்கம் நல்லது? எதில் சேருவது? என்பவை பிரச்சினைகளாக இருந்தன. இருந்தும் தெரியாத இயக்கத்தைப் பற்றி அறியவும் அதைத் தொடர்பு கொள்ளவும் முயற்சிகள் எடுத்தோம்.

இந்த நேரத்தில் தான் ரெலோவின் தொடர்பை (அப்போது தான் பெயரையே முதல் முதலாகக் கேள்விப்பட்டேன்) எமக்கு எனது நண்பர் ஒருவர் ஏற்படுத்திக் கொடுத்தார். இவர் ரெலோவைச் சேர்ந்த ஒருவரை எம்மிடம் கூட்டி வந்தார். ஆனால் வந்தவர் எம்முடன் நின்று கதைக்கவில்லை. ஏன் எனக் கேட்டபோது தான் விடுதலைப் புலிகளுடன் அவசரப்பட்டுச் சேர்ந்து கையெழுத்தும் வைத்துக் கொடுத்து விட்டதாகவும் இனி இங்கு வர முடியாதென்றும் கூறினார்.

இன்று வரை அவரை மீண்டும் சந்திப்பதற்கு முயற்சி செய்கிறேன். இவர் மாவீரர் பட்டியலிலும் இல்லை. வெளியேறியதாகவும் தகவல் இல்லை. இன்று அவர் எங்கிருந்தாலும் என்னை இதற்குள் வர உதவியவர். மறக்க முடியாத நண்பர் அவர்.

எம்மில் நால்வர் ரெலோ பிரதிநிதியைச் சந்திப்பதற்காக ஆவலுடன் இருந்தோம். நாம் எதிர்பார்த்தது குறைந்தளவு இரண்டு மணித்தியாலமாவது கதைக்க வேண்டும். எமது சந்தேகங்களையும் அவர் தரும் விளக்கங்களையும் கேட்டு ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்பதே.

ஆனால் அவர் வந்தவுடன் கேட்ட கேள்விகளும் நடந்து கொண்ட முறைகளும் அவரிடம் இருந்து நாம் எப்போ தப்பி ஓடுவோம் என்ற மாதிரி இருந்தது. அவர் எம்மிடம் கேட்ட கேள்விகள்: ஒவ்வொருவரின் உயரம், நிறை என்ன? எப்போது நாம் தயார்? நாம் தயாரானால் தன்னுடன் கூட்டிச் செல்வதாகவும் கூறினார். இதைக் கேட்டவுடன்




நாம் சிரித்துக் கொண்டே யோசித்துச் சொல்லி அனுப்புகின்றோம் என்று கூறிவிட்டுத் தப்பினோம் பிழைத்தோம் என ஓடிவந்து விட்டோம்.

அவ்வாறு கதைத்தவர்களில் மூவர் வெளிநாடு சென்று விடவேண்டும் என்ற நோக்கத்துடன் தமது வேலைகளைக் கவனிக்க தொடங்கி விட்டனர். இதனால் நான் தனியாக கல்லூரி மண்டபத்தில் நிற்பதைத் தவிர்த்துக் கொண்டேன். ஏனெனில் என்னிடம் உயரம், நிறை என்று கேட்டவர் வந்து கூட்டிக் கொண்டு போய் விட்டால் என்ன ஆவது எனது வாழ்க்கை? அவ்வளவு தான்!

அதன் பின் நான் யாழ்ப்பாணம் செல்வதைத் தவிர்த்துக் கொண்டேன். அந்தக் கால கட்டத்தில் ஒவ்வோர் மூலையிலும் இராணுவத்தின் சோதனை இடம் பெறுவது வழக்கம். அடையாள அட்டையுடன் அவர்கள் முன்னால் சென்றால் கூட அவர்கள் அடிப்பது சர்வசாதாரணம்.

எனவே யாழ்ப்பாணத்திற்கு வாரத்திற்கு ஒரு தடவை போவது. மற்றைய நேரங்களில் எனது கிராமத்தில் நின்றபடியே பாடசாலை பஸ்களின் பின்னால் செல்வது தான் எனது பொழுது போக்கு. காலையில் மாணவிகள் பாடசாலைக்குச் செல்கின்றார்களா என்று பாடசாலை பஸ் வருமுன் சைக்கிளில் செல்வது.

பின்னர் தேநீர் அருந்தி விட்டு பாடசாலை பஸ் பின்னேரம் வரும்போதுஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து பஸ்ஸைப் பின் தொடர்வது. இதைவிட ஏதாவது அமைப்புக்கள் வந்து கூட்டம் கூடினால் போய் அவர்களின் கருத்துக்களைக் கேட்பது. இவ்வளவு தான். நான் வெளிநாடு போவதற்கான ஏற்பாடுகள் விரைவாக நடந்து கொண்டிருந்தன.

என்னைப் பொறுத்தவரையில் இயக்கத்தினுள் சேர்ந்து போராட வேண்டும் அல்லது வெளிநாட்டிற்குப் போய் வீட்டாரைப் பார்க்க வேண்டும் என்ற இரண்டு எண்ணங்களும் இருந்தன. உண்மையில் ஊரில் நின்று ஏதாவது படிக்கலாம் அல்லது உழைக்கலாம் என்ற கருத்தும் ஊரில் நிற்க வேண்டும் என்பதும் தான் எனது முதன்மையான ஆசையாக இருந்தது.

ஆனால் அது சாத்தியமில்லாதது போல் இருந்தது. எனக்கு எனது மண்ணையும் நண்பர்களையும் விட்டுப்பிரிய மனமில்லை. 1983 டிசம்பர் மாதமளவில் மீண்டும் ரெலோ உறுப்பினர் எனது வீடு தேடி வந்து என்னுடன் மீண்டும் கதைத்து வேலை செய்ய வேண்டும் என்றார். அப்போது நான் அவருக்கு முன்பு நடந்தவற்றைக் கூறி நான் ஊரில் நிற்க விரும்புகிறேன் என்றும் ரெலோவைப் பற்றி அறிய வேண்டும் என்பதிலும் எனது ஆர்வத்தைத் தெரியப்படுத்தினேன்.

**அவர் வந்தவுடன் கேட்ட கேள்விகளும் நடந்து கொண்ட முறைகளும் அவரிடம் இருந்து நாம் எப்போ தப்பி ஓடுவோம் என்ற மாதிரி இருந்தது. அவர் எம்மிடம் கேட்ட கேள்விகள்? ஒவ்வொருவரின் உயரம், நிறை என்ன? எப்போது நாம் தயார்? நாம் தயாரானால் தன்னுடன் கூட்டிச் செல்வதாகவும் கூறினார். இதைக் கேட்டவுடன் நாம் சிரித்துக் கொண்டே யோசித்துச் சொல்லி அனுப்புகின்றோம் என்று கூறிவிட்டுத் தப்பினோம் பிழைத்தோம் என ஓடிவந்து விட்டோம்.**

1983 இனப்படுகொலையின் பின் மக்கள் மத்தியில் அதிகம் பேசப்பட்ட அமைப்பு ரெலோ தான். குட்டிமணி, தங்கத்துரை போன்ற வீரர்களின் நீதிமன்ற உரையும் அவர்களின் படுகொலையும் இவ்வியக்கத்தை வளர்த்து விட்டிருந்தது. இந்நிலையில் எமது தொகுதிக்குரிய பொறுப்பாளருடன் தொடர்பு கொண்டு அவருடன் கூட்டங்களுக்குச் செல்வேன்.

அங்கு கேட்கப்படும் கேள்விகளும் அவற்றுக்குத் தொகுதிப் பொறுப்பாளர் சொல்லும் பதில்களும் தான் எனது அரசியல் வகுப்புக்கள் ஆயின. இதன் பின்னர் எனது கிராமத்தில் பல கூட்டங்களை நான் ஒழுங்கு செய்தேன். இவ்வாறு ரெல்லோவிற்கு வேலை செய்யத் தொடங்கினேன்.

எனது கிராமத்தில் விடுதலைப் புலிகள், புளொட், ஈரோஸ் போன்றவற்றிற்கு உறுப்பினர்கள் இல்லாததால் அவர்கள் எத்தகைய கூட்டங்களையும் நடத்துவதைத் தவிர்த்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்புத்தான் மக்கள் மத்தியில் கூட்டங்களைப் பலமுறை நடத்தியது. அதனால் அவர்களின் பல உறுப்பினர்கள் எமது கிராமத்தில் பிரச்சார வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். இதனால் நான் எதிர்நோக்கிய பிரச்சினைகள் கேள்விகள் எல்லாம் ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்களாலும் சார்புடைய அவர்கள் மக்களினாலும் தான் ஏற்பட்டன.

பலர் ரெலோ சம்பந்தமாக அறிவதில் ஈடுபட்டிருந்தனர். பலர் ரெலோவின் பெயரை அன்று தான் கேள்விப்படுபவர்களாக இருந்தார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் நான் ஒரு மாதத்திற்கு முன் தான் நானும் ரெலோவின் பெயரையே கேள்விப்பட்டேன். எமக்கும் ஈ.பி.ஆர்.எல்.எப்பிற்கும் எம் மட்டத்தில் உடன்பாடு ஏற்பட்டு ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுக்காத நிலையில் ஒருவரின் உதவியை மற்றவர் பெறும் வகையில் எமது கிராமத்தில் செயற்பட்டோம். இந்த உறவானது ஈ.என்.எல்.எப் போன்ற கூட்டமைப்பில் கூட இருந்திருக்க முடியாது.

இந்தக் கால கட்டத்தில் தமிழ்ப் பிரதேசமெங்கும் ரெலோ சுவரொட்டிப் பிரசாரத்தில் இறங்கியது. எமது கிராமத்திலும் அருகிலுள்ள கிராமத்திலும் இரவிரவாக சுவரொட்டி ஒட்டினோம்.

எனது கிராமத்தில் என்னைப் பலருக்கும் தெரிந்திருந்தபடியாலும் எமது குடும்பத்தின் பெயராலும் உறவினர்களாலும் நான் எந்த மூலைக்குச் சென்றாலும் பலர் என்னை அடையாளம் கண்டு கொண்டனர். இதுவே நான் இராணுவத்தினால் பின்னர் தேடப்படுவதற்கும் காரணமாக அமைந்தது.

**தொடரும்**

தேனுவமன்

நன்றி - நூலகத்திட்டம்



விவேகி, தருமர், கே.ஆர், விஜே

காண்மூடித்தனமான சிங்கள இனவாதத்தின் உணர்ச்சிகளால் உந்தப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் மீதான காட்டு மிராண்டித்தனமான தாக்குதல் எந்தக் காலத்திலும் தமிழ் மக்கள் சிங்கள தலைமைகளுடன் இணைந்து வாழ்வது சாத்தியமீல்லை என்ற உண்மையை மீண்டுமொருமுறை உலகத்துக் எடுத்துச் சொல்லியுள்ளது.

16-23 வயதுக்கிடைப்பட்ட அந்தச் சின்னஞ் சிறிசுகளைத் தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காக வெட்டியும், அடித்தும் கொலை செய்வதற்கு படையினரும் பொலிஸாரும், இனவாத உருவேற்றப்பட்ட காடையர்களும் திரண்டிருந்தார்கள் என்பதை சிங்கள இனத்தின் வீர உணர்வின் வெளிப்பாடு என்று கொள்வதா? காட்டு-மிராண்டிகளின் செயற்பாடு என்று கொள்வதா? தம்ம்ம விடுதலை செய் என்று கோரிக்கை வைத்தது தான் இவர்கள் செய்த துரோகம். அந்தத் துரோகத்துக்குத் தண்டனை வழங்கத்தான் சிங்கள வீரர்கள் அதிகாலை 5.30 மணியளவில் அதிகாரிகளின் உதவியுடன் முகாமுக்குள் படையெடுப்பு நடத்தி தண்டனை வழங்கி முடித்திருக்கின்றார்கள்.

இந்தப் படையெடுப்பு தற்செயலான ஒரு நிகழ்வு அல்ல. ஏற்கெனவே சிங்கள இனவாதிகளால் திட்டமிடப்-பட்ட ஒன்று. புலிகளின் இறைச்சியை எங்கள் வீட்டு நாய்க்குப் போடுவோம் என்ற கோஷம் பிந்துனுவெவ முழுவதும் பரவலாக ஒலித்திருக்கிறது. சுவர்களில் ஒட்டப்பட்டிருக்கிறது. அதுவும் பொதுத் தேர்தலில் ஒட்டப்பட்ட ஜனாதிபதியின் சுவரொட்டியின் பின்புறத்தில் எழுதப்பட்டு. பொதுஜன முன்னணியின் மீள் வெற்றியும், பிரதமர் ரட்னசிறி விக்கிரமநாயக்காவின் தேர்தல் ஆவேசப் பேச்சுக்களின் எதிரொலியும் சிங்கள இனவாதிகளுக்கு உற்சாக மூட்டியதன் விளைவே இந்தப் படுகொலைகள்.

புனர்வாழ்வு முகாமில் எத்தனை பேர் வைக்கப்பட்டிருந்தார்கள் என்ற தகவலோ, கொலை-யுண்டவர்கள், காயமடைந்து உயிர் தப்பியவர்கள் பற்றிய எண்ணிக்கையோ இதுவரை சரியாக வெளியாகவில்லை என்றே கருத வேண்டியிருக்கிறது. எல்லாச் செய்திகளையும் கழுவித் துடைத்து பொய் கலந்து வெளியிடும் அரசு ஊடகங்கள் கூட உடனடியாக மெருகேற்றிச் சொல்ல முடியாத அளவுக்கு நிலைமை மோசமாக இருக்கிறது என்பதைத் தான் தப்பும் தவறுமான எண்ணிக்கை காட்டிக் கொண்டிருக்கிறது.

திருகோணமலையைச் சேர்ந்த இளைஞர்களும், இந்த வெறியாட்டத்தின் போது உயிரிழந்திருக்கிறார்கள். இந்தச் செய்தி எழுதும் போது புஷ்பராஜா



காண்டீபன் என்ற 17 வயது நிரம்பாத சிறுவனில் உடல் கொண்டு வரப்பட்டு திருகோணமலைச் சுடுகாட்டில் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

காண்டீபன் 20ம் திகதி தனது குடும்பத்-தினருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறான். அதில் தான் சுகமாக இருப்ப-தாகவும், படிப்பதாகவும் அப்பா பக்கத்தில் இல்-லையென கவலையுடன் இருப்பதாகவும் குறிப்பிட்டதுடன், 2001.05.08ல் தனக்கு விடுதலை என்றும் அன்றைய தினம் பெற்றோர் வந்து அழைத்துச் செல்ல வேண்டும் என்றும் கேட்டிருந்தார்.

என் மகன் கொல் லப்பட்ட மறு நாள் தான் இந்தக் கடிதம் எங்கள் கைக்கு வந்தது என்று தேம்பித் தேம்பி அழுகிறார்கள் பெற்றோர்கள். காண்டீபனின் தாய் புஸ்பராசா சிவமலர் கூறிமீது கலங்கின்ற கண்டன் எனது நான்காவது மகன். ஏற்கெனவே ஒரு மகன் இராணுவத்தால் சுடப்பட்டு உயிரிழந்தார். இவர் மூன்று மாதங்களுக்கு முன்னர் நண்பர்களுடன் சென்ற வேளையில் பிடிபட்டார். அவர் பிடிபட்ட தினம் சரியாகத் தெரியவில்லை. இரண்டொரு நாட்களின் பின் உப்புவெளிப் பொலிஸ் நிலையத்தில் அவர் வைக்கப்பட்டிருப்பதை அறிந்து அங்கு சென்று பார்த்து வந்தோம். திடீரென அவர் அங்கிருந்து அகற்றப்பட்டார். எங்கு கொண்டு செல்லப்-பட்டார் என்பது தெரியவில்லை.

பிறகு பண்டாரவளை பிந்துனுவெவ என்ற இடத்தில் அமைந்துள்ள முகாமில் தான் இருப்பதாகவும் எங்களைக் கவலைப்படாது இருக்கும்படியும் கூறி அவர் எழுதிய கடிதம் கிடைத்தது. அதன் பின்னரே மனதில் நிம்மதி ஏற்பட்டது.


நாங்கள் இந்த மாத இறுதியில் மகனைப் பார்த்து வரப் புறப்படுவதாக இருந்தோம். அதற்குள் இந்தப் "பாலகனைப் படுகொலை செய்து விட்டார்களே" என்று கதறியழுதார். 1983 டிசம்பர் 25ல் பிறந்த காண்டீபன் 17 வயதடையு முன்னரேயே தமிழர் என்பதற்காக கொல்லப்பட்டு விட்டார்.

பிந்துனுவெவ கொலைகள் வடகிழக்கின் சகல பகுதிகளையும் ஓர் உலுப்பு உலுப்பிவிட்டது. மலையகத்தை ஸ்தம்பிதமடைய வைத்தது.

இச்சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து இளைஞர்களின் சடலங்கள் மட்டக்களப்புக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. சடலங்கள் ஒவ்வொன்றிலும் வெட்டுக் காயங்களும் தீக்காயங்களும் காணப்பட்டன. கல்லடியைச் சேர்ந்த அன்ரனி ஜேம்ஸ், அம்பாறையைச் சேர்ந்த சிவயோகராஜா விபுலானந்தராஜா, கரவெட்டியைச் சேர்ந்த விசுவலிங்கம் விஜயசுந்தரம், வந்தாறுமூலையைச் சேர்ந்த விநாயகமூர்த்தி செந்தூரன், புனானையைச் சேர்ந்த மாரிமுத்து பாலகுமார் ஆகியோரின் சடலங்களே மட்டக்களப்பக்குக் கொண்டுவரப்பட்டவை.

வந்தாறுமூலையைச் சேர்ந்த செந்தூரன் ஆறுவருடங்களுக்கு முன் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்ந்து கொண்டவர். கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பே இவர் கொழும்பில் வைத்து சரணடைந்துள்ளார். இவருடைய மரணவீட்டிற்குச் சென்ற இளைஞர்கள் மாவடிவேம்பு இராணுவத்தால் தாக்கப்பட்டிருக்கின்றனர். செந்தூரனின் குரல்வளை வக்கிரமான முறையில் நெடுக்குவெட்டாக அறுக்கப்பட்டிருந்ததாக உறவினர்கள் தெரிவிக்கிறார்கள்.

இதே போன்றே கல்லடியைச் சேர்ந்த அந்தோனி ஜேம்ஸ்சும் கொடூரமாக கொலை செய்யப்பட்டிருக்கிறார். ஜேம்ஸ் 24ந் திகதி இரவு 11மணிக்கு தனது சிறிய-தாய்க்கு (கல்லடிக்கு) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு எங்களைக் கொலை செய்வதற்காகத் திட்டமிட்டு முகாமைச் சுற்றி காடையர்கள் நிற்கிறார்கள் என்று குறிப்-பிட்டுவிட்டு தொலைபேசியை துண்டித்-திருக்கிறார்.



ஆனால் சிறியதாயார் இதைப் பெரிதாக அலட்டிக கொள்ளவில்லை. மறுநாட்காலை இரவுச் சம்பவம் கனவா அல்லது உண்மையா என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே எட்டு மணிக்கெல்லாம் ஜேம்ஸ் மீண்டும் தனது சகோதரனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு முகாமுக்குள் சிங்களக் காடையர்கள் வந்து விட்டார்கள், எங்களை வெட்டப் போறானுகள். நீங்கள் பொலீசுக்கோ, ஐ.சி.ஆர்.சிக்கோ சொல்லி எங்களைக் காப்பாற்றுங்கள் என்று கூறிக் கொண்டிருக்கும் போதே தொலைபேசியும் துண்டிக்கப்பட்டிருக்கிறது.

தம்பி பேசியதிலிருந்து உண்மை பொய் அறிந்து மீளுவதற்கு முன்பே கொலைசெய்யப்பட்ட செய்தியும் கிடைத்திருக்கிறது என்கிறார் துயரம் ததும்பும் விழிகளுடன் அண்ணன். ஜேம்ஸ் 90களில் புலிகளுடன் இணைந்து



பார்க்கும் நெஞ்சங்களைத் துடிக்க-வைக்கும் தோற்றத்தில் அவரது உடல் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மண்டை பிளக்கப் பட்டிருக்கிறது. கண்கள் பிடுங்கப்-பட்டிருக்கின்றன. மூக்கு இருக்கும் இடத்தில் ஒரு துளை போடப்பட்டு மறைக்கப்பட்டிருக்கிறது.



P. காண்டீபன்
2000_10_20
பிந்துனுவெவ
பண்டாரவளை



அன்பின் அப்பா அறிவது!

நான் நலம். அப்பா நீங்கள் அனைவரும் அங்கு நலமுடன் வாழ இறைவன் அருள்புரிவாராக...

அப்பா நான் இங்கு படிக்கிறேன். என்னைப் பற்றிக் கவலை அடைய வேண்டாம். இங்கு எதுவித பிரச்சினையும் இல்லாமல் வீட்டினில் இருப்பது போல் இருக்கிறேன்.

அப்பா உங்களோடு இல்லாதது மட்டும் தான் கவலை. இங்கு அதை தவிர எல்லாம் நல்லம். மிகச் சந்தோஷமாக உள்ளேன்.

நான் உங்களுக்கு இரண்டு மடல் அனுப்பினேன். எனக்கு நீங்கள் மடல் அனுப்பவில்லை. எனக்கு மடல் அனுப்புங்கள்.

அப்பா எனக்கு 05ம் மாதம் 08ம் திகதி விடுதலை. நீங்கள் வந்தால் என்னை 05ம் மாதம் 08ம் திகதி விடுவார்கள். இல்லாமல் விட்டால் நான் வீடு வர முடியாது.

வேறு இல்லை.

அனைவரிடமும் சுகம் கேட்டதனை கூறுங்கள்.

எனது விலாசம்


P.KANDEEPAN
Y.R.T.C.
BINDUNUWEWA
BANDRAWELA.

பதில் மடல் அவசியம் அனுப்புங்கள்.

சரிநிகர் இதழ் - 208, நவ. 05 - நவ 11, 2000 

இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் 2ம் திகதியே இராணுவத்திடம் சரணடைந்தவர்.

களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த பேரின்பநாயகம் நிர்மலராஜன் என்பவர் இச்சம்பவத்தில் சிறுகாயங்களுக்குள்ளாகி பண்டாரவளை வைத்திய சாலையில்



அனுமதிக்கப்பட்டிருந்தார். இத்தகவலை ஊடகங்கள் கூட வெளியிட்டிருந்தது. அதன்பின் அங்கிருந்து இராணுவ-வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டிருக்கின்றார். ஆனால் தற்போது நிர்மலராஜன் முகாமில் இடம் பெற்ற சம்பவத்தின் போது கருகி இறந்து விட்டதாகக் கூறப்படுகின்றது. இராணுவத்தால் கொண்டுசெல்லப்பட்ட நிர்மலராஜனுக்கு என்ன நடந்தது என்பது மர்மமாகவே உள்ளது.

ஒக்.28 சனியன்று யாழ்ப்பாணத்திற்கு இரு சடலங்கள் கொண்டு வரப்பட்டுக் கையளிக்கப்பட்டன. அதுவும் சீல் வைக்கப்பட்ட பேழைகள் திறக்கப்படக் கூடாது என்றும், அவை கையளிக்கப்பட்ட ஒரு சில மணித்தியாலங்களுள் மரணச்சடங்குகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்றும் நிபந்தனையின் கீழ் கையளிக்கப்பட்டது. மரணக்கிரியைகள் முடியும் வரை படையினர் இவ்விரு வீடுகளையும் சுற்றி வளைத்து நின்றனர்.

ஆனால் உறவினர்கள் முகத்தைப் பார்க்காது எப்படி ஆறுதல் அடைவர்.

அளவெட்டி தெற்கைச் சேர்ந்த செல்வராசா துரைராஜாவின் வீட்டில், வீட்டார் படையினரின் நிபந்தனையையும் மீறி பேழையைத் திறந்தனர்.

உள்ளே சடலம் அடையாளம் காண முடியாதவாறு சிதைந்திருந்தது. மொங்கானால் முகம் நசுக்கப்பட்டிருந்தது. நெஞ்சில் ஆழமான வெட்டுக்காயத்தில் இரத்தம் உறைந்திருந்தது.

வவுனியா சாந்தசோலையைச் சேர்ந்த இராசையா கருணாகரன்(18), வேப்பங்குளத்தைச் சேர்ந்த விஸ்வம்பரம் ரூமேஸ்குமார் (22) ஆகிய இரு இளைஞர்களின் சடலங்களும் வவுனியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

வவுனியாவைச் சேர்ந்த இவ்விரு இளைஞர்களும் புளொட் இயக்க உறுப்பினர்கள். அந்த இயக்கத்திலிருந்து அவர்களும் வேறு மூவரும் தப்பியோடிய போது படையினரிடம் பிடிபட்டு பண்டாரவளை புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள் என்பது தகவல்.

சின்னத்தம்பி என்றழைக்கப்படுகின்ற விஸ்வம்பரம் ரூமேஷ்குமார் வவுனியா வேப்பங்குளம் ஊர்மிளா தோட்டத்தில் வசித்து வந்தவர். இவர் யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியைச் சொந்த இடமாகக் கொண்ட தந்தையாருக்கும், வவுனியா வேப்பங்குளத்தைச் சேர்ந்த தாய்க்கும் மூன்றாவது பிள்ளையாகப் பிறந்தவர்.

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் புளொட் இயக்கத்தில் இருந்து இவரும், இவருடன் சேர்ந்து படுகொலை செய்யப்பட்ட வவுனியா சாந்தசோலையைச் சேர்ந்தவராகிய இராமசாமி கருணாகரன் ஆகிய இருவரும், வேறு மூவருடன் சேர்ந்து தாங்கள் இருந்த புளொட் இயக்கத்திலிருந்து தப்பியோடியுள்ளார்கள். ஏற்கெனவே இரு முறை இவர்கள் புளொட்டிலிருந்து விலகி வவுனியாவில் இருந்த போது புளொட்டினரால் மீளவும் கைது செய்யப்பட்டு புளொட்டில் இணைக்கப்பட்டார்கள். இதனால் வவுனியாவில் இருந்து இவர்கள்



மன்னாருக்குச் சென்று, அங்கிருந்து படகொன்றில் இந்தியாவுக்குத் தப்பிச் செல்ல முயன்றனர். இதன் போது நடுக்கடலில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, மன்னார் கிளர்ச்சித்தடுப்பு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்கள்.

இவர்களை விசாரணை செய்த கிளர்ச்சித் தடுப்பு பொலிசாரிடம் தங்கள் ஐவரையும் புளொட் இயக்கத்தினர் தேடி வருவதாகவும், தாங்கள் வவுனியாவுக்குத் திரும்பிச் சென்றால் அவர்களிடம் பிடிபட்டு உயிராபத்தை எதிர்நோக்க நேரிடும் என்றும் தெரிவித்ததையடுத்து, இவர்கள் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள் என பெற்றோர் தெரிவித்துள்ளார்கள்.

ரூமேஸ்குமாரின் தாயார் தகவல் தெரிவிக்கும் போது, செப்டம்பர் மாதம் 12 ஆம் திகதி தனது மகன் மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறித்து கிடைத்த தகவலையடுத்து, அங்கு சென்று அவரைப் பார்த்ததாகவும், அவரை பண்டாரவளை புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பி வைக்க இருப்பதாகவும் பொலிசார் தெரிவித்ததாகவும் அதற்குப் பின்னர் அவரைத் தாங்கள் காணவில்லை, அவரிடமிருந்து தகவல்கள் எதுவும் வரவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

மன்னார் பொலிசில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மகனை பண்டாரவளைக்கு அனுப்பப் போவதாக எனக்குத் தகவல் கிடைத்ததும் அதன்படி, அவருக்குத் தேவையான உடுப்புக்களைக் கொண்டு சென்று அவரிடம் கொடுத்துவிட்டு, மன்னார் பொலிசில் அவரை செப். 13 அன்று சந்தித்தேன். உங்கள் மகனுக்கு இனி பயமில்லை. அவரைநாங்கள் பண்டாரவளை புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்புகின்றோம். அங்கு தொழில் பயிற்சி பெற்று சிங்களமெல்லாம் படித்து நல்லபிள்ளையாக வீட்டிற்கு வருவார் நீங்கள் கவலையில்லாமல் போகலாம் என்று பொலிசார் அன்று கூறினார்கள். அதனைக் கேட்டு நான் மனம் ஆறுதலடைந்து வீடு வந்து சேர்ந்தேன்.


ஆனால் 26 ஆம் திகதி ஐ.பி.சி வானொலியில் பண்டாரவளையில் கொல்லப்பட்ட தமிழ் இளைஞர்களின் பெயர்விபரங்கள் தெரிவிக்கப்பட்டபோது, எனது மகனின் பெயரும் தெரிவிக்கப்பட்டதைக் கேட்டு அதிர்ச்சியடைந்தேன். உடனடியாக அன்று வவுனியாவில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவினருடைய அலுவலகத்திற்குச் சென்று தகவல் தெரிவித்து விபரம் கேட்டபோது, அவர்கள் முழுவிபரங்களையும் பெற்றுக் கொடுத்தார்கள். பொலிசாருடன் தொடர்பு கொண்ட போது, மகனின் சடலம் வவுனியாவுக்குக் கொண்டு வந்து கொடுப்பார்கள் என தெரிவித்ததையடுத்து அன்று மாலை எங்களுக்கு சடலத்தை கொண்டு வந்து கொடுத்தார்கள் என துயரத்தோடு தெரிவித்தார்.

சாந்தசோலையைச் சேர்ந்த 18 வயதுடைய கருணாகரனின் தந்தையாகிய இராமசாமி தகவல் தெரிவிக்கும் போது, தமது மகன் புளொட் இயக்கத்தில் இருந்து தப்பி இந்தியாவுக்குச் சென்ற போது மன்னார் கடலில் கைது செய்யப்பட்டு, பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுப் பின்னர் பண்டாரவளைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக அறிந்ததாகவும், அவர் சடலமாக வீட்டிற்குக் கொண்டு வந்து ஒப்படைக்கப்படும் வரையில் அவர் எங்கிருந்தார் எப்படியிருந்தார் என்பது தெரியாதிருந்ததாகவே தெரிவித்தார்.

மன்னார் 12 ஆம் கட்டையைச் சேர்ந்த குணபாலன் ஜெயவர்தனன் விடுதலைப் புலி இயக்க உறுப்பினராக இருந்ததாகவும், பின்னர் சில மாதங்களுக்கு முன்னர், வன்னிப்பகுதியில் இருந்து மன்னார் முருங்கனுக்கு வந்து, சர்வதேச செஞ்சிலுவைக்குழுவினரின் ஊடாகவே இராணுவத்திடம் சரணடைந்து பண்டாரவளைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அவருடைய உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

வாழ்வதற்காக சட்டிக்குள் இருந்து தப்பிய அவ்விரு இளைஞர்களும் நெருப்புக்குள் விழுந்த கதையாகி விட்டது இது.

## 'எங்களைச் சுற்றிக் காடையர்' என தொலைபேசியில் அறிவித்த ஜேம்ஸ்



அன்ரனி ஜேம்ஸ் ௨௫ந் திகதி இரவு ௰மணிக்கு தனது சிறியதாய்க்கு கல்லடிக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு எங்களைக் கொலை செய்வதற்காகத் திட்டமிட்டு முகாமைச் சுற்றி காடையர்கள் நிற்கிறார்கள் என்று குறிப்பிட்டுவிட்டு தொலைபேசியை துண்டித்திருக்கிறார்.

மறுநாட்காலை எட்டு மணிக்கெல்லாம் ஜேம்ஸ் மீண்டும் தனது சகோதரனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு முகாமுக்குள் சிங்களக் காடையர்கள் வந்து விட்டார்கள், எங்களை வெட்டப் போறானுகள். நீங்கள் பொலீசுக்கோ, ஐ.சி.ஆர்.சிக்கோ சொல்லி எங்களைக் காப்பாற்றுங்கள் என்று கூறிக் கொண்டிருக்கும் போதே தொலைபேசியும் துண்டிக்கப்பட்டிருக்கிறது. பிறகு...

## "சரஸ்வதி பூசையன்று தப்பினோம்." ஆனால்...!

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் கொலையுண்ட சின்னத்துரை மோகனதாசின் உடல் திங்கள் இரவு திருகோணமலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. புதன் காலை ௰ மணிக்கு நல்லடக்கம் செய்யபட்டது.

௨௩.06.௮௨ல் பிறந்த இவர் விடுதலைப்புலிகள் இயக்கத்துக்குச் சென்றார் என்ற சந்தேகத்தின் பேரில் படையினர் தேடியத்தற்கிணங்க இவ்வருடம் ஜூலை ௰௪ அன்று சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினர் மூலமாகப் பெற்றோராலேயே ஒப்படைக்கப்பட்டார். பின்னர் அங்கிருந்து புனர்வாழ்வு முகாமுக்கு மாற்றப்பட்டார்.

தாயார் இராசம்மா, இவரை கடந்த ௨0ம் திகதி புனர்வுாழ்வு முகாமில் சென்று சந்தித்திருக்கின்றார். ௨௩ம் திகதி மகனுடன் முகாமிலேயே இருந்திருக்கிறார். தாயார் விடை பெறும் போது மோகனதாஸ் 'அம்மா நான் விடுதலையாகும் வரையில் உயிருடன் இருக்க மாட்டேன். சரஸ்வதி பூஜை அன்று எங்களைக் கொல்லத் திட்டமிட்டார்கள். தப்பி விட்டோம். இனி எப்போது கொல்வார்களோ தெரியாது' என்று அழுதிருக்கிறார். தாயார் தேறுதல் கூறி விட்டு வந்திருக்கிறார்.



# இரு திசைதிருப்புதல்களின் இணைவு - இனப்பிரச்சினை

- இப்படியும் ஒரு பார்வை

~ வெளியான்

இலங்கையில் தேசிய இனப்பிரச்சினை பற்றி பல கோணங்களிலிருந்து பலர் எழுதியுள்ளனர். பெரும்பாலான கட்டுரைகள் அரைத்த மாவையே திரும்பத் திரும்ப அரைப்பதனால் வாசகர்களுக்கு சலிப்பு தட்டியிருப்பதில் வியப்பில்லை.

எனவே இனப்பிரச்சினையை வேறு கோணத்தில் அணுக நான் இங்கு முயல்வேன். தேசிய இனம் என்ற பதத்தை வரையறுக்க முற்படுபவர்கள் காற்சட்டை தைப்பதற்கு தையற்காரன் அளவு எடுப்பதுபோன்று, உடனே ஸ்ராலினின் அளவுகோல்கள் என்ற நாடாவை கையில் எடுப்பார்கள். ஒரு காலகட்டத்தில் இலங்கை வாழ் தமிழர் தேசிய இனமா இல்லையா என்பதை ஐயந்திரிபற எண்பிப்பதற்கு அத்தகைய முயற்சி தேவைப்பட்டிருக்கலாம். நியாயப்படுத்தக் கூடிய ஒன்றாகவும் இருந்திருக்கலாம். ஆனால், இன்றோ, இரத்தம் ஆறாய் ஓடியபின்னர், அத்தகைய முயற்சி புத்திஜீவிகளின் 'முட்டையில் மயிர் பிடுங்கும்' பொழுது போக்காகத்தான் இருக்கும்.

இலங்கையிலே தேசிய இனப்பிரச்சினை எவ்வாறு தோன்றிற்று என்பதைப் பற்றிப் பல்வேறு கருத்துக்களை பலர் வெளியிட்டுள்ளனர். பண்டைய வரலாற்றில் இப்பிரச்சினையின் வேர்கள் ஆழமாய் ஓடியிருக்கின்றன என்று சிங்களப் பேரினவாதிகளின் வற்புறுத்தி வருகின்றனர். இதற்கு ஆதாரமாக மகாவம்சத்தையும், எல்லாளன் துட்கெமுனு போரையும் அவர்கள் முன்வைக்கின்றனர். இந்த "மகாவம்ச பொறிக்குள் சிங்கள பேரினவாதிகளின் 'கண்ணாடி விம்பங்களாக' சில தமிழ் அறிஞர்களும் வீழ்ந்து விட்டனர். இரு சாராரின் நோக்கிலும் / வரலாற்றுக் காலந்தொட்டு சிங்களவர்களும், தமிழர்களும் பகைவர்களாவே இருந்து வந்துள்ளனர்.

அரசர்களுக்கிடையே நிகழும் சிம்மாசனப் போர்களை இரு இனங்களுக்கிடையேயான போர்கள் எனக்கருதும் தவறு ஒரு புறமிருக்க வரலாற்றியலைப் பற்றிய சில அடிப்படைகளையும் இந்நிலைப்பாடு மறுக்கின்றது.

வரலாற்றாசிரியர் முற்றும் துறந்த முனிவர் அல்ல. தான் வாழும் காலத்தின் நிகழ்வுகளால், கருத்து நிலையால் அறிந்தோ அறியாமலோ அவர் பாதிக்கப்படுகின்றார், மகாவம்சத்தை இயற்றிய மகாநாபவும், இந்நியதிக்கு விதிவிலக்கல்ல.


மகாவம்சத்திற்கு முன் இயற்றப்பட்ட தீபவம்சத்தில் எல்லாளன் துட்டகெமுனு சமர் ஒரு சிலவரிகளில் மட்டுமே வர்ணிக்கப்படுகின்றது. தீபவம்சத்திற்கு பின் இயற்றப்பட்ட மகாவம்சத்தில் தான் துட்டகெமுனு காவிய வீரனாகக் காட்சியளிக்கின்றான். துட்டகெமுனுவின் பாத்திரம் இவ்வாறு உப்பிப் பெருத்ததற்குக் காரணம் என்ன?

இங்குதான் மகாவம்சம் இயற்றப்பட்ட காலத்தின் தாக்கத்தை நாம் மனதில் கொள்ள வேண்டும். அப்பொழுது இந்தியாவில் பௌத்த மதம் வீழ்ச்சியுறத் தொடங்கியிருந்ததோடு, இந்து மதத்தின் கையும் ஓங்கத் தொடங்கியிருந்தது. இந்நிலையில் பௌத்தத்திற்கு 'முண்டு கொடுப்பதற்கு அரசர்களின் ஆதரவும் பாதுகாப்பும் தேவைப்பட்டது. இச்சூழ் நிலையில் தான் சிங்கள இனத்திற்கும், பௌத்த மதத்திற்கும் இலங்கைத் தீவிற்கும் அவிழ்க்கப்பட முடியாத முடிச்சுப் போடப்பட்டது. இது தொடர்பாக மூத்த பௌத்தரும், பாளி அறிஞருமான கலாநிதி இ.டபிள்யு அதிகாரம் 1983ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ் இனப்படுகொலைக்குப் பின் கூறியதை நினைவு கூர்தல் நன்று. எதிர்காலத்திலே இத்தகைய படுகொலைகளை எவ்வாறு தடுக்கலாம் என ஓர் பத்திரிகையாளர் வினவிய போது. அவர் கூறிய பதில்: மகாவம்சத்தின் சகல பிரதிகளையும் தீயிலிடுவதே அதற்கு ஒரே வழி!"

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை பண்டைய வரலாற்றிலிருந்தல்ல. 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியினதும், 20ம் நூற்றாண்டின் முற்பகுதியினதும் - சுருங்கக் கூறின் ஆங்கிலேயரின் ஆட்சிக்காலம் - வரலாற்று நிகழ்வுகளிலிருந்தே ஊற்றெடுத்தது. பிரச்சினை தோன்றி முற்றிய பின், இரு சாராரும் பண்டைய, வரலாற்றின் உதவியை நாடி தத்தமது வசதிக்கேற்ப அதனை திரிக்கின்றனர். இலங்கையில் மட்டுமல்ல எங்குமே இவ்வாறு தான் நிகழ்கின்றது. இக்காலப் பிரச்சினையை நேர்கொள்ள திராணியற்றவர்கள் தீக்கோழிகளைப் போன்று திரிக்கப்பட்ட வரலாறு என்னும் மண்ணில் தலையைப் புதைக்கின்றனர்.

சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையே இன்று போர் நடைபெறுகின்றது எனப் போர் பிரகடனம் செய்யும் சிங்களவர் ஓர் அடிப்படை வரலாற்றுண்மையை மறந்து விடுகின்றனர். அல்லது மறைத்து விடுகின்றனர். தென்னிந்தியாவிலிருந்து இங்கு வரவழைக்கப்பட்ட சில சாதிகளே இன்று தம்மை அசல் சிங்களவர் என மார் தட்டிக் கொள்கின்றனர். மொழிப்பிரச்சினை சூடுபிடித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில், அப்பொழுது சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த கலாநிதி கொல்வின் ஆர்.டிசில்வா, இன்று சிங்களம் பேசுபவர்களாக மாறிய சலாகம எனப்படும் சாதி (கறுவாப்பட்டை உரிப்பவர்கள்) தமிழ் நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டவர்கள் எனச்சுட்டிக்காட்டினார். அப்பொழுது அவர் வரலாற்றாசிரியனாகப் பேசினார். (பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இலங்கை' என்ற பிரபல்யமான நூலை இயற்றியவர் இவரே.) இவர் பின்னர் இடதுசாரி ஐக்கிய முன்னணியின் முக்கிய அமைச்சராகவிருந்து 1972ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசியல் யாப்பின் பிரதான சிற்பியாகத் திகழ்ந்தார். இந்த யாப்பே இனப்பிரச்சினையை மோசமடையச் செய்து இன்றைய சீரழிவுக்கு வழிவகுத்தது என்பது துன்பம் நிறைந்த முரணாகும்.

கூட்டு இன மத, அடையாளங்கள், ஒப்பீட்டளவில், ஓரளவு நிலையானவையாய் இருந்தபோதிலும், தனிப்பட்டவர்களின் இன மத, அடையாளங்கள் வரலாற்றின் ஓட்டத்தால் பாதிக்கப்படாத மாறாத, நித்தியமானவை அல்ல. இதற்கு ஜே.ஆர்., எஸ்.டபிள்யூ.-ஆர்.டி. பண்டாரநாயக்க போன்றவர்களே நல்ல சான்றுகள். இவ்விருவரினதும் மூதாதையர் தென்னிந்தியாவிலிருந்து வந்து குடியேறிய தமிழர்கள் என்பதை காலஞ்சென்ற ஜேம்ஸ் ரட்ணம் ஆதாரபூர்வமாக நிறுவியுள்ளார். ஜே.ஆரும் சரி பண்டாரநாயக்காவும் சரி, அரசியல் இலாபத்திற்காக கிறிஸ்துவத்திலிருந்து பௌத்த மதத்திற்கு மாறியவர்களே! இவர்களுக்கு அக்காலத்தில் சூட்டப்பட்ட பெயர் 'டொனமூர் பௌத்தர்கள்'. டொனமூர் அரசியல் திட்டத்தின்படி சர்வசனவாக்குரிமை வழங்கப்பட்டிருந்ததால் சிங்கள பௌத்தர்கள், பெரும்பான்மையினராய் வாழ்ந்த பகுதிகளிலே வேட்பாளர்களாக போட்டியிட முன்வந்தவர்கள், தமது வெற்றியை நிச்சயப்படுத்துவதற்கு தம்மை சிங்களவராகவும், பௌத்தர்களாகவும், பிரகடனம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தமிருந்தது. அவர்களது நிலை எம்மவர் மத்தியில் வாழ்ந்த 'பஞ்சாட்சர கிறிஸ்தவர்களைப்' போன்ற ஒன்று. (இந்த அடைமொழியைச் சூட்டியவர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை).



இவ்வாறு நோக்கும்போது 1956ஆம் ஆண்டிலிருந்து ஜே.ஆரின் ஆட்சி முடியும் வரை இலங்கையை ஆண்டது (சிறிமா அம்மையாரினதும், டட்லியினதும், ஆட்சிக் காலம் நீங்கலாக) தம்மை சிங்களவர்கள் என்றும், பௌத்தர்கள் என்றும் பிரகடனம் செய்து கொண்ட தமிழ் கிறிஸ்தவர்களே!

1956ம் ஆண்டிலே, சிங்கள மக்களின் கீழ்தட்டு வர்க்கத்தினரிடையே (குறிப்பாக, கிராமங்களில் வாழ்ந்த சிங்களம் மட்டும் தெரிந்த ஆசிரியர்கள், ஆயுர்வேத வைத்தியர் போன்றோர்) ஆங்கிலம் கற்று தங்கள் மேல் சவாரிவிட்டு வந்த நகர்வாழ் மேல் தட்டு வர்க்கத்தினருக்கு எதிராக கிளர்ந்தெழத் தலைப்பட்டனர். மக்களின் நாடியைக் கைபிடித்துப் பார்ப்பதில் வல்லவரான பண்டாரநாயக்க இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்தி தான் விட்டு விலகிய ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடிப்பதற்கும் (அதன் மூலம் தன்னை பிரதமராக ஆக்காது தனது மகன் டட்லியை பிரதமராக ஆக்கிய டி.எஸ். சேனநாயக்கவினது ஐ.தே.கட்சியை பழிவாங்குவதற்கும்) தான் சார்ந்திருந்த வர்க்கமாகிய ஆங்கிலம் கற்ற சிங்கள மேல்நாட்டினர்க்கு ஏற்படவிருந்த பெரும் ஆபத்தை தவிர்ப்பதற்கும், தனிச்சிங்களம் - அதுவும் 24 மணிநேரத்திற்குள் - என்ற உணர்ச்சியை தட்டியெழுப்பவல்ல கோஷத்தை முன்வைத்து 56ம் ஆண்டுத் தேர்தலில் பெரும் வெற்றி ஈட்டியதுடன் கீழ்மட்ட சிங்களவர்களிடையே கிளர்ந்தெழுந்த வர்க்க உணர்வை தமிழருக்கு எதிரான இன உணர்வாய் மிகக் கெட்டித்தனமாகத் திசை திருப்பினார்.

**மகாவம்சத்திற்கு முன் இயற்றப்பட்ட தீபவம்சத்தில் எல்லாளன் துட்டகெமுனு சமர் ஒரு சிலவரிகளில் மட்டுமே வர்ணிக்கப்படுகின்றது. தீபவம்சத்திற்கு பின் இயற்றப்பட்ட மகாவம்சத்தில் தான் துட்டகெமுனு காவிய வீரனாகக் காட்சியளிக்கின்றான். துட்டகெமுனுவின் பாத்திரம் இவ்வாறு உப்பிப்பெருத்ததற்கு காரணம் என்ன?**

சிங்களவர் மத்தியில், ஆங்கிலம் கற்றவர்களுக்கும், ஆங்கிலம் கற்காதவர்களுக்குமிடையே காணப்பட்ட பாரிய பிளவைப்போல், தமிழர்களிடையே சமூகப் பிளவு இருக்கவில்லை. சிங்களவர்களைப் பொறுத்தவரை ஆங்கிலம் கற்றவர்கள் ஓர் உலகையும், ஆங்கிலம் கற்காதவர்கள் வேறு ஓர் உலகையும் சார்ந்தவர்கள். தமிழரைப் பொறுத்தவரை, ஆங்கிலம் கற்று உத்தியோகம் பார்த்தவர்களுடைய சமூக அந்தஸ்து ஏனையோரைவிட உயர்ந்ததாய் இருந்தது உண்மை தான். ஆனாலும் சிங்களவரிடையே காணப்பட்டது போன்று அது பெரும் வர்க்க முரண்பாடாகக் கூர்மையடையவில்லை. இதற்கு ஒரு காரணம், ஆங்கிலம் கற்ற தமிழர் ஆங்கிலம் கற்ற சிங்களவர் போலல்லாது தமது தாய் மொழியையோ, தமிழ் பண்பாட்டையோ முற்றாக மறக்கவோ, நிராகரிக்கவோ இல்லை. விரல்விட்டு எண்ணக்கூடிய 'கறுவாக்காட்டுத்' தமிழரைத் தவிர (இதற்கு ஓர் நல்ல எடுத்துக்காட்டு ஜி.ஜி.பொன்னம்பலம் நீதிமன்றத்தில் தோன்றும்போது அதற்குரிய ஆடைகளை அணிந்து அசல் மேற்கத்தையர் போன்று காட்சியளிப்பார். அதேவேளை மேடைகளிலோ, கோவில்களிலோ, சந்தனப் பொட்டோடும், வேட்டி சால்வையோடும் அசல் தமிழராய் தரிசனம் தருவார்) நேர்மாறாக, ஆங்கிலம் கற்ற கணிசமான சிங்களவர் தமது தாய்மொழியை சரிவரப் பேசுவதற்குக் கூட முடியாதவராகவோ, பேசவிரும்பாதவராகவோ இருந்தனர். (சிங்களம் ஒரு 'குசினி' மொழியாக ஒதுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டிருந்தது.) தமது பண்பாட்டை மறந்து, மேற்கத்திய உணவு, உடை, பாவனைகளில் மூழ்கியிருந்தனர்.

சிங்களவரிடையே இருப்பதைவிட தமிழரிடையே காணப்படும் சாதிமுறை இறுக்கமானது. தமிழரிடையே காணப்படும் "தீண்டாமை" அதே வடிவிலேயோ மூர்க்கத்தனத்துடனோ, சிங்களவரிடையே பெரும்பாலும் காணப்படுவதில்லை என்றே சொல்லலாம்.

சுதந்திரம் பெற்ற கையோடு அரசியல் அதிகாரப் பகிர்விலே தமிழ் மேற்குழாத்தோருக்கும் சிங்கள மேற்குழாத்தோருக்கும் இடையே பிணக்கு ஏற்படத் தொடங்கியதும், தமிழர்க்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகிற்று. இதற்கு குறுக்கே நின்றது சாதி அமைப்பை அடிப்படையாகக் கொண்ட தீண்டாமையே. எனவே தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களுக்கு விரும்பியோ விரும்பாமலோ தமிழ் மேல்குழாத்தின் ஒரு பகுதியினர் ஆதரவு கொடுக்க வேண்டி நேர்ந்தது. இவ்வாறு தான் 'தற்காப்பு தேசியவாதத்தை' உயர் குழாத்தினைச் சேர்ந்த தமிழர் உருவாக்கி, தமிழர் என்ற இன அடையாளத்தை ஓர் கோஷமாக முன்வைத்து, தமிழருடைய சமூக அமைப்பின் இன்றியமையாத அதனுடன் பின்னிப் பிணைந்த சாதி முறைக்கு எதிரான ஓர் உட்போராட்டத்தை, சமூகப் போராட்டத்தை சிங்களவர்களுக்கு எதிரான இனப் போராட்டமாக திசை திருப்புவதில் தமிழ் மேற்சாதியினர் வெற்றி கண்டனர்.

இந்த இரண்டு திசைதிருப்புதல்களின் இணைவுதான் வேறு சில காரணங்களுடன் கலந்து இன்று எமது நாட்டிலே இனப்பிரச்சினையாக பூதாகரமாக உருவெடுத்திருக்கின்றது. இத்திசைதிருப்புதல்கள் தனிப்பட்டவர்களின் சதித்திட்டம் அல்ல. இத்தனிப்பட்டவர்கள் சமூக சக்திகளின் பிரதிநிதிகளே என்பதை மனதில் நாம் கொள்ள வேண்டும்.

நன்றி: தாயகம்

# அழுகை

யாருமே இனி அழல் வேண்டாம்
எம்மிடம் கண்ணீர் திவலைகள் மட்டுமே
எஞ்சியிருப்பதாய் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்
அந்த முட்டாள்கள் !
ஆகவே இனி யாருமே அழல் வேண்டாம்

நேற்றைய காற்று முகத்திலறைந்து
சொன்ன செய்தியால் ,
நெஞ்சுக் கூட்டில்
கோடி முறை சம்மட்டியால் அறைந்தார்கள் அவர்கள்
செத்துப் போனது எங்களது இதயமும் தான்
எனினும் நாங்கள் அழ மாட்டோம்.

அச்செய்தி பற்றிய ஒவ்வொரு
சொற்களின் தெறிப்பிலும்
எங்கள் இதயங்கள்
இரத்தத்தை பீச்சியபடி வெடித்துச் சிதறியது
காற்றோடு கந்தகத்தையும் அனுப்பியது நீங்கள் தானே!

உங்களிடம் நாங்கள் நீதி விசாரணையைக் கோரப் போவதில்லை
ஏனெனில், நீங்கள் மனுநீதிச் சோழர்கள் அல்ல
நீரோ மன்னர்கள், கசாப்புக்கடைக்காரர்கள்.
ஆணைக்குழுக்கள் என்ன
சிந்திய இரத்தத்தை போத்தலில் அடைக்கவா?

சிதிலமடைந்த உடல்களைக் கணக்கிட முடியுமா?
யார் சொன்னார்கள்.....?
கூட்டில் அள்ளிப் போனவர்கள்
தலையைப் பிய்த்துக் கொண்டார்கள்!

நினைவோடையில்
பிஞ்சு முகங்களின் கோரக் கதறல்கள்
தொடர் வேதனையாய் துரத்தியடித்தது எமை,
வழி நெடுகிலும் பயத்தில் நாம் உறைந்து போனோம்.
ஹிட்லரின் பாசறையில் விளைந்த பேய்களா நீங்கள்!
செவிப்பறை அதிர கேட்கச் சொல்லிற்று மனம்

எங்கள் ஈரலை இரத்தத்தில் தோய்த்து
சுட்டுத் தின்றார்கள் அவர்கள்
எஞ்சியதை, நக்கிப் பிழைக்கும்
எம் தலைவர்களுக்காய் வீசி எறிந்தார்கள்
புத்தர் கடைவாயில் வழிந்த வீணீரை
திருட்டுத்தனமாய் உள்ளிழுத்துக் கொண்டார்
விக்கித்து போயிற்று எல்லாம்......

கொலை நாடகத்தின் முடிவு என்ன...?
இறுகிப் போனது நினைவுகள்
ஆயினும்,
நாம் நீர்திவலைகளை அனுமதிக்கப் போவதில்லை.

கருகிப் போன சிற்றுடல்கள்
யாரும் அறியாமல்
எம்முள் எண்ணிலடங்கா தீச்சுவாலைகளை
மௌனமாய் மூட்டிப் போயிற்று
இனியும் நாம் ஏன் அழ வேண்டும்

எதுவாகிடினும்,
எங்கள் இறைச்சிகள் உங்கள் நாய்களுக்காய் அல்ல
உங்கள் அகராதியில் பயங்கரவாதமே ஆயினும்
எழுதி முடிப்போம் எமது சுதந்திரத்தை!

~ கலா

# யுத்தங்கள் விட்டுச் செல்பவை

~ மைக்கல் ஒன்டாட்ஜியின் Anil's Ghost

Michel Ondatji இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட கனேடிய எழுத்தாளர். 1992ல் வெளிவந்த இவரது நாவலான The English Patient (இது பின்னர் திரைப்படமாகவும் எடுக்கப்பட்டது) மூலம் நட்சத்திர அந்தஸ்தைப் பெற்றவர். தற்போது வெளியிடப்பட்டிருக்கும் இவரது நாவலான Anil's Ghost மூலம் நம் காலத்தேயே சிறந்த நாவலாசி-ரியர்களுள் ஒருவராக தன்னை இணைத்துக் கொள்கிறார். ஒரு சிலருக்குத்தான் "நல்ல", "கதை"யைச் சொல்லவும், அதை சர்வதேசிய மட்டத்திற்கு நகர்த்திச் செல்லவும் முடியும். அவர்களில் இவரும் ஒருவர்.

Anil's Ghost என்ற இந்த நாவல் அனில் திசெரா, சரத் தியசேன என்ற இரண்டு புதை பொருள் தொன்மலியல் ஆய்வாளர்களைச் சுற்றிய கதையாக நகர்கிறது. அனில் வெளிநாட்டிலிருந்து அண்மையில் தான் நாடு திரும்பியவர். இவர்கள் இருவரும் தங்கள் ஆய்வின் போது ஒரு மண்டையோட்டைக் கண்டெடுக்கிறார்கள். அது இலங்கையை யுத்த பூமியாக்கிய சிவில் யுத்தம் கொன்று குவித்த எண்ணற்றவர்களில் ஒருவனது. அவன் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கிய இளைஞன், அரச கூலிப்படைகளால் கொல்லப்பட்டவன். இலங்கையைப் பிறந்தகமாகக் கொண்ட அனில் - முன்னால் நீச்சல் வீராங்கனையும் கூட - அந்த மண்டையோட்டின் நதி, ரிஷி மூலங்களைத் தேடியாராய்ந்து, இவ்வாறான அநீதிகள் தொடர்பில் தனது அவதானங்களைப் பதிவு செய்கிறாள். இவரின் இந்த முயற்சிக்கு சரத்தும் ஒத்தாசை வழங்கிச் செயற்படுகிறான்.

இந்த மண்டையோட்டுக் கதை மெதுவாக அனிலினதும், சரத்தினதும் இறந்த காலங்களை நோக்கிய கதையாகவும், நகர்கிறது. அனில் தன் குறுகிய சந்தோஷமற்ற திருமண வாழ்வை நினைவு கூர்கிறாள். Cullis உடனான அவளது கசப்பான அனுபவங்கள் பகிரப்படுகின்றன. இடை-யில் தன் உற்ற நண்பன் Leaf ன் நினைவுகளில் துன்புறுகிறாள். சரத் தன் முன்னாள் மனைவியுடனான (with his own ghosts - his ex-wife) நினைவுகளோடு வருகிறான். இவர்களோடு இலங்கையின் மிகப் பிரபலமான முன்னாள் தொல்பொருள் ஆய்வாளரும், தற்போது கண்பார்வை குன்றி காடொன்றுக்குள் உள்ள ஒரு மடத்தில் வாழ்பவருமான "பாலிப்பன" என்பவரும் சரத்தின் சகோதரனான காமினி என்கிற வைத்தியரும், ஆனந்த என்கிற ஓவிய சிற்பக் கலைஞனும் கதை மாந்தர்களாக அனிலைச் சுற்றி உலவுகிறார்கள். மண்டையோட்டு முடிவுகளோடு வருகிறாள் அனில். அரச படையால் கொல்லப்பட்ட இளைஞனதே அது எனத் துணிவுறுகிறாள். இது தொடரில் விசாரணைக்குப் பின்னர் உட்படுகிறாள். தங்கள் அத்துமீறல்கள் வெளித்தெரிவது கண்டு சினமுறுகிறார்கள் இராணுவ அதிகாரிகள். அதிகாரிகளின் எல்லைமீறிய விசாரணைகளுக்கும், இம்சைகளுக்கும் உள்ளாகிறாள் அனில். அவளை இதிலிருந்து தப்பிக்கச் செய்ய சரத் பல்வேறு அ - நேர்மையான உத்திகளைக் கையாள்கிறான்.

ஒரு நாள் வைத்தியர் காமினியிடம் கொல்லப்பட்ட பல்வேறு நபர்களின் சடலங்கள் கொண்டு வரப்படுகின்றன. அதில் ஒன்று சரத்தினுடையது. அதன் உடம்பிலுள்ள காயங்கள் சரத் கொல்லப்படுவதற்கு முன்னால் கடுமையான சித்திரவதைகளுக்கு உட்பட்டிருக்கிறான் எனக் காட்டுகிறது. மண்டையோடு பற்றின உண்மைகளையும், மர்மங்களையும் வெளிக்கொணர்ந்த அனிலுக்கு உடந்தையாகச் செயற்பட்டு "குற்றமிழைத்த" காரணத்திற்காக மரணத்தை தண்டனையாகப் பெறுகிறான் சரத். யுத்தம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆனந்த - மண்டையோட்டை செப்பனிட்டு வடிவமைக்க சரத்தினால் அழைத்து வரப்பட்ட கலைஞன் - தானும், அனிலும் கொல்லப்பட்ட சரத்தினது உணர்வலைகளை - ஆவியை காலம் முழுதும் காவித்திரிய வேண்டுமென்பது போல உணர்கிறான்.

ஒன்டாட்ஜியின் செப்பனிடப்பட்டது போன்ற எழுத்துக்கள் போரின் பயங்கரங்களை எம்மீது படிய விடுகிறது. இருந்தபோதும் இவர் சித்திரவதையின் விவரணங்களையோ, அது பற்றிய குரூரமான வர்ணனைகளையோ (உலக யுத்தக் கொடூரங்களை James Jones வர்ணித்தது போன்றோ, வியட்நாம் போரின் நிகழ்வுகளை James Webb வர்ணித்தது போன்றோ) தரவில்லை. இவரின் அப்பழுக்கற்ற சந்தமிகு நடை எம்மில் தாக்கம் செய்கிறது. வன்முறைதான் நாவல் பேசும் பிரதானதொனியாக இருந்தாலும் கூட எந்த இயல்பு மாற்றங்களுமின்றி நகர்கிறது.

கதைகளின் ஒவ்வொரு பாத்திரமும் செம்மையாக செதுக்கப்பட்டிருக்கின்றன. "உண்மை" உன்னை விடுவித்து விடும்" என்று நம்புகிற Idealist ஆக வருகிறாள் அனில். இந்த "உண்மையின் தேடலில் தன் வாழ்வை அபாயத்திற்குள்ளாகுகிறாள். ஆனால், முடிவில் அவள் சுமந்து திரியும் அந்த ஆவி (மண்டையோடு) கொல்லப்பட்ட அந்த இளைஞனுடையது அல்ல. கொல்லப்பட்ட இளைஞன் பற்றிய தேடலுக்கு உதவிய சரத்தினுடையது. இது தான் அனிலுக்கு நேர்ந்த அவலம். இறந்து போன அவலமொன்றிற்கான தேடலில் நிகழ்கால அவலமொன்றை அனுபவிக்கிறாள். ஆக, உண்மை யாரையும் சும்மா விட்டு விடவில்லை. சரத்தைப் போல ஏதாவது பின் விளைவுகளை, முடிவுகளை தந்து கொண்டேயிருக்கிறது.

இது இன்னொரு பக்கத்தில் பாலிப்பன என்கிற முன்னாள் தொல்பொருளியலானது கதையாகவும், இருக்கிறது. அவரின் இலங்கை வரலாறு பற்றிய திறன் மிகுந்ததும், ஆச்சரியம், தரத்தக்கதுமான "உண்மைகள்" கல்வியாளர்களால் புறக்கணிக்கப்பட்ட நிலையில் தன் "உண்மை" குறித்து தேடல்களை தனித்தவனாக மேற்கொள்கிறார். வரலாறு என்பது தற்கால தேவை கருதியும், அல்லது ஏதாவது ஒன்றை நிறுவவுமே மீளெழுதவோ, அல்லது உருவாக்கவோ படுகிறது. இது ஒரு வகையில் உண்மை பற்றிய நீட்சேயிச வரைவிலக்கணமாகயிருக்கிறது. அதாவது "உண்மை என்பது கற்பனைகளோடு நடமாடும் ஒரு இராணுவம்". உண்மையென்பது சத்தம் போட்டுக் கதைப்பவர்களதும் (வாயுள்ளவர்களதும்) கையில் ஆயுதங்கள் வைத்திருப்போரதும், உடமையாகயிருக்கிறது. இந்த நிலைமையினால் தான் பாலிப்பனவின் "உண்மை"களும் கூட அடக்கம் பெற்று விடுகின்றன.

எவ்வளவு தான் நாம் முயன்று பார்த்தாலும் உண்மைகள் என்பது பலம் வாய்ந்தவர்களின் கட்டுப்பாட்டில் தான் இருக்கிறது என்று சொல்கிறார். ஒன்டாட்ஜி. உண்மைகளை அவர்கள் தான் உருவாக்குகிறார்கள் என்கிறார். அனில் இலங்கையை விட்டுப் போகிறாள். சரத் கொல்லப்படுகிறான். பாலிப்பன புறக்கணிக்கப்பட்ட ஒருவனாக காட்டுக்குள் காலம் தள்ளுகிறான். இப்படியே உண்மையின் தேடலில் ஈடுபட்டவர்களது முடிவுகள் அமைந்தது போகின்றன. இந்த "உண்மைத் தேடல் மூலமாக எந்தப் பாதிப்புமற்று இருக்கிற ஒரே பொருள் அந்த மண்டையோடு மட்டும் தான்!

நாவலின் இறுதியில் இது வரையான இயல்போட்டத்திற்கு தடையேற்படுத்துகிற விதமாக இலங்கை ஜனாதிபதி மீதான தற்கொலைக் தாக்குதல் நிகழ்வு சொல்லப்படுகிறது. இதனால் கதை இது வரையும் ஏற்படுத்தி வந்த உணர்வலைகள், இயல்புத் தன்மையில் சற்று தளம்பல் ஏற்படுகிறது. அந்தச் சம்பவம் வரையிலும் நாவலில் சொல்லப்பட்டு

⇨19

நன்றி - நூலகத்திட்டம்



# அகதி

அக்கரைபற்று, கோளாவில், பனங்காடு, தம்பட்டை போன்ற இடங்களில் இருந்து அகதிகளாக வந்த சனக்கூட்டங்களால் தம்பிலுவில், திருக்கோயில் கிராமத்தில் உள்ள ஆலயங்களினதும் பாடசாலைகளினதும் கட்டிடங்களும் மண்டபங்களும் நிரம்பி வழிந்து கொண்டிருந்தன.

அகதிகளாக வந்து சேர்ந்தவர்களுக்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் திருக்கோயில் தம்பிலுவில் பொதுமக்கள் மும்முரமாக இருந்தார்கள்.

அவரின் வயதுக்கு அகதி முகாம்களில் உள்ள இடநெருக்கடி சரிப்பட்டுவராது என்பதால் திருக்கோயிலில் உள்ள துாரத்துச் சொந்தக்காரர் ஒருவரின் வீட்டில் கொண்டு வந்து சேர்க்கப்பட்டார் அவர்.

கொண்டு வந்து விடப்பட்ட மத்தியானத்திலிருந்து நடுச்சாமம் பன்னிரண்டு மணிவரை அகதிமுகாமில் இருந்த அவரின் மூத்தமகள் அடிக்கொருதரம் வந்து அவரைப் பார்த்து விட்டு போனாள்.

அந்த வீட்டுக்கார இளம் பெண் கொடுத்த இரவுச் சாப்பாட்டை வேண்டாமென்று மறுத்தவர், கொடுத்த கோப்பியை மட்டும் குடித்து விட்டு,
வெளிமண்டபத்துக்குள் விரித்துக் கிடந்த பாயில் படுத்தவர் நித்திரை வராமல் பல தடவை புரண்டு புரண்டு கிடந்தார்.
இதனை அவதானித்த வீட்டுக்காரப் பெண் "என்ன அப்பச்சி நித்திரை வருகுதில்லையோ.
வீட்டுக்குள்ள புளுக்கமெண்டால் வெளியில போய் படுங்கோவன்.
நாங்களும் மண்டபத்துக்குள்ள தான் படுக்கிறம் என்னவும் தேவையெண்டால் கூப்பிட்டால் நான் வருவன்" என்று சொல்ல பாயைச் சுறுட்டி எடுத்துக் கொண்டு வெளியில் வந்து வாசல் மணலில் விரித்துப் படுத்தார்.

திருக்கோயில் கடல் நெருங்கி வருவது போல் ஓசை எழுப்பிக் கொண்டிருந்தது. கடலில் பட்டு வந்த காற்று அவரின் முதிர்ந்த தேகத்தில் பட்ட போது சிறிது குளிர்ந்தது.
நள்ளிரவு தாண்டி இரண்டு மணியாகி இருக்கும்.
நித்திரை என்பது அவரின் கண்களிடம் வர மாட்டேனென்று அடம் பிடித்துக் கொண்டிருந்தது.

மல்லாக்கப் படுத்திருந்த அவரைப் பார்த்து நையாண்டி செய்து சிரிப்பது போல், ஓடும் மேகத்துக்குள்ளிலிருந்து மறைந்து வெளிப்பட்ட நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருந்தன.


எந்தவிதமான கவலைகளோ, சிந்தனைகளோ பொறுப்புக்களோ இல்லாத இந்த வயதில் தன்னிடம் நித்திரை மட்டும் இன்று வரமறுக்கின்றதே ஏன் என்று யோசித்தார் அவர்.
எதையோ எடுத்து வைக்க மறந்து விட்டது போலவும், எதையோ இழந்துவிட்டதாயும் அவரின் சிந்தனை அலைமோதியது.
தான் சிறுவனாக இருந்த போது தன்தகப்பனுடன் காட்டுக்குள் சென்று வெட்டி வந்த தேக்கு மரங்களால் கட்டப்பட்ட தனது வீட்டையும், தனது மூத்த மகள் பிறந்த போது தன் கையாலேயே செய்த தொட்டில் இப்போதும் வீட்டின் விட்டத்தில் கட்டி தொங்க விடப்பட்டிருப்பதையும், தன்பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், கொள்ளுப்பேரன், பேத்திகள் என எத்தனையோ குழந்தைகள் ஆடி உறங்கிய அந்தத் தொட்டில் இப்போது அவரின் மனக்கண்முன் அந்தரத்தில் ஆடுவதையும் பார்த்தார்.

கிணற்றடியில் கட்டியிருந்த கூட்டுக்குள் அடைக்கப்பட்டிருந்த கோழிகள் சிறகடித்து சோம்பல் முறித்துக் கொள்ளும் சத்தம் அவரின் காதுகளுக்கு கேட்கின்றது. அவரின் வாழ்நாளில் இதுவரைக்கும் இரவில் படுக்கும் முன் திருப்புகழோ, திருவாசகமோ பாடாமல் படுத்ததேயில்லை. அந்தக் காலத்தில், தான் இயற்றி மெட்டுக்கட்டி தன் கையாலேயே எழுதி முடித்து எத்தனையோ தடவைகள் சுற்றுபட்டு கிராமங்கள் அனைத்திலும் மேடையேற்றிய பாஞ்சாலி சபதம், மயானகாண்டம் போன்ற நாட்டுக்கூத்துப் புத்தகங்களையெல்லாம் பழைய மரப்பெட்டிக்குள் போட்டுப் பூட்டி விட்டு அவற்றை அனாதரவாக விட்டுவிட்டு வந்து விட்டதாய் அவரை அவரின் மனச்சாட்சி உறுத்திக் கொண்டிருந்தது.

அந்த நடுநிசி நேரத்து நிஷப்த-வேளையிலும் ஊருக்குள் எங்கோ தொலை-விலிருந்து மனிதர்களின் பேச்சுக் குரல்களும், மோட்டார்கள் சைக்கிள்களின் உறுமல்களும் கேட்டுக் கொண்டு தானிருக்கின்றது.
அகதியாக வந்திறங்கியவர்களுக்குரிய தற்காலிக தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தாலும், அவர்களின் ஊர் நிலைமை சீராகி அவர்கள் திரும்பும் வரைக்கும் அவர்களுக்குரிய தங்குமிட வசதி, சாப்பாட்டு வசதிகளை ஏற்பாடு செய்ய தம்பிலுவில், திருக்கோயில் இளைஞர்கள், இரவிரவாக ஓடித் திரிகின்றார்கள் என்பதை ஊகித்துக் கொண்டார் அவர்.

"என்ன அப்பச்சி நித்திரை வருகுதில்-லையோ. புது இடம் தானே அது தான் அப்பச்சிக்கு நித்திரை வருகுதில்லப் போல" மண்டபத்துக்குள் படுத்திருந்த வீட்டுச்-சொந்தக்காரப் பெண் கேட்டாள்.
அவளுக்கு அவரின் மனதுக்குள் அல்லாடும் உணர்வுகள் என்னவென்று தெரியும் .

தனது பழைய நினைவுகளிலும் தன் பழங்கால பொருட்களினதும் எண்ணத்தில் மூழ்கி இருந்தவரின் காதுகளில் திருக்கோயில் ஆலயத்திலிருந்து வந்த சலசலப்புச் சத்தம் விடிந்து விட்டது என்பதை உணர்த்த எழுந்து தலைக்குக் கீழ் வைத்திருந்த சால்வையை உதறித் தோளில் போட்டுக் கொண்டு பாயைச் சுருட்டி சுவரில் சாய்த்து நிறுத்தி விட்டு கிணற்றடிக்குச் சென்று கை, கால், முகம் கழுவி விட்டு கடலிலிருந்து எழுந்து வந்த சூரியனை நமஸ்கரித்து விட்டு வாசலுக்கு வந்த போது வீட்டுக்காரப் பெண் கொடுத்த தேனீரை வாங்கிக் குடித்தார்.



"கொஞ்ச நேரம் பொறுத்துக் கொள் அப்பச்சி இடியப்பம் அவிச்சித் தாறன்" என்று சொன்ன அந்தப் பெண்ணின் பேச்சை காதில் வாங்கிக் கொள்ளாதவராக வெளியேறி திருக்கோயில் ஆலய வீதியை அடைந்த போது

"எலக்கோ அப்பா எங்க போறாய்? இஞ்சநில்லுகா" என்ற குரல் கேட்டு திரும்பிப் பார்த்த போது ஆலயக் கிணற்றடியில் கூடி நின்ற பெண்கள் கூட்டத்திலிருந்து தன் மகள் தன்னை நோக்கி நடந்து வருவதைக் கண்டார்.

"தண்ணியெடுத்து வைச்சிற்று உன்னப் பார்க்கத் தான் வருவமெண்டு இருந்தன். நீ எங்கப்பா போறாய்?"

"ஒரு இடத்துக்கும் இல்லகா சும்மா றோட்டுப் பக்கம் தான்" என்று விட்டு நடந்தார்.

"துாரத்துக்கு எங்கையும் போய் கண்கடை தெரியாம தொலைஞ்சு போயிடாம கெதியா வந்திரப்பா" நடந்து கொண்டிருந்தவரின் காதுகளில் மகளின் குரல் கேட்டுக்கொண்டேயிருந்தது.

நடந்து வந்து திருக்கோயில் ஊரின் பிரதான வீதியை அடைந்த போது வீதியெல்லாம் சனக் கூட்டமாகவே தெரிந்தது.
அக்கரைப்பற்று பனங்காடு கோளாவில் தம்பட்டை சனங்களெல்லாம் ஒன்று கூடியதாய் அந்த ஊர் வருடாந்த தீர்த்தோற்சவ காலம்போல கலகலப்பாக இருந்தது.

அங்கிருந்து நடந்து தம்பிலுவில் முச்சந்தி சந்தையடிக்கு வந்தபோது சந்தை நிரம்பிவழிந்தது.

காய் கறிகளும், மீன்வகைகளும் விற்பனையாகிக் கொண்டிருக்கும் காட்சியை கொஞ்சநேரம் ரசித்து புதினம் பார்த்துக் கொண்டிருந்த போது,

"ஏங்கா அப்பச்சி. என்ன இஞ்சாலப் பக்கம்" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தார். மேகலா தியேட்டர் வாசலில் நின்றிருந்த அவனை உற்றுப் பார்த்தார்.
கோளாவில் சங்கரப்பிள்ளை ஓடாவியாரின் பேரன்.

"ஒண்டுமில்லடா. சும்மா புதினம் பார்ப்பம் எண்டு வந்தன்" என்று விட்டு தம்பிலுவிலை நோக்கியே நடந்து கொண்டிருந்தார்.

கொஞ்சதுாரம் நடந்து விட்டுத் தான் நடந்து வந்த வழியை திரும்பிப்-பார்த்த போது தன்னை விட்டு சனங்கள் அன்னியப்பட்டு விட்டது போல் வீதியில் சனநடமாட்டம் குறைந்து காணப்பட்டது.

"எலக்கோ மனிசா உனக்கென்ன பைத்தியமோகா புடிச்சிருக்கு.
இன்னுமேன்கா இஞ்சாலப் பக்கம் நடந்து கொண்டு போறாய்" தன்னை எதிர்கொண்டு வந்த மீன் பெட்டி சைக்கிள்காரர் தனக்கு ஏசிக்கொண்டு போவதை அவர் கவனத்தில் கொள்ளாமல் நடந்துகொண்டே இருந்தார்.

"ஏங்கோ புள்ளே எங்ககா புள்ளே போறாய்" குரல் கேட்டு திரும்பிப் பார்த்தார். றோட்டோரத்து குடிசை யொன்றின் முன்னால் குந்தியிருந்த தன்னையொத்த வயதுடைய ஒரு ஜீவன் ஒன்று தன்னில் இரக்கப்பட்டு கேட்ட கேள்வியில் ஒரு நிமிடம் நின்று நிதானித்து விட்டு சும்மா இங்கால தாங்கா என்று சொல்வதுபோல கையால் சைகை செய்து காட்டி விட்டு நடந்து கொண்டே இருந்தார்.

"இனியும் அங்காலப் பக்கம் போகாதேகா. தம்பட்டை வரைக்கும் ஆமிக்காரன்கள் வந்து நிற்கிறானுகளாம்" என்று இன்னுமொரு மீன்பெட்டி சைக்கிள்காரன் சொல்லி விட்டு அவசர அவசரமாக ஓடினான்.

தம்பிலுவில் எல்லையைக் கடந்து களுதாவளை பிள்ளையார் கோயிலை அடைந்த போது எந்தவித சனநடமாட்டமும் இல்லாத தனித் தீவொன்றுக்கு வந்து சேர்ந்து விட்டதாய் உணர்ந்தார் அவர்.

களுதாவளை கோயில் மணலில் சிறிது நேரம் குந்தியிருந்துவிட்டு மீண்டும் எழும்பி

மலர்ச்செல்வன்

நன்றி - நூலகத்திட்டம்



நடக்கத் தொடங்கினார்.
களுதாவளை காட்டு வழிப் பாதையைக் கடந்து பெரிய முகத்துவாரத்தை அடைந்த போது சூரியன் உச்சிக்கு வந்து அவரின் சுருங்கிய தேகத்தைச் சுட்டெரிக்கத் தொடங்க தோளில் கிடந்த சால்வையை எடுத்து தலைக்குமேலே விரித்துப் பிடித்து சூரியனுக்கு சமாதானக்கொடி காட்டியபடி நடந்து கொண்டு முகத்துவாரம் தாண்டி தம்பட்டைக்குள் நுழைந்த போது தொண்டை காய்ந்து தண்ணீர் தாகமெடுத்தது அவருக்கு.

கொஞ்சத்தூரம் நடந்தவர் தம்பட்டையின் வீதியோரத்தில் இத்திமரம் ஒன்றின் கீழ் தென்னம் குத்தியின் மேல் வைக்கப்பட்டிருந்த மண்பானை ஒன்றில் குடிநீர் என்று எழுதியிருப்பதைக் கண்டதும் பானையின் அருகில் சென்று கொஞ்சம் தண்ணீர் எடுத்துக் குடித்துவிட்டு, இத்தி மரத்தின் கீழ் கொஞ்சநேரம் இருந்தார்.
எத்தனை நாள் தண்ணீரோ தெரியாது இருந்தும் தாகமெடுத்து வரண்டு போன அவரின் தொண்டைக்கு இதமாகவே இருந்தது அது.

மீண்டும் எழுப்பி நடக்கத் தொடங்கியவர் தம்பட்டையை தாண்டி சின்னமுகத்துவாரத்தை அடைந்த போது வீதியின் தாரை சூரியன் கொதிக்க வைத்துக்கொண்டிருந்தான்.
உச்சி வெயிலில் கொதித்த தார் பாதம் பட்ட போது அவர் பதறித் துடித்து சிறுபிள்ளை-போல் ஓடிக் கொண்டிருந்தார்.
இருபக்கமும் நீர் பாலம் போன்ற வீதி கொதிக்கும் தாருக்கு தப்பி விலத்தி நடக்க இடமில்லை.
விரைவாக ஓடியும் நடந்தும் முகத்துவார எல்லையைக் கடந்து நாற்பதாம் கட்டைக்குள் நுழைந்தவர் தாருக்குத் தப்பி வீதியின் ஓரத்தில் உள்ள புல்தரையில் நடந்த போது புல்லுக்குள் மறைந்து கிடந்த நெருஞ்சி முட்கள் அவரின் பாதத்தைப் பதம் பார்க்க காலில் குத்திய முள்ளைக் குனிந்து எடுத்து எறிந்துவிட்டு நிமிர்ந்து பார்த்தார்.
நாற்பதாம் கட்டையைச் சேர்ந்த ஆற்றுப்-பகுதிக்கு அப்பால் உள்ள தனது ஊரைப் பார்த்தார்.
குவிந்து கிடந்த பச்சைப் புல்மேடு போல் தூரத்தே பசுமையாகத் தெரிந்த தனது ஊரைக் கண்டதும் அவரின் உள்ளகத்துக்குள் ஒரு சிலிர்ப்பு ஏற்பட்டது.

இன்னும் கொஞ்சம் தூரம் நடந்து நாற்பதாம் கட்டையைக் கடந்து விட்டால் அங்கிருந்து ஆற்றுப் பகுதிக்குள் இறங்கி குறுக்கு வழியில் ஊருக்குள் போய்ச் சேர்ந்து விடலாம் என்ற அங்கலாப்பில் வேகமாய் நடந்தவர் "அடோ நில்லுடா" என்ற குரல் கேட்டு திரும்பிப் பார்த்தார்.

நாற்பதாம் கட்டையில் உள்ள ஒவ்வொரு வீடுகளுக்குள்ளிருந்தும் வெளிப்பட்டு ஓடிவந்த ஆமிக்காரர்கள் அவரைச் சூழ்ந்து நின்று கொண்டார்கள்.

"அடோ நாக்கியா கொஹேயத யண்ணே",

அவர் எதுவும் புரியாமல் நின்றார்.

"ஏய் நாக்கியா ஓயாட்ட பிசுத?"

"அடோ ஹகண்ட ஓனத" என்றபடி துப்பாக்கியை ஓங்கியபடி ஓடிவந்த ஆமிக்காரன் ஒருவனை இன்னுமொரு ஆமிக்காரன் தடுத்து நிறுத்தினான்.

"எப்பா மச்சான் ஹகண்ட எப்பா?"

அடிக்க வந்தவனிடம் தடுக்க வந்தவன் சொல்ல அவன் மீண்டும் அடிக்க ஓங்க அவர் சிறுபிள்ளைகள் போல் தன்முகத்துக்கு நேரே கையை உயர்த்திக் குனிந்து கொண்டார். "அடோ சொல்லுடா ஹொயத யண்ணே.

அவர் புரியாமல் நின்றார். அவன் மீண்டும் அடிக்க ஓங்க மற்றவன் மீண்டும் தடுத்தான்.

"எப்பா மச்சான். நாக்கி மினிசு. பவ் மச்சான்" என்றான். இதற்கிடையில் எங்கோ இருந்து ஓடிவந்த ஆமி பெரியவனை கண்டதும் சூழ்ந்து நின்றவர்கள் விலகி நின்றார்கள்.

"அடோ கெலவா எங்க போறது" ஆமி பெரியவன் தமிழிலேயே கேட்டான்.

"வெத்திலை உரல எடுக்க மறந்திட்டன் ஐயா" அது தான் எடுத்துட்டு வருவம் எண்டு போறன்.

அவர் சொன்னது பெரியவனுக்குப் புரியவில்லை. தமிழ் தெரிந்த ஓர் ஆமிக்காரன் பெரியவனுக்கு விளங்கப்படுத்திய போது எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்து விட்டு மறுவினாடியே முகங்களை இறுக்கமாக்கிக்-கொண்டார்கள்.

"ஏய் கெலவா சீக்கிரம் போய் உண்ட உரல எடுத்துக் கொண்டு இதே வழியால திரும்பி வரவேணும்.
நீ வரல்லையெண்டால் நாங்க வந்து உன்ன சாக்காட்டுறது சரியா?" பெரியவன் சொன்னதும் அரிவரி வகுப்பு மாணவன் போல் தலையாட்டி விட்டு நடந்தார் அவர்.

நாற்பதாம் கட்டையைக்
கடந்து வந்து
ஆற்றுப்பகுதிக்குள்
இறங்கிய போது காய்ந்து
சருகாய் போயிருந்த நாணல்
புற்கள் காலில் மிதிபட்டு
சர்...சர் என்று முறிந்து
அவரின் காலில் குத்தியது.

காய்ந்த நாணல்
புல்தரையை தாண்டி
ஆற்றுப்பகுதிக்குள்
இறங்கிய போது கோடை
காலத்து வெயிலில் காய்ந்து
வெடித்து போயிருந்த
இட்வுகளுக்குள் அவரின்
கால்கள் இடர்பட்டு
விழுந்து எழும்பிக்
கொண்டிருந்தவர் நிமிர்ந்து
பார்த்தார்.
பதியம் போட்ட நாற்று
மேடை பயிர்களைப் போல்
தூரத்தில் தெரிந்த தனது
ஊரின் தென்னை மரங்கள்
கண்ணில் பட்டதும் காலில்
ஏற்பட்ட வலியை
மறந்தவராய் நடக்கத்
தொடங்கினார்.

காய்ந்து வெடித்துப்
போன ஆற்று நிலப்பரப்பை
கடந்து காய்ந்தும் காயாமல்
உறைந்து போயிருந்த சேற்று
நிலத்தில் அவர் கால்
வைத்தபோது உறைந்து போயிருந்த சேறு அவரின் கால்களில் சப்பாத்துகளாய் அப்பிக் கொள்ள அவரின் பாதங்கள் தூக்கி வைக்க முடியாதளவுக்கு பாரமாயின.

சேற்றுப் பகுதிகளையும், தாண்டி ஆற்றுப்பகுதியின் மறுகரையைத் தொட்டு ஊருக்குள் உள்ளிட்ட போது ஊர் உறங்கிப் போய் மயான அமைதியில் இருந்தது.

ஊருக்குள் உள்ளிட்டவர் நேராகத்தன் வீட்டுக்கு வந்து கால்களை கழுவிக் கொள்வதற்காக கிணற்றடிக்கு சென்று கிணற்றை எட்டிப் பார்த்தார்.
கமுகம் பூக்களாலும் தென்னம் பூக்களாலும் ஆடைகட்டி கிணற்று நீர் தன்னை மறைத்துக் கொண்டிருந்தது.
துலாவை உள்ளேவிட்டு வாளியால் பூவாடை விலத்தி தண்ணீரை இறைத்து காலைக் கழுவிவிட்டு இடுப்பில் செருகி இருந்த சாவியால் வீட்டைத் திறந்த உள்ளே போனார்.

சாவியை விட்டுக் கதவைத் திறந்த போது என்னை விட்டு எங்கே போனாய் என்று அவரிடம் அழுவது போல் கதவு கிறீச் சென்று சத்தமிட்டது.

உள்ளே போய் தனது பழைய மரப்-பெட்டியைத் திறந்தார்.
கம்பராமாயணம், கந்தபுராணம் போன்ற புத்தகங்களுடன் தான் எழுதி இயற்றிய கூத்துக் கொப்பிகளான மயான காண்டம், பாஞ்சாலி சபதம் போன்றவற்றை வெளியில் எடுத்தபோது கவீர் என்ற சத்தத்துடன் பெட்டியின் மூலையில் ஏதோவிழ கையை தடவிய போது சோடி சல்லாரி கையில் தட்டுப்பட அதை வெளியில் எடுத்துப் பார்த்தார்.
ஐம்பது வருடங்களுக்கு முந்தியது. இப்போதும் சேதாரமின்றி பளிச்சிட்டது. புத்தகங்களுடன் அதையும் சேர்த்து எடுத்துக் கொண்டு பெட்டியை மூடிவிட்டு வந்து மூலையில் கிடந்த சீலைப்பையொன்றுக்குள் அவற்றை வைத்து விட்டு அண்ணார்ந்து பார்த்தார். தன் வாழ்நாளில் எத்தனையோ குழந்தைகளைத் தாலாட்டிய தொட்டில் முகட்டில் அனாதையாக தொங்கியதைக் கண்டதும் அவரையும் அறியாமல் பெரிய மூச்சு காற்றொன்று அவரின் நெஞ்சுக் கூட்டிலிருந்து வெளிவந்தது.

மீண்டும் கதவைப்பூட்டிவிட்டு சாவியை புத்தகப் பையினுள் போட்டு விட்டு வாசலுக்கு வந்த போது வாசலில் கிடந்த பழைய செருப்புச் சோடியொன்று



கண்ணில்பட, வரும்போது தன் காலில் குத்திய நெருஞ்சி முட்கள் நினைவில் வர அந்தச் செருப்புக்களையும் எடுத்து வந்து மாமரத்தின் அடியில் வைத்து விட்டு குசினிக்குள் சென்றார்.
குசினி அடுப்புக்கல்லில் இருந்த தீப்பெட்டி-யைக் கண்டதும் ஏதோ நினைத்தவராய் விறகுகளை அடுக்கி அடுப்பை எரிய வைத்து விட்டு வெளியில் வந்து கிணற்றடியில் நின்ற மரவள்ளிச் செடியைப் பிடித்து இழுத்தார்.
அவரின் முதுமையோடு இசைந்து வர விருப்பமில்லாமல் முரண்டு பிடித்தது மரவள்ளிச் செடி.
கிணற்றில் ஒரு வாளித் தண்ணியை இறைத்து. மரவள்ளிச் செடிக்கு நீரூட்டினார்.
குந்தியிருந்து சிறுபிள்ளைகள் விளையாடுவது போல் மரவள்ளியின் அடிமண்ணை கைகளால் பிராண்டி தீய்த்த போது ஒரு குட்டையான தடித்த கிழங்கொன்று தன் முகத்தைக் காட்ட டபக்கென அதை முறித்து எடுத்துக் கொண்டு மீண்டும் பூனைபோல் மண்ணை மூடினார்.

குசினிக்குள் சென்று எரிந்து தணலாகிப் போயிருந்த அடுப்புக்குள் கையிலிருந்த கிழங்கைப் புதைத்துவிட்டு வெளியில் வந்து வீட்டை ஒரு தரம் சுற்றி வந்தார்.
பக்கத்து வீட்டில் கட்டிக் கிடந்த ஓர் ஆட்டை நாலுக்கு நாய்கள் சுற்றிநின்று குரைத்துக-கொண்டிருந்ததைக் கண்டவர் கம்பி வேலிக்குள்ளால் குனிந்து சென்று நாய்களை விரட்டிவிட்டு ஆட்டுக்குட்டியை கயிற்றில் பிடித்து இழுத்து வந்து கிணற்றடி மரவள்ளிச் செடிகளை கடித்துத் தின்ன விட்டார்.

தன்னைக் கொத்துவதற்காக ஓடிவந்த காகத்திடமிருந்து தப்பி மாமர உச்சிக்கிளைக்கு ஓடிய அணில் ஒன்று அவரை திரும்பிப் பார்த்த போது அதை அவர் மனதுக்குள் ரசித்து தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டார்.

குளிக்க வேண்டும் போல் இருந்தது அவருக்கு.
தோளில் கிடந்த சால்வையையும் இடுப்பு வேட்டியையும் அவிழ்த்து கிணற்றுக் கட்டில் வைத்து விட்டு கோவணத்தோடு நின்று கொண்டு தண்ணியை இறைத்துக் குளித்தார்.
எத்தனை வாளி இறைத்திருப்பாரென்று அவருக்கே தெரியாது.
ஆசைதீரும் வரை குளித்தார்.
குளித்து முடித்தவர் வேட்டியை உடுத்திக் கொண்டு கோவணத்தை உருவி இழுத்து பிழிந்து கொடியில் காயப்போட்டு விட்டு சால்வையால் முகத்தையும் முதுகையும் துடைத்து விட்டு நிமிர்ந்து பார்த்தார்.
மாமர உச்சிக்கிளையில் இருந்த அணில் இவரையே பார்த்துக் கொண்டிருந்தது.
இவர் தன்னைப் பார்ப்பதைக் கண்ட அணில் வேறு கிளைக்குத் தாவிய போது ஏற்பட்ட மாவிலை சரசரப்பு சத்தத்திலிருந்து தான் பகலிலும் அந்த ஊர் எவ்வளவு நிஷப்தமாக இருக்கின்றது என்பதை உணர்ந்து கொண்டார்.

கிணற்றடியை சுற்றி புல்-முளைத்திருந்தது.
குந்தியிருந்து அவற்றைப் பிடுங்கி எறிந்தார்.
நேற்றிரவு முழுவதும் நித்திரையில்லை.
பகல் முழுவதும் நடை, வெறும் வயிற்றோடு ஒரு குளிப்பு எல்லாமுமாய் சேர்ந்து அவரின் பசியை தூண்டி விட்டது.
நெருப்பினுள் வெந்த கிழங்கின் வாசனை குசினிக்குள்ளிலிருந்து வந்து மூக்கில் முட்டிய போது பசிமேலும் வயிற்றைக்கிள்ள குசினிக்குள் சென்று பார்த்த போது தணலுக்குள் புதைத்திருந்த கிழங்கு இலவம் பஞ்சுபோல் வெடித்து விரிந்திருக்க கிழங்கை இழுத்து வெளியில் போட்டுவிட்டு தண்ணீரை தெளித்து அடுப்பை அணைத்துவிட்டு கிழங்கை எடுத்துக் கொண்டு வெளியே வந்தார்.

மாமரத்தின் கீழே சால்வையை விரித்தார். கொண்டுபோக எடுத்து வைத்திருந்த சீலைப்பையை பக்கத்தில் வைத்தார். விரித்திருந்த சால்வையில் இருந்து கொண்டு கிழங்கை உரித்து துண்டாக்கி வாய்க்குள் திணித்த போது சுட்டவாசமும் சேர்ந்த ருசி அவரின் முகத்தில் தெரிந்தது. அவருக்கு இருந்த பசியில் கிழங்கு முழுவதையும் தின்று முடித்தவர் எழுந்து வந்து கிணற்றில் தண்ணி அள்ளி குடித்தபோது சூரியன் மேல் வானத்தில் இறங்கிக் கொண்டிருந்தான்.

"சீக்கிரமாய் போயிட்டு திரும்பி வரவேணும். நீ வரயில்லையெண்டால் நாங்க வந்து உன்ன சாக்காட்டுறது?" ஆமிக்காரப் பெரியவன் சொன்னது நினைவுக்கு வர அவசர அவசரமாய் போய் கொடியில் தொங்கிய கோவணத்தை தொட்டுப் பார்த்தார் அது காயாமல் ஒட்டி ஈரமாகவே இருந்தது.

மீண்டும் வந்தார்.
விரித்திருந்த சால்வையில் குந்தினார்.
நேற்றிரவை கண்முழிப்பு, நடந்த களைப்பு, வயிறு நிறைய தின்ற கிழங்கின் திகட்டல். எல்லாமுமாய் சேர்ந்து அவருக்குள் ஒரு அசதியை ஏற்படுத்த அவரையும் அறியாமல் அவர் தன் உடலை சால்வையில் சாய்த்துக் கொள்ள அவரிடம் அனுமதி பெறாமலேயே அவரின் கண்கள் சோர்ந்து மூடிக்கொள்ள அவரிடம் இருந்து பெரியதொரு மூச்சுக்காற்று வெளியேறியது.

சூரியன் மறைந்து இருளத் தொடங்கியது. சீலைப்பை அனாதரவாக அவருக்கு அருகில் கிடந்தது. ஒட்டிப் போய் ஈரமாய் கொடியில் தொங்கிய கோவணம் காய்ந்துபோய் காற்றில் பறந்துவந்து அவரின் காலடியில் கிடந்தது.
இவைகள் எல்லாவற்றையும் மறந்தவராய் அவர்...

நன்றி - நூலகத்திட்டம்



## நினைவுக் குறிப்புகள் – 6

# பீற்றர் கெனமனின் முத்தாய்ப்பு!

நான் பல்கலைக்கழகத்தில் சேர்ந்த முதல் நாளே எஸ்ட்மன் விக்ரமசிங்கவிற்கு என்னை அறிமுகப்படுத்தும் அளவுக்கு, தனது வழிகாட்டல் உதவியுடன் நான் கற்ற எனது மாக்சியக் கல்வி போதுமானதாக இருந்ததென்று டொக்டர் கருதியிருக்க வேணும். அவரை அறிமுகப்படுத்தும் போது எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று நான் தெரிந்து கொண்டிருக்கிறேன் என்று அவர் நம்பினார். அந்த அறிமுகம் கிட்டத்தட்ட புதிதாகப் படைக்குச் சேரும் ஒருவன் படை உயர் அதிகாரிக்கு அறிமுகப்படுத்தப்படுவது போன்று இருந்தது.

ஒரு சிரேஸ்ட சிவில் அதிகாரியின் மகனும் பின்னாளில் லேக்ஹவுஸ் ஆசிரியர் குழுவினது (எனதும்) 'பொஸ்' ஆக இருந்தவருமான எஸ்ட்மன் அப்போது பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் மிக முக்கியமான ஒரு சமசமாஜிஸ்ட்டாக இருந்தார். நான் சமசமாஜக் கட்சியின் கல்வி வகுப்பொன்றில் சேர்ந்து கொண்டேன்.

ஒருநாள் வகுப்பு கிட்டத்தட்ட முடிந்து விட்ட நேரம் அங்கு பிலிப் குணவர்த்தன வந்து சேர்ந்தார். இது தான் அவரை நான் முதன் முதலாகச் சந்தித்த சந்தர்ப்பமாகும். பிறகு 1942இல் ஒரு நாடகத் தன்மை நிரம்பிய தருணத்தில் அவரைச் சந்திக்கும் வரை அது தான் கடைசிச் சந்தர்ப்பமாகவுமிருந்தது.

தனிநபர்களுடனும் சிறுகுழுக்கள் மத்தியிலும் மிகவும் அமைதியாகவும் மென்மையாகவும் பேசும் சுபாவம் கொண்ட அவர் 1942 இல் ஒரு பொதுமேடையில் பேசியது ஒரு அற்புதம் கலந்த மாறுதலாக அவரைப் பின்னாளில் சந்திக்கிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எனக்குள் தோன்றிக் கொண்டேயிருந்தது. கட்சியின் கல்வி வகுப்புக்கள் நடந்து கொண்டிருந்த காலத்தில் தான் 1939 கடைசியில் சமசமாஜக்கட்சியின் நிறைவேற்றுக்குழு மூன்றாம் அகிலத்தைக் கண்டனம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது. இதுவே கட்சியின் முதலாவது உடைவுக்குக் காரணமாயும் அமைந்தது.

அன்றைய வகுப்பில் ஒரு மாணவன் அது பற்றி அவரிடம் கேட்டான். அந்த விடயம் தொடர்பாக ஒரு கற்றுக்குட்டியுடன் விவாதிப்பதில் அவர் அவ்வளவு அக்கறை காட்டவில்லை.ஆயினும் அவர் அப்போது சொன்னது எனக்கு ஞாபகம் இருக்கிறது.

அவர் சொன்னார் : 'மூன்றாம் அகிலம் அனேகமாக ஒரு சதைப்பிண்டம் போல் அழிந்து போய் விடும்' பல்கலைக் கழகத்திலிருந்த எங்களைப் போனற மாக்சியக் குஞ்சுகள் மட்டுமல்ல, கட்சியைச் சேர்ந்த பல உறுப்பினர்களும் கூட ட்ரொட்ஸ்க்கியிசத்துக்கும் ஸ்டாலினிசத்துக்கும் இடையில் இருந்த பிணக்குப் பற்றி தெளிவற்றவர்களாகவே இருந்தனர். எனது அன்றைய தத்துவார்த்த ஆலோசகராக இருந்த எஸ்ட்மன் கூட சில மாதங்களுக்கு முன்பு தான் ஒரு உரையாடலின் போது ஹிட்லர்-ஸ்டாலின் ஒப்பந்தத்தை மிகவும் ஆக்ரோஷமாக நியாயப்படுத்திப் பேசியிருந்தார்.

அவர் எனக்குப் படிக்கக் கொடுத்த புத்தகங்களில் புக்காரின் விசாரணை பற்றிய பிரசுரமும் இருந்தது. ஒப்புதல் வாக்குமூலத்தை அடியாகக் கொண்ட அந்த விசாரணை அன்றைய எனது அறிவுக்கெட்டியளவில் ஜீரணிக்கக்கூடிய ஒன்றாக இருக்கவில்லை.

ஆழமாக மாக்சியத்தைக் கற்றவர் என்ற முறையில் வளர்ந்து வரும் அன்றைய மிகச்சிறந்த அறிவாளியும் அனுபவம் வாய்ந்த செயற்பாட்டாளருமான (இந்த விடயம் பற்றிப் பிறகு பேசுகிறேன்) பிலிப் தான் கட்சியை ஸ்டாலினிசத்திலிருந்து தெளிவாக உடைத்துக் கொள்வதற்குக் காரணமானவர் என்று நான் நம்பினேன்.

**அப்போது பல்கலைக்கழகத்தில் ஆசிரியராக இருந்த பொ.கந்தையா (இவர் பின்னாளில் ஒரு கம்யூனிஸ்ட் கட்சி பா.உ வாக இருந்தவர்) ஒரு நாள் தனது அறையில் தேநீர் அருந்த வருமாறு இடதுசாரி சிந்தனையுள்ள சில மாணவர்களை அழைத்திருந்தார்.**

உண்மையில் அவர் சரியாகத் தான் இருந்தார். இல்லாவிட்டால் 1942இல் பிரித்தானியா எடுத்த யுத்த முஸ்தீபுகட்கு கட்சி ஆதரவாக இருந்திருக்க வேண்டி வந்திருக்கும். அவரோ கட்சியோ ட்ரொஸகிசத்துடன் முழுமையாகப் போயிருக்க வேண்டுமா என்பது இன்னொரு கேள்வி. அந்த விடயத்திற்கும் பிறகு வருகிறேன்.


கட்சியின் உடைவு சில மாதங்களுக்குப் பிறகு சில சந்தோசமான அனுபவங்களை எனக்கு விளைவித்தது. அப்போது பல்கலைக்கழகத்தில் ஆசிரியராக இருந்த பொ.கந்தையா (இவர் பின்னாளில் ஒரு கம்யூனிஸ்ட் கட்சி பா.உ வாக இருந்தவர்) ஒரு நாள் தனது அறையில் தேநீர் அருந்த வருமாறு இடதுசாரி சிந்தனையுள்ள சில மாணவர்களை அழைத்திருந்தார்.

அன்று பின்னேரம் அண்மையில் தான் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படித்து விட்டு திரும்பியிருந்த பீட்டர் கெனமனும் ஏ.எம்.பெரேராவும் (பின்னர் இவர் ஆனந்தா கல்லூரியின் அதிபராகவும் அதன்பின் உயர் ஸ்தானிகராகவும் இருந்தவர்.) தற்செயலாக வந்தது போல வந்து சேர்ந்தார்கள். அங்கிருந்த குழுவிற்கு இருந்த அரசியல் ஆர்வம் காரணமாக பேச்சு இயல்பாகவே அரசியலை நோக்கித் திரும்பிற்று.

சமசமாஜக் கட்சியின் உடைவு பற்றியும் மாணவர்களாகிய எங்களில் பல பேரிற்கு அப்போது அதிகம் தெளிவில்லாமலிருந்த ட்ரொஸ்கிசம் ஸ்டாலினிசம் என்பவற்றுக்கிடையேயான வேறுபாடு என்பவை பற்றியும் உரையாடல் தொடங்கிற்று.

நான் ஒரு கட்டத்தில் என்னுடைய அப்போதிருந்த அரைகுறை அறிவுக்குத் தெரிந்ததைக் கேட்டேன் : 'ஆனால் லெனின் தான் சாவதற்கு முன்பாக கட்சியின் செயலாளர் பதவியிலிருந்து ஸ்டாலின் நீக்கப்பட வேண்டுமென்று விரும்பினாரல்லவா?' (மாக்சிஸ்ட் விவாதங்கள் அப்போதெல்லாம் இறையியலாளர்கள் பைபிள் எழுத்துக்களை மேற்கோள்காட்டித் தத்தமது கருத்துக்கட்காக விவாதிப்பது போன்று எழுத்து மூலமான ஆதாரங்களில் தொங்கிக் கொண்டிருந்தன.) 'இல்லை இல்லை' என்று அதை மறுத்த பீட்டர் கெனமன். 'உண்மையில் நடந்தது அது அல்ல' என்று சொன்னார்.

அவர் பிறகு அந்தச் சம்பவத்தில் என்ன நடந்தது என்பது பற்றிய தனது விளக்கத்தைச் சொன்னார். 'லெனின் தனது கடைசிக் கட்சி மாநாட்டில் ஸ்டாலினின் முரட்டுத்தனம் பற்றிக் குற்றம் சுமத்தினார். (அவர் இதைச் சொன்ன விதத்தைப் பார்த்தால் லெனின் சொன்ன குற்றச்சாட்டு ஏதோ சாப்பாட்டறையில் நடந்த ஒரு சில்லறை விவகாரம் பற்றிய குற்றச்சாட்டுப் போன்றே தொனித்தது.)




## தலைமறைவு வாழ்க்கை

### றெஜி சிறிவர்த்தன

இந்தக் குற்றச்சாட்டைப் பற்றி கட்சி கலந்துரையாடியது. கடைசியில் லெனின் அதை வாபஸ் வாங்கிக் கொண்டார். கட்சி ஸ்டாலின் மீது ஒரு நம்பிக்கைத் தீர்மானம் கொண்டு வந்தது.' 'நீங்கள் இதைச் சரி பார்த்துக் கொள்ள வேண்டுமானால் லெனினின் தேர்ந்தெடுக்கப்பட்ட நூல் தொகுதி 10 ஐப் பார்க்கலாம். (அவர் சிறிது நேரம் யோசிப்பது போல இருந்தார். பிறகு ஞாபகம் வந்தது போல சொன்னார்) நான் நினைக்கிறேன்... பக்கம் 352 என்று...'

இந்த ஆழ்ந்த நூலறிவுடன் கூடிய முத்தாய்ப்புக்குப் பிறகு இயல்பாகவே அந்தக் கலந்துரையாடல் முற்றுப் பெற்றது. ஆனால் நான் உண்மையைக் கண்டுபிடிக்க கொஞ்சக் காலம் எடுத்தது. அதாவது, ஸ்டாலினின் முரட்டுத்தனம் தொடர்பான லெனினின் குற்றச்சாட்டு (அது ஒரு துரதிருஸ்டியுள்ள அரசியல் விமர்சனம்) எந்தக் கட்சி மாநாட்டிலும் முன்வைக்கப்பட்டதல்ல.

அது அவர் கட்சிக்கு இறுதியாக எழுதிய இருட்டடிப்புச் செய்யப்பட்ட கடிதத்திலேயே உள்ளது. அத்தடன் அது அந்தக்காலத்தில் லெனினின் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புக்களின் எந்தத் தொகுதியிலும் சேர்க்கப்பட்டிருக்கவுமில்லை. அது பின்னர் முதல்முதலாக 1956இல் குருச்சேவ் நிகழ்த்திய ஸ்டாலினுக்கெதிரான பேச்சின் பின்னரே மொஸ்கோவில் வெளியிடப்பட்டது.

**(இன்னும் வரும்)**

---

# பிள்ளை அழுத கண்ணீர்

## – பட்டுத் தெறித்த சில குறிப்புகள்

– ஓஷோ யதீந்திரா

சூழல் மாசடைதலையும் அதன் தாக்கத்தையும ஒவ்வொரு மனிதரும் ஓரளவேனும் அறிந்தே வைத்திருக்கிறார்கள். அதேவேளை அதன் தாக்கத்தின் வீரியத்தை கட்டுப்படுத்தும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதில் எப்பொழுதும் சிரத்தை அற்றவர்களாகவும் இருக்கிறார்கள்.

மனிதர்களின் இத்தகைய உதாசீனப் போக்கே சூழல் மாசடைதலின் தாக்கம் நாளுக்கு நாள் விஷ்வரூபமெடுத்து உலகை உலுக்கும் பிரச்சினையாக விரிவடைய ஏதுவாக அமைந்துவிட்டது. இத்தகைய பாரிய பிரச்சினையான சூழல் மாசடைதல் என்னும் பரந்த எண்ணக்கருவின் ஒரு பகுதியே காடுகள் அழிக்கப்படுதல்.

காடுகள் அழிக்கப்படுதல் பற்றி நாம் அங்கலாய்க்கும்போதே மறுபுறம் அதன் யதார்த்த நிலையை தரிசிக்க வேண்டிய தேவையும் எம்முன் இருக்கிறது. அதாவது அபரிமிதமான சனப்பெருக்கமும் நாகரீக முன்னேற்றமும் மனித தேவைகளை பெருக்குகிறது. அதிகரித்துவரும் தேவைகள் இயற்கையை ஓரளவு பாதிக்கவே செய்யும். இது தவிர்க்க முடியாத நடைமுறை. எனவே தேவை கருதி காடுகள் அழிக்கப்படுதல் எதிர்க்கப்பட முடியாத விசயமாகிறது.



ஆனாலும் எமது நாட்டில் தேவை கருதிய காடழிப்பை விட சுயநல நோக்கில் சட்ட ரீதியற்ற முறையில் காடுகள் அழிக்கப்படுவதே அதிகம். கடந்த இருபத்தைந்து வருடங்களாக இடம் பெற்றுவரும் கொடிய இனவாத யுத்தமும் காடழிப்பில் பெரும் பங்காற்றியிருக்கிறது. இன்னும் வடகிழக்கில் எதேச்சாதிகார போக்கில் பாதுகாப்பு என்ற போர்வையிலும், குடியேற்றம் என்ற பெயரிலும் பெருமளவில் காடுகள் அழிக்கப்பட்டு வருவது கண்கூடு.

எனவே இங்கு காடழிப்பிற்கான காரணங்களை இனம்கண்டு அபரிமிதமான காடழிப்பிற்கு ஏற்ப மரநடுகை இடம்பெறுகிறதா என நோக்கினால் அங்கும் பூச்சியத்தையே விழிக்க வேண்டியுள்ளது. காடுகள் அழிக்கப்படுவதற்கு ஏற்ப மரநடுகை இல்லாத போதே இயற்கையின் சமநிலை சீர்குலைகிறது. இந்தச் சீர்குலைவே சூழலியலில் பிரச்சினையாக மாற்றமுறுகிறது. ஏனெனில், இயற்கைக்கும் மனிதருக்கும் இடையில் உள்ள உறவு எப்பொழுதுமே சார்பியல் தன்மை கொண்டது. அதாவது மனிதர்களின் செயற்பாடுகள் இயற்கையைப் பாதிக்கும் அதேவேளை இயற்கையின் சமநிலைச் சீர்குலைவு மனிதர்களைப் பாதிக்கிறது.



இத்தகையதோர் சார்பியல் நிலையினை அடிப்படையாகக் கொண்டு காடுகள் அழிக்கப்

⇨17

நன்றி - நூலகத்திட்டம்



# நோபல் பரிசும் தமிழ் எழுத்துக்களும்


ராஜ்கௌதமனின் மெலிந்த தோற்றமும் அதில் தெரிந்த தீவிரமும் எனக்கு மு. தளையசிங்கத்தை நினைவூட்டிற்று. ஆனால், மு.தளையசிங்கத்திடம் காணப்பட்ட சந்தோச சித்தம் அவரிடம் காணப்படவில்லை. அங்குமிதந்த அத்தனை தமிழக ஈழத்து எழுத்தாளர்களையும், கவிஞர்களையும், விமர்சகர்களையும் பார்த்த போது மு.தளையசிங்கம் 1961ல் (தினகரன்) 'மூன்றாம் பக்கம்' என்ற கட்டுரையில் 'இலங்கை எழுத்தாளர்களில் ஒருவன் நிச்சயமாக நோபல் பரிசு பெறத்தான் போகிறான்' என்று எழுதிய வாசகங்கள் என் நினைவுக்கு வந்தன.

இலங்கை எழுத்தாளன் நோபல் பரிசு பெறுவது பற்றி அறுபதுகளில் எழுதிய மு.தளையசிங்கம்! எனக்கு சிரிக்க வேண்டும் போல் இருக்கிறது. இல்லை மு.தளையசிங்கம் சொன்னதெல்லாம் தன் திறமையை அடிப்படையாக வைத்துத் தான். பாரதியிடமும் அப்படி ஒரு நோபல் பரிசு கனவு இருந்தது. அது ரவீந்திரநாத் தாகூர் நோபல் பரிசு பெற்றதால் இன்னும் தூண்டி விடப்பட்டது.

## ஓர நிகழ்வுகள்-5

தமிழ் இனி 2000 மாநாட்டின் போது இடம்பெற்ற மைய நிகழ்வுகளோடு சமாந்தரமாக இடம்பெற்ற ஓர நிகழ்வுகள் இன்னும் சுவையானவை. இது பல்வகைப்பட்ட மன ஓட்டங்களையும், அதன் நிறப்பிரிகைகளையும் காட்டுவனவாக அமைந்தன. எனது பார்வைக்கு அகப்பட்டவற்றின் பதிவே இது.

- மு.பொ.




ரவீந்திரர் புத்திசாலி. தான் வங்கமொழியில் எழுதிய 'கீதாஞ்சலியை' ஆங்கிலத்தில் தானே மொழி பெயர்த்து, ஆங்கில எழுத்தாளரிடையே சுற்றுக்கு விட்டிருந்தார். அவருடைய கையெழுத்துப் பிரதியைத் தான் பிரயாணம் செய்த பஸ் வண்டிகளிலும், கொண்டு திரிந்து வாசித்து ரசித்த இன்னொரு நோபல்பரிசு பெற்ற கவிஞர் W.B.Yeats! ரவீந்திரரிடமிருந்த ஆங்கில ஆற்றல் பாரதியிடமும் இருந்தது. ஆனால், பாரதி இளமையிலேயே இறந்து போனான். இலங்கை எழுத்தாளர் பற்றிக் கனவுகண்ட தளையசிங்கமும் இல்லை. ஆனால், மு. தளையசிங்கத்தின் கனவை நிறைவேற்றக்கூடிய எழுத்தாளர்கள் இன்று இலங்கையில் இருக்கிறார்களா?

என்முன்னே சில கவிஞர்களின், இரண்டொரு எழுத்தாளர்களின் முகங்கள் மிதந்து வந்தன. இருந்தாலும், இவர்கள் இன்னும் பெரிய பாய்ச்சல்கள் காட்டுபவர்களாய் இல்லை. எதற்கும் இவர்களின் ஆக்கங்கள் மூலச்சுவை குன்றாது மொழிபெயர்க்கப்படவேண்டும். இப்போ என் நினைவுகள் தமிழகப்பக்கம் திரும்பியது. அங்கே இன்று எழுதிக் கொண்டிருக்கும் எழுத்தாளர்கள் சிலரின் முகங்கள், முகம் காணாத சிலரின் பெயர்கள் என் நினைவில் எழுந்தன. இவர்களின் ஆக்கங்களும், உரிய முறையில் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்படும் போது சில அதிர்வுகள் தமிழ் வட்டத்துக்கப்பால் ஏற்படலாம்.

இதேவேளை இன்னொரு நெருடலும் எனக்குள் தலைகாட்டிற்று. இன்றுள்ள தமிழகத்தின் சிறந்த எழுத்தாளர் சிலரை லத்தீன் அமெரிக்க எழுத்தாளர்களின் பாதிப்பு - குறிப்பாக ஜோர்ஜ் லூயிஃ போர்க்கே, கபிரியல் கார்சியா மார்குவெஸ் ஆகியோரின் பாதிப்பு - ஒரு நோயாகவே பற்றியுள்ளது. எதை எவ்வாறு நமது சூழலுக்கேற்ப உள்வாங்கிக் கொள்ள வேண்டும் என்பவை பற்றித் தெரியாத அபிநயிப்பு - சீரோ டிகிரி வியாபாரங்கள்!. இச்சந்தர்ப்பத்தில் இலங்கையின் சிறந்த விமர்சகர் ஏ.ஜே.கனகரத்ன, மார்குவெஸின் 'ஒரு நூற்றாண்டு காலத்தனிமை' பற்றிய விமர்சனத்தில் The Magic Gobbles up the Realism என்று எழுதியது என் நினைவுக்கு வந்தது. அது Magical Realism த்தின் பின்னணித்தேவை அறியாது வெற்றுத்தனமாக அபிநயிக்கும் நம் தமிழக எழுத்தாளர்களை நோக்கி விடுத்த எச்சரிக்கையாகவே பட்டது. பாவம், 'உப்புக் கத்தியில் மறைந்த கோணங்கி?!

ஹோட்டல் அற்லாண்டிக்கு முன்னால் எஸ்.ராமகிருஷ்ணன், ஜோர்ஜ் லூயி போர்க்கே பற்றி எழுதிய நூலை எனக்கு அன்புடன் தந்தது நினைவு வருகிறது. ராமகிருஷ்ணன் எழுதிய 'உபபாண்டவத்தை' அரசு எனக்கு கொண்டு வந்து தருகிறார். நல்ல காலம், 'உப்புக்கத்தி' உபபாண்டவத்தைத் துண்டாட வில்லை! ராமகிருஷ்ணன் தன் தனித் தன்மையைத் தக்க வைப்பதில் வெற்றி பெறுகிறார்.

000

ராஜ்கௌதமனுக்கு அருகே சென்றேன். அவர் அமர்வுகள் நடந்து கொண்டிருந்த ஹோட்டலுக்கு முன்னால் நின்று கொண்டிருந்தார். அவர் தனியாக நின்று கொண்டிருந்தது என்னவோ மாதிரி இருந்தது.

**"எனக்கு அவர் நாவல் பிடித்திருக்கிறது. ஆனால், அவர் முண்டுகொடுக்க முயலும் கருத்துக்கள் முற்போக்கானதாக இல்லை. அவர் ஒரு பிற்போக்குவாதி''**

**– ரஞ்சகுமார்**

"உங்களுக்கு மற்ற தலித்தியக்காரரோடு தொடர்பு இல்லையா?" என்ற கருத்துப்பட அவரிடம் கேட்டேன்.

"இல்லை, நான் யாரோடும் சேர்வதில்லை. நான் தனியாகவே என் தலித்திய வேலைகளில் ஈடுபடுகிறேன், நான் எந்த வீண் ஆரவாரங்களிலும் ஈடுபடுவதில்லை" என்று அவர் கூறிய போது அவரின் தனித்தன்மையும் அதில் இருந்த தீவிரமும் தெரிந்தது.

அவரது சகோதரி பாமாவின் பேச்சை மூன்றாம் நாள் அமர்வில் கேட்ட போது அதே தீவிரம் தெரிந்தது. அவர் ஔவையும், மங்கையும், பெண்ணிய இலக்கியம் பற்றி பேசியதன்பின் மேடையேறிய போது, "இதுவரை இவர்கள் பேசியதிலிருந்து நான் பேசப் போகும் பெண்ணியக் கருத்துக்கள் வித்தியாசமானவை. எனது தலித்தியப் பெண்ணியவாதக் கருத்துக்கள் இவற்றிலிருந்து வித்தியாசமானது." என்று அவர் எடுத்த எடுப்பிலேயே முன்னவர்களை வெட்டிப் பேசினார்.

அவர் பேசி முடித்ததும் அங்கு வந்த அம்பையிடம் "உங்கள் பெண்ணியக் கருத்துக்களோடு பாமாவின் பெண்ணியக் கருத்துக்களை எப்படி உள்வாங்கப் போகிறீர்கள்..? உங்கள் கருத்துகளுக்கும் அவருடைய கருத்துக்களுக்கும் நிரம்ப வித்தியாசம் இருக்கிறதே?" என்றேன்.

'இல்லை, இல்லை. நீங்கள் நினைப்பது போல் இல்லை" என்று கூறிக் கொண்டே அவசரசமாக ஏதோ அலுவலாக விரைந்தார் அவர்.

இலங்கைப் பெண்ணிய அமர்வின் போது சூரியகுமாரியும், ரேவதியும் பேசிய பின்னர் பெண்ணியக் கோட்பாட்டின் கருத்தியல் பற்றியும் அதையொட்டிய அவர்கள் ஒழுக்கக் கோட்பாடு பற்றியும் கேள்விக் கேட்க எழுந்த எனக்கு நேரமின்மையைச் சாட்டி அம்பையும் விக்கினேஸ்வரனும் சந்தர்ப்பம் தர மறுத்ததும் என் நினைவில் ஓடிற்று.

இருந்தாலும் ராஜ்கௌதமனிடம் ஏனோ கதைக்காமல் போன விஷயங்கள் அம்பையிடம் கதைக்கக் கூடியதாய் இருந்தது. அவர் ஹோட்டல் அட்லான்டிக்கின் வாசல்படிகளில் அமர்ந்து கவிஞர்(ஞை) மாலதியுடன் கதைத்துக் கொண்டிருந்த போது நானும் என் தலையை நுழைத்தேன்.

பல படைப்புகள் பற்றி சிலாகித்து வந்த அம்பை ஜெயமோகனின் 'விஷ்ணுபுரம் பற்றிக் கூறுகையில்" எனக்கு அதை வாசித்த போது தூக்கந்தான் வந்தது" என்றார்.

எவ்வளவு தான் சீரியஸ்சான உன்னதமான படைப்பாக இருந்தாலும் அதை வாசிப்பவன் நிற்கும் சிந்தனைத் தளத்திற்கு ஏற்பத்தான் அதன் சுவையும் சுவையின்மையும் இருக்கும் என்று எனக்குள் நினைத்தவாறே ஜெயமோகனின் அரசியல் நாவலான 'பின்தொடரும் நிழல்கள்' - பற்றி அவரிடம் கேட்டேன்.

"நாவல் பற்றிய அமர்வில் நான் பங்கெடுத்ததால் தான் அதையும் வாசித்தேன். ஆனால், அது பற்றியும் பெரிசாக சொல்ல மாட்டேன். அதில் வரும் பாத்திரங்கள் எல்லாவற்றுக்குள்ளும் ஜெயமோகன் தான் நிற்கிறாரே ஒழிய அவர் சுட்டும் பாத்திரங்களை நான் காணவில்லை" என்றார்.

"ஆர்தர் கோஸ்லரின் "Darkness at spice noon" நாவலோடு அதை ஒப்பிடுவீர்களா?" நான் கேட்டேன்.

"கோஸ்வாதின் நாவல் மிகச்சிறப்பானது. அதை இதோடு ஒப்பிட முடியாது"

இவ்வேளை ஈழத்தெழுத்தாளர் ரஞ்சகுமார், ஜெயமோகனின் இந்நாவல் பற்றிக் குறிப்பிட்டது. நினைவுக்கு வந்தது.

"எனக்கு அவ்ர் நாவல் பிடித்திருக்கிறது. ஆனால், அவர் முண்டுகொடுக்க முயலும் கருத்துக்கள் முற்போக்கானதாக இல்லை. அவர் ஒரு (Reactonary) பிற்போக்குவாதி"

ரஞ்சகுமாரின் கருத்துக்கள் உண்மையானவையே.

இதை நினைத்தபோது ஈழத்து முற்போக்கு எழுத்தாளர்கள் பற்றிய நினைவு வந்தது. இவர்கள் உண்மையான முற்போக்கு வாதிகளா? தமிழ் இனி 2000ல், சுவில்வரத்தினம் வைத்த கருத்துக்கள் தொடர்பாக ஏற்பட்ட 'கசமுசாக்கள்' என் நினைவில் ஓடின.

(இன்னும் வரும்)

# பிள்ளை அழுத..............

படுவதால் ஏற்படும் சூழல் மாற்றத்தின் தாற்பரியங்களையும் அதன் பல்வேறு சார்பியல் ரீதியான தாக்க வடிவங்களையும் இலகு முறையில் இளம் சிறார்களின் மனதில் வேரூன்றச் செய்து சிந்தனையில் ஆரோக்கியமான ஓர் எதிர்காலச் சந்ததியை உருவாக்கும் முயற்சிக்கான அரங்க நிகழ்வே "பிள்ளை அழுத கண்ணீர்" என்னும் சிறுவர் நாடகம். இந்நாடகமானது இத்தாலிய கம்யூனிச அறிஞர் 'அன்ரனியோ கிராம்ஷியின் குட்டிக்கதை ஒன்றினையும், பாலுக்கு பாலகன் என்னும் குழந்தை மா.சண்முகலிங்கத்தின் நாடகத்தினையும் தழுவி கிழக்கு பல்கலைகழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் சி.ஜெயசங்கர் அவர்களால் ஆக்கப்பட்டது.

1997ம் ஆண்டு காலப்பகுதியில் திருமலையில் பெருமளவு மாணவர்களை உள்வாங்கி சி.ஜெயசங்கர்' அவர்களால் ஐந்து நாட்களாக நடாத்தப்பட்ட பட்டறை நிகழ்வில் இந் நாடகம் அரங்கேற்றப்பட்டதும், இதே காலப்பகுதியிலேயே நாடகத்தின் கருப்பொருள் கருதியும், இதன் சமுதாயத் தேவை கருதியும் "திருமலை கீழைத் தென்றல் கலாமன்றம்" நூலுருவாக வெளிக்கொணர்ந்ததும் குறிப்பிடத்தக்கது.

"பிள்ளை அழுத கண்ணீரின்" ஆக்கமும், அரங்க அளிக்கைக்கான பயிற்சியும் சி.ஜெயசங்கர் அவர்களைச் சாரும். இதனை திருகோணமலையில் பலமுறை அளிக்கை செய்து வெற்றி கண்ட பெருமை திருமலை கீழைத்தென்றல் கலா மன்றத்தைச் சாரும். மன்றமானது இந்நாடகத்தை மொத்தமாக இதுவரை "பதினாறு" தடவைகள் மேடைகாணச் செய்துள்ளது. தவிர கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் சீனன்குடா என்னுமிடத்தில் முழுமையாக சிறுவர்களை மட்டும் உள்வாங்கி முழுநாள் பட்டறை ஒன்றையும் நடாத்தியது.

நாடகத்தின் நடிப்பாற்றல் வெளிப்பாட்டை நோக்கினால் நடிகர்கள், பாத்திரப் பொருத்தப்பாட்டிற்கு அப்பாற்பட்டவர்களாக இருந்தும் மிகவும் சிறப்பான முறையில் நடித்திருப்பது பாராட்டுக்குரியதே. ஏனெனில், இந்நாடகம் சிறுவர்களை முதன்மைப்படுத்தி சிறுவர்களுக்காகவே எழுதப்பட்டது. எனினும், கீழைத்தென்றல் கலாமன்றத்தின் நாடக ஆசிரியரும், நெறியாள்கையாளருமான வி.ஜெகநாதன் அவர்கள் மிகவும் நுட்பமான முறையில் வளர்ந்தவர்களைக் கொண்டும், நெறிப்படுத்தி வெற்றி கண்டிருக்கிறார். எவ்வாறாயினும் சிறுவர்களை முதன்மைப் படுத்துகிற நாடகத்த வளர்ந்தவர்களைக் கொண்டு நிகழ்த்தும் போது நாடகத்தின் காத்திரத்தன்மை ஓரளவு பாதிப்பது திண்ணம்.

இந்நாடகத்தின் இயங்கு பாத்திரங்கள் அனைத்துமே சிறுவர்களை முதன்மைப்படுத்துகிறது. (நாடகத்தின் 14 பாத்திரங்களும்) சிறுவர்களை முதன்மைப்படுத்தும் பாத்திரங்களை வளர்ந்தவர்களை கொண்டு நகர்த்தும் போது அது நிச்சயமாக பார்வையாளர் மனதில் நகைச்சுவையுணர்வை கிளரும். இவ் உணர்வுக் கிளர்ச்சியே பார்வையாளருக்கும் நாடகத்தின் கருத்தியலுக்கும் இடையில் இருக்கும் சிந்தனை ரீதியான தொடர்பை துண்டித்துவிடலாம்.

(அறிஞர் "அன்ரனியோ கிராம்ஷி" இக்குட்டிக்கதை பற்றி தனது மனைவிக்கு எழுதிய கடிதத்தில் "எலி ஒரு ஐந்தாண்டு திட்டத்தையே தீட்டி விட்டது. இது உண்மையில் காடுகளை அழித்ததால் நாசமடைந்த ஒரு நாட்டின் கதைதான். என் இனிய யூலியா (கிராம்ஷியின் மனைவி) தயவுசெய்து இந்தக் கதையை பிள்ளைகளுக்கு சொல். இது அவர்களின் மனதில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதையும் சொல்" என்கிறார்.)

உண்மையில் இச்சிறுவர் நாடகத்தை சிறுவர்களைக் கொண்டு நிகழ்த்தும் போது தான் நாடகத்தின் காத்திரத்தன்மை சிறப்புறுவதுடன் இயற்கையை நேசிக்கக் கூடிய ஓர் எதிர்கால சந்ததியை உருவாக்கும். வாய்ப்பும் அதிகரிக்கும்.

நன்றி - நூலகத்திட்டம்



# வரவுக் குறிப்பு

~ வேலோன்

போராட்டத்தின் பண்புகள் பரவலாகப் புனைகதைகளில் குவிமையப்படுத்தப்பட ஆரம்பித்த எண்பதுகளின் பிற்பகுதியில் எழுத்துலகில் காலடி பதித்த ந.பார்த்தீபன் தனது பதினொரு சிறுகதைகளைத் தொகுத்து 'மனத்துறல்' எனும் மகுடத்தில் வெளிக் கொணர்ந்துள்ளார்.

தேசியப் பத்திரிகைகளில் ஒன்றான தினகரனில் பயணிக்க ஆரம்பித்தாலும் முனைப்பு, உள்ளம், தொண்டன், அகிலம், சுவைத்திரள் என பொதுவான வாசகர்களால் அதிகம் அறியப்படாத சிறு சஞ்சிகைகளிலேயே தனது மனத்துறல்களை பார்த்தீபன் பெரும்பாலும் தூவியிருக்கின்றார்.

இந்த வகையில் தேடல் மிக்க இலக்கிய ஆர்வலர்களாலும், இலக்கியவாதிகளாலும் இலகுவாக இனங்காணப்பட்டிருப்பவர்.

அன்றாட வாழ்க்கையின் அற்புதமான படப்பிடிப்பாக மனத்துறல் தொகுதிக் கதைகளில் அநேகமானவை திகழ்கின்றன. பார்த்தீபன் தான் நிலை கொண்ட பார்வைப் பரப்பின் விசாலத்தால் தனது ஆக்கங்களில் கலை ஆழத்தைப் பேணுகின்றார். இவரின் பாத்திரங்கள் வாசகர் மனதில் ஊசலாடிக் கொண்டிருப்பவையாகவும், கதை நிலைகொள்ளும் பின்னணி, இயல்பானதாகவும் அமைந்து வாசகர்களுக்கு ஓர் பரவசத்தை ஏற்படுத்துகின்றன.

மேலாகக் கதைகூறும் முறைமையில் மாற்றங்கள் ஏற்படும் சிறுகதை இலக்கியப் பரிமாணம் ஒன்றிற்குத் துணை போக எத்தனிப்பனவாக இவரது மனத்துறல் கதைகள் அமைந்திருப்பது மகிழ்வைத் தருகின்றது.

| |
|---|
| **மனத்துறல்**<br>சிறுகதைத் தொகுப்பு<br>**ஆசிரியர் : ந.பார்த்தீபன்**<br>**விலை:** 100.00<br>**வெளியீடு:**<br>**மக்கள் கலை இலக்கிய ஒன்றியம்**<br>**18/13 பூ ரணவத்தை.**<br>**கண்டி** |

பார்த்தீபனின் பதிவுகள் பொருளடக்கத்தில் பல்லினமானவை. சமகால இருப்பினைச் சித்திரிக்கும் இவரது உள்ளொளி அனுபவங்கள் பெரும்பாலான கதைகளில் யாழ்ப்பாணத்தின் பின்னணியிலும் ஓரிரு படைப்புகளில் மலையகத்தின் பின்னணியிலும் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன.

கொழும்பில் தனியார் நிறுவனமொன்றில் கணக்காய்வாளனாகப் பணிபுரியும் சதாசிவம் (மனிதம்), தனக்கென வாழமுடியாது தன் பின்னால் வரிசையாகப் பிறந்திருக்கும் தனது இளைய சகோதரங்களுக்காக தனது வாழ்வை அர்ப்பணிக்கும் ராணி (இலவச இணைப்புகள்), குடும்பசுமை தாங்க மத்திய கிழக்கு சென்று உழைக்கும் ராஜேஸ் (துடுப்பிழந்த ஓடங்கள்) என பார்த்தீபன் தனது பார்வையின் வீச்சினைப் பதிவுசெய்த பாத்திரங்கள் யாவும் மத்தியதர வர்க்கம் சார்ந்தவர்கள்.

தான் வளர்ந்த பாதையையும் தன்னைத் தூக்கிவிட்ட சிலரையும் அடிக்கடி நன்றியுடன் நினைத்து அவர்களுக்கு அர்ப்பணமாக ஊர்ப்பணி செய்யும் சதாசிவம், ஆமி சுற்றி வளைத்தால் எதுவித சிந்தனையுமின்றி கூட்டிச் செல்லும் இளந்தாரித் தோற்றத்தில் இரு மகன்களை ஊரில் வைத்திருந்தும், பாதுகாப்பிற்காக: அவர்களைத் தான் கொழும்பிற்குக் கூட்டி வராததற்குக் கூறும் காரணம் நெஞ்சைக் கனக்க வைக்கின்றது.

"என்ரை பிள்ளை என்னோட கொழும்புக்கு வர...... இங்கை இவனொட்டப் பிள்ளையள் 'அங்கிள் அங்கிளென்று' வந்து என்னோட கதைச்ச பிள்ளையள்... ... அதுகளுக்கு ஏதேனும் நடந்தா... ... என்ரை பிள்ளையளை அந்நியப்படுத்திறதும்...... துரோகந்தான், காட்டிக் கொடுப்புத்தான். எதுவாயிருந்தாலும் என்ரை பிள்ளையளும் நோக்கட்டும்"




புதியதொரு பரிமாணத்தில் விரிவடையும் கதையின் செய்தியும், கதையில் பார்த்தீபனின் மொழிக் கையாள்கையும் போர்க்காலப் படையல்களுள் 'மனிதம்' எனும் மேற்படி கதையினை முக்கியத்துவப்படுத்தி நிற்கின்றன. அத்துடன் அக்கதையின் கனமும், நயமும், தற்கால யதார்த்தத்தினைக் கூறும் அம்சமும் ஏனைய கதைகளினின்றும் அதனை மேவி நிற்கச் செய்கின்றது.

மரணவீடொன்றினை மையப்படுத்தி நகரும் கதையான 'பொய்முகங்கள்' சிறந்ததோர் படைப்பிடிப்பே. ஆனாலும் செ.கணேசலிங்கன், கோகிலா மகேந்திரன், புலோலியூர் தம்பையா, உட்பட பெருவாரியானவர்கள் அறுபதுகள் முதல் இதுபற்றி அலசியிருப்பதால் புதிய அனுபவங்களைக் கொண்ட தனித்துவமிக்க கதையாக இதனைக் கொள்ள முடியாதுள்ளது.

மலையகப் பின்னணியில் படைக்கப்பட்ட கதைகள், மலையகம் தத்தெடுத்த தி.ஞானசேகரன், க.சதாசிவம் போன்றோரது உதாரணம் கொள்ளப்படுகின்ற கதைகள் போல் அமையாததற்கு அப்பெரு நிலத்தில் ஆசிரியருக்கு உள்ள அனுபவக் குறைவையும் ஒரு காரணமாக ஏற்றுக் கொள்ளலாம்.

சமுதாய யதார்த்தம் பற்றிய தெளிவான கூற்றுகளாக புனைகதைகளானது அமைவதோடு, உண்மை நிலைப்பாட்டினைக் கண்டறிந்து அவற்றினை எதிர்கொள்ளும் ஆற்றலும் ஒருங்கே அமையப் பெறுமிடத்தையே உன்னத இலக்கியப் பிரசவத்திற்கான வாய்ப்பு உருவாகுகின்றது. முற்போக்குக் கதையம்சம், உலக இலக்கியப் போக்கின் பரிச்சயமும் பார்த்தீபனிடத்தே வரப்பெறுமாயின் முன்னுரையில் கலாநிதி துரைமனோகரன் கூறுவது போலவே இவரது சிறுகதைகள் மேலும் வலுவடைய வாய்ப்புண்டு.

⊙

**நூல் வரவுக் குறிப்பிற்காக புத்தகங்களை அனுப்ப விரும்பும் படைப்பாளிகள் இரண்டு பிரதிகளை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்**

**ஆ-ர்**

~ குப்பிழான் ஐ.சண்முகன்

ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் அருள் சுப்பிரமணியத்தின் 'அவர்களுக்கு வயது வந்துவிட்டது' என்ற நாவல் வெளிவந்தபோது ஈழத்து நாவலுக்கு வயது வந்துவிட்டது என்று சிட்டியும், சிவபாதசுந்தரமும் எழுதியதாக ஞாபகம். இப்போது தெணியானின் 'காத்திருப்பு' என்ற நாவலைப் படிக்கின்றபோதும், மீண்டும் ஒரு முறை அப்படிச் சொல்லலாமா என்று எண்ணத் தோன்றுகின்றது.

அவர்களுக்கு வயது வந்து விட்டதைப் போலவே காத்திருப்பும் ஒரு அகவியல் ரீதியான கதை தான். ஆனால், அது ஒரு காதல் கதை. இது ஒரு காதல் கதை என்று சொல்ல முடியாத பெண் மனசு பற்றிய துடிப்பும், தவிப்பும் குருட்டு இலட்சியங்களும் கொண்ட ஒரு வேதனைக் கதை.

யாழ்ப்பாணத்துக் கிராமமொன்றின் அடித்தட்டு மக்கள் சிலரின் அகமனப் போராட்டங்களே நாவலாக விரிவு பெறுகின்றது. பெரியம்மா, சுப்பிரமணியம், ஈஸ்வரி நந்தகோபாலன் ஆகிய முக்கிய பாத்திரங்களின் மன அபிலாசைகளும், தவிப்புக்களும், இயக்கங்களுமே கதையோட்டத்தை நிர்ணயிக்கின்றன. கதையில் கிராமியக் சூழல் இயல்பாகவே அமைந்துள்ளது. கிராமம், கிராமத்து மக்கள், கிராமத்து வீடுகள், கிராமத்து வீதிகள், வைரவர் கோயில், சங்கக் கடை, நல்ல தண்ணீர்க்கிணறு, பனஞ்சோலைகள் என கதைக்களம் நன்றாகவே களை கட்டும் விதத்தில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே கிராமத்து மக்களின் ஆசாபாசங்களும், பழக்க வழக்கங்களும், மரபுகளும், நம்பிக்கைகளும் உறுத்தாத விதத்தில் இயல்பாகவே கதையில் இடம் பிடித்துள்ளன.

இது பெண் ஒருத்தி 'சோரம்' போவதாக கருதப்படும் கதை. டொக்டர் முருகானந்தன் கூறுவது போல இதை ஒரு வல்லுறவுக் கதையெனக் கொள்ள முடியுமா என்பது சந்தேகமே. தன்னைக் கொண்டவனின் கண்டும் காணாத அங்கீகாரத்துடன் அல்லது கையாலாகாத் தனத்துடன் அல்லது அளவிட முடியாத அன்பின் அனுசரணையுடன் அவள் இன்னொருவனுடன் சுகம் காண்கின்றாள். அவளே சொல்கிறாள்.

"நீ எனக்குத் தேவைப்பட்டாய் அத்தேவையை நான் உணர... கண்டு கொள்ளச் செய்தவனும் நீ தான். நீ என்னைச் சந்திக்காமலிருந்திருந்தால் அத்தேவையை நான் உணராமல் இருந்திருக்கக் கூடும். அதை உணர்த்தியவன் நீ." அவள் தான் உணர்ந்த தேவையை அவன் மூலம் பெற்றுக்கொண்டாள். அவளைக் கொண்டவன் அதனை அறிந்தும் அறியாதவனாக இருந்தான்.

| |
|---|
| **காத்திருப்பு**<br>(நாவல்)<br>ஆசிரியர் : **தெணியான்**<br>விலை: 140.00<br>**வெளியீடு:**<br>பூபாலசிங்கம் புத்தகசாலை,<br>340, செட்டியார் தெரு,<br>கொழும்பு - 11<br>தொலைபேசி : 422321 |

அவள் மீது கொண்ட அளவற்ற அன்பினால் அவன் அவ்வாறு இருந்திருக்கலாம். ஆனால், அவனின் மனம் அதையிட்டு வருத்தப்படாமலிருக்குமா? அவன் தன்னுள்ளே குமைந்து குமைந்து வெந்திருக்க மாட்டானா? அவன் தன்னை அறியாமலே தன்னை அழிவின் விழிம்பிற்கு இட்டுச் சென்றிருக்க மாட்டானா? இறுதியில் அதுதான் நடந்தது. மாற்றானின் சைக்கிள் காற்றைத் திறந்துவிட்டு, பிள்ளையார் கோயில் மண்டபத்தில் நோயுற்றுக் கிடந்தான். பின்னர் செத்துப் போனான்.

இது ஒரு பாலியல் கதை தான். மனோவியல் தத்துவக் கதை தான். ஆனால், கத்தி முனையில் நடக்கும் கவனத்துடன் கொஞ்சமும் விரசமில்லாமல், பிசிறில்லாமல், சிக்கல் இல்லாமல் தெணியான் கதையை நகர்த்திச் சென்றுள்ளார். அளவான சின்னஞ்சின்ன வாக்கியங்களில் மிகவும் நிதானத்துடன் உயிரோட்டமான நடையில் இயல்பான வேகத்தில் கதை நகர்கின்றது. நடையில் நெருங்கி முடிகின்றது. தெணியான் கதையை முடித்து வைக்கின்றார்.

ஆனால், அத்துடன் கதை முடிகின்றதாவென வாசகர்கள் மனதில் கேள்விகள் எழலாம். கதை அவர்கள் மனதில் அதிர்வுகளை ஏற்படுத்தலாம். அவர்களில் சிலர் அவன் மீது அனுதாபப்படலாம். சிலர் அவன் மீது ஆத்திரப்படலாம். இப்படியும் ஒரு மனிதனா எனக் காறித் துப்பவும் கூடும். அவ்வாறே நந்த கோபாலனின் மீது பலரும் ஆத்திரப்படலாம்.




ஓர் அருமருந்த குடும்பத்தைச் சிதைத்தவனே என அவனைச் சபிக்கவும் முற்படலாம்.

என்றாலும், ஒரு பெண்ணின் மனதைப் புரிந்தவனாக அவளது ஆசைகளை அறிந்தவனாக, மதிப்பவனாக, இறுதியாக அவள் மீது அன்பு பூண்டவனாகவும், கூட - எல்லோராலும் புறக்கணிக்கப்பட்டு கையறு நிலையில் தவிக்கும் அவளையும் பிள்ளைகளையும் எல்லையற்ற அன்புடனும் பாசத்துடனும் ஏற்று ஆதரிக்க முற்படுபவனாகவும் கூட சிலர் அவனைக் காணவும் கூடும்.

இறுதியாக ஈஸ்வரி எல்லோராலும் புரிந்து கொள்ளப்பட முடியாதவள். பூடகமானவள், தனது தாயினால் கூட தன்னைப் புரிந்து கொள்ள முடியவில்லையே என்று நினைத்து ஈஸ்வரி வேதனைப்படுகின்றாள். அவள் நினைக்கின்றாள்: "பெண்ணாக இருக்கும் அவளால் என்னைப் புரிந்துகொள்ள இயலவில்லை என்றால், உலகத்தில் வேறு யார் தான் விளங்கிக்கொள்ளப் போகின்றார்கள்" உண்மையில் அவளை விளங்கிக் கொள்ளத் தான் முடியவில்லை.

வாழ்க்கையில் தன்னை மிகவும் நேசிக்கும் கணவனுக்குத் துரோகம் செய்து மனநோவைத் தருகின்றாள். பின்னர் கையறு நிலையில் தவிக்கும் போது தன்னை நேசித்து, அன்பு பாராட்டி ஆதரிக்க வந்த தனக்கு நேசமானவனைத் திரஸ்கரிக்கின்றாள். பெண் மனது புரிய முடியாத புதிர் தான் போலும்.

ஈழத்து இலக்கிய உலகில் நன்கு அறிமுகமானவர் தெணியான். அவரது நான்கு நாவல்களும் இரண்டு சிறுகதைத் தொகுதிகளும், ஏற்கெனவே நூலுருப் பெற்றுள்ளன. அவருடைய வழக்கமான கதைப் பதிவுகளிலிருந்து "ஒரு வகையில் ஒரு வித்தியாசமான நாவலாக வெளிவந்தது 'மரக்கொக்கு'. மேலும் வித்தியாசமான விதத்தில் "காத்திருப்பு" என்னும் இந்நாவல் - வெளிவந்துள்ளது. ஆர்ப்பாட்டமில்லாத - அமைதியான நதிபோன்ற கதையோட்டத்தில், இயல்பான சித்திரிக்கும் பாங்கில் தெணியான் கலையில் முழுமையை அவாவி நிற்பதைக் "காத்திருப்பு" காட்டுகின்றது.

பூபாலசிங்கம் புத்த சாலையினரின் வெளியீடாக இந்நாவல் வெளிவந்துள்ளது.

⊙

நன்றி - நூலகத்திட்டம்



# படையினர் ஆட்டுக்கடாவை சுட்டனர்! கடா வளர்த்தவரை வெட்டினர்!!

ஒக்.31 அன்று காலை மீசாலைப் பகுதியில் உள்ள மு. சண்முகம் என்பவரது வீட்டிற்கு வந்த மூன்று படையினர் அவருடைய வீட்டில் வளர்த்த ஆட்டுக்கடாவை துப்பாக்கியால் சுட்டுள்ளனர். ஏன் சுடுகின்றனர் எனத் தெரியாது சண்முகம் திகைப்பில் இருந்தார். சுட்ட படையினர் அங்கிருந்து அகன்று விட்டனர் இதன் பின்னர் சுட்டுச் செத்துப் போன ஆட்டுக் கடாவை கிடங்கு வெட்டி புதைப்பதில் ஈடுபட்டார் சண்முகம். இதன் போது மீண்டும் வந்த படையினர் சுட்ட ஆட்டுக் கடாவை மரமொன்றில் கட்டித் தொங்கவிட்டு கீழே சண்முகத்தைப் படுக்க விட்டு கழிவுப்பொருட்களை அவருக்கு மேல் உரித்துப் போட்டு இறைச்சியை எடுத்துக் கொண்டு போகும் போது படையினர் சண்முகத்தை கத்தியால் வெட்டியுள்ளனர். வெட்டுக் காயத்திற்குள்ளானவர் மயங்கிய நிலையில் இருந்த வேளை உறவினர்கள் கண்டு மந்திகை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். ஏழு வெட்டுக் காயங்களுடன் 50 வயதுடைய சண்முகம் தொடர்ந்தும் மயக்க நிலையில் உள்ளார். இது தொடர்பாக பொலிசார் உடனடி விசாரணை எதனையும் மேற்கொண்டதாக இதுவரை தெரியவில்லை.

கே.ஆர்.

# மண்ணெண்ணெய் விலையும் நெல்விலையும் சமன்

பொருளாதாரத் தடைகாரணமாக வன்னியில் மண்ணெண்ணையின் விலையும் நெல்லுமூடையின் விலையும் சமமாக இருக்கின்றது.

வன்னிக்கான பொருளாதாரத்தடைகளினால் வன்னிவாழ் மக்கள் துன்பங்களை எதிர்கொள்கின்றனர். உணவுப்பொருட்கள், மருந்துப்பொருட்கள், எரிபொருள், விவசாய உள்ளீடுகள் என்பனவற்றை தடைப்படுத்தியும், மட்டுப்படுத்தியும் வருகின்றது அரசு. இதனால் பல பொருட்கள் தட்டுப்பாடாகவும், விலை உச்சமடைந்தும் இருக்கின்றது. வாகனப் போக்குவரத்து மிகக் குறைவாகவே உள்ளது. நீண்டதூரப் பிரயாணத்திற்கும் மக்கள் மிதி வண்டிகளையே பாவிக்கின்றனர். கடந்த பத்தாண்டுகளாக இந்தத் தடை நீடிக்கின்றது. பெற்றேல், டீசல், ஓயில் போன்ற எரிபொருட்கள் வன்னிக்கு எடுத்துச் செல்ல முழுத்தடை விதிக்கப்பட்டுள்ளது. டீசல் வாகனங்கள் மண்ணெண்ணையிலேயே இயங்குகின்றன. அண்மைக் காலமாக மண்ணெண்ணை விலை மிகவும் அதிகரித்துள்ளதனால் டீசல் இயந்திரங்கள் தேங்காய் எண்ணையில் இயங்குகின்றன. இதற்கான முறையில் தேங்காய் எண்ணை தயாரிக்கப்படுவதாக வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன ஒரு லீட்டர் மண்ணெண்ணையின் விலை 350 ரூபா. இதனால் சிறுபோகச் செய்கையினை மேற்கொண்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். காரணம் நெல்லொரு மூடையின் விலையும் 350 ரூபாவாகும். இப்படியான சூழ்நிலையில் பெரும்போகச் செய்கையினை மேற்கொள்வதற்கு விவசாயிகள் தயங்குகின்றனர்.

— எஸ்.எஸ்

# ஆளுங்கட்சியா?....................

அமைச்சரவைத் தலைவரான ஜனாதிபதி நியமிக்கும் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள். பட்டியலால் ஆளுங்கட்சியே அமைச்சராகி வீடுகின்றது. அதாவது பாராளுமன்றத்தின் அரைவாசிக்கும் மேலான பகுதி நிறைவேற்றுத்துறையாகி விடுகின்றது. போதாதற்கு நிதியமைச்சராக இருப்பவர் ஜனாதிபதி. அவரது அமைச்சர்களே சட்டவாக்க சபையினராகவும் இருந்து பொதுச்செலவினத்தை அங்கீகரித்துவிட முடியும்.

சட்டவாக்க அதிகாரம் நிறைவேற்றுத்துறை அதிகாரம் என்று அரசியலமைப்பின் உறுப்பரை 4இல் பிரித்துக் காட்டப்படும் அதிகாரங்கள் பின்னர் ஒன்றிணைக்கப்பட்டு விடுகின்றன. இதுபோன்ற ஜனநாயகச் சிரச்சேதம் வேறெந்தவொரு நாட்டிலும் ஜனநாயகத்தின் பேரால் இடம்பெறும் எனக்கூறமுடியாது. அத்துடன் நின்றுவிடவில்லை பிரச்சினை.

எத்தனை அமைச்சுக்களை ஜனாதிபதி உருவாக்குகின்றார்? ஏன் உருவாக்குகின்றார் என்றும் பார்க்க வேண்டும். இங்கு பொதுச் செலவினம் முற்றுமுழுதாக அவரால் கையாளப்படும் சூழ்நிலை உருவாகின்றது. ஆனால், பாராளுமன்றம் அதற்குத் தலையாட்ட வேண்டுமா? உருவாக்கப்பட்ட சில அமைச்சர்களைப் பார்க்கவும்.

தென்மாகாண அபிவிருத்தி, வடக்கு அபிவிருத்தி, கிழக்கு அபிவிருத்தி, துறைமுக அபிவிருத்தி, திடீரென இந்துசமய விவகார அமைச்சு, முஸ்லிம் கலாசார அமைச்சு (சென்ற தடவை மறுக்கப்பட்டவை) கப்பற்துறை, கைத்தொழில் அபிவிருத்தி, மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சி, காணி அபிவிருத்தி - விவசாய அமைச்சு என்று சொல்லிக்கொண்டே போகலாம். அட்சயபாத்திரத்திலிருந்து வருவதுபோல அமைச்சுக்கள் வருகின்றன. இதில் இன்னொரு வேடிக்கையுமுள்ளது.

அதிகாரப்பரவலாக்கத்திலும் சமாதானத் தீர்விலும் அக்கறையுள்ளவராகக் காட்டிக்கொள்ளும் ஜனாதிபதி எப்படி அமைச்சுக்களை அமைத்துள்ளார் என்று பாருங்கள்.

தென்மாகாண அபிவிருத்தி அமைச்சு (ரொனிக்காக), இப்படியொரு அமைச்சு தேவையென்றால் தென் மாகாண சபை எதற்காக? அது யாருடைய செலவில் இயங்க எதைத்தான் வெட்டி விழுத்துகிறது? வடக்கு அபிவிருத்தி - உண்மையில் அரசியலமைப்பின் 13வது திருத்தத்தின் பின்பு வடக்கு -கிழக்கு என்று பிரித்து மாகாண ரீதியில் பார்ப்பது சட்டவிரோதம். ஆனால், வடக்கு அமைச்சு டக்ளஸிடமும், கிழக்குப் புனருத்தாரணம் திருமதி பேரியல் அஷ்ரப்பிடமும் உள்ளது. இது எப்படியிருக்கிறது என்றால், (மேல்மாகாணத்தில்) கொழும்பு அபிவிருத்தி அமைச்சர், கம்பஹா அபிவிருத்தி அமைச்சர் என்று அமைச்சர்கள் நியமிக்கப்படுவது போலத்தான். ஆக, அதிகாரப் பரவலாக்கமும் சமாதானத்தீர்வும் இதன் மூலம் கேலிக்குள்ளாக்கப்பட்டுள்ளது. போகிறபோக்கில் பிரதேச சபைகள் வாரியாகக் கூட அமைச்சர்கள் நியமிக்கப்படலாம். மாகாண சபைகள் வெறுமனே கட்சிக் கூட்டங்களை நடாத்துவதுடன் திருப்தி பட்டுக்கொள்ள வேண்டியதுதான்.

ஜனாதிபதியின் வழக்கமான வாக்குறுதிகள் வரிசையில் கடைசியாக வந்தது - தேர்தல் வன்முறையில் ஈடுபட்டவர்களுக்கு அமைச்சுப் பதவியில்லை என்பது. வன்முறைக்கு என்ன வரைவிலக்கணம் வைத்துள்ளரோ தெரியவில்லை. கட்சியின் பொதுச் செயலாளரே குற்றஞ் சாட்டியவருக்கும் உடனடியாக அமைச்சர் பதவி வழங்கப்பட்டு விட்டது. ஒரு வேளை எஞ்சியிருக்கும் அவரது கட்சியின் எம்.பிக்கள் அமைச்சர்களாக நியமிக்கப்படாமைக்கு அவர்கள் தேர்தல் வன்முறையில் ஈடுபட்டார்கள் என ஜனாதிபதி நினைப்பதுதான் காரணமோ தெரியவில்லை.

என்ன இருந்தாலும் இலங்கையில் ஜனநாயகம் என்றால் அதற்கொரு தனியான பெருமைதான். இந்தப் பாரம்பரியம் நீடிப்பது எல்லா விதத்திலும் எல்லோருக்கும் நல்லதில்லையா?

## யுத்தங்கள் விட்டுச்.............

வந்த வன்முறை நிகழ்வுகள், யுத்த அவலங்கள் அன்றாட வாழ்வின் ஓர் அம்சமாக எல்லாரிலும் இணைந்து செல்கிற ஒன்றாக இருந்தது. உண்மையில் இங்கு இந்த சம்பவம் முக்கியமான ஒன்றல்ல. நாவலில் இருபக்க யுத்தப் பாதிப்புக்களும் நல்ல முறையில் சொல்லப்பட்டேயிருக்கின்றன. அரச படைகளால் சரத்தும், போராளிகளால் ஜனாதிபதியும் பாதிக்கப்படுகின்ற சம்பவங்கள் மூலம் அரசியல் தத்துவார்த்த நோக்கைச் சொல்ல வந்திருக்கலாம். எனினும், அந்தச் சம்பவ இணைப்பு நாவல் முன்னுரைச் செய்த ஈர்ப்பை, உக்கிரத்தைத் தரவில்லை.

ஒன்டாட்ஜியின் இந்த நாவல் சிலி நாட்டைச் சேர்ந்த Isabel Allende யின் கவனம் பெற்ற நாவலான "காதலினதும், நிழல்களினதும்" என்ற நாவலை ஒத்திருக்கிறது. இருந்தாலும், இலங்கையின் சமகால யதார்த்தத்தை கதைப்படுத்திய விதமென எல்லாம் சேர்த்து இந்நாவலை உயர்த்திவிடுகிறது.

இந்த நாவல் சொல்ல வருகிற நீதி அல்லது அறிவு - அப்படியொன்று இருந்தால் - என்னவென்றால் மண்ணைவிட மனித உயிர்கள் மகத்துவமானது என்பது தான். அதாவது மனித கௌரவம் தான் எப்போதும் வெற்றி கொள்ளப்பட வேண்டிய ஒன்று. "மனிதம்" தான் என்றென்றைக்குமான வெற்றிப் பொருள். சாதாரண வாழ்க்கை கூட ஒரு பெரிய நிகழ்வாக இருக்கிறது. இங்கே பெரும்பாலும் உண்மை என்பதும் வார்த்தைகளின் மோதல்கள் தான்.

Mean Time ல் வந்த ஆங்கிலக் கட்டுரையைத் தழுவி...

## திருத்தம்

1 சென்ற இதழில் வெளியான ஈழமோகத்தின் முன்பக்க கவியில் ஒரு சொல் தவறாக வந்துவிட்டது. சரியான வரிகள் இவை:

உண்மை உரைத்தால் உயிர்குடிப்போர் ஆட்சி
'வண்மை'யுடன் நடக்கும் வளநாட்டில் – திண்மையுடன்
எழுதுகோல் தூக்கியவர் இறப்பதுண்டோ?: கொன்றவரே
பழுதுண்டார்! வாழ்பவற்கே பாழ்!

2 மூன்றாம் பக்கத்தில் வெளியான "சுவிஸ் கன்ரோன் - ஒரு மறுதலிப்புக் குறிப்பு" என்ற கட்டுரையை எழுதியவர் பெயர் தவறுதலாக விடுபட்டு விட்டது. அதை எழுதியவர்: ஜபார்.

3. பதினோராம் பக்கத்தில் வெளியான "பேரினவாதத்தை ஒழிக்க பேரினவாதிகளுடன் கூட்டு" என்ற கட்டுரையை எழுதியவர் சரிநிகரில் தொடர்ந்து எழுதிவரும் "சிசைரோ" அவர்கள். அவரது பெயரும் தவறுதலாக விடப்பட்டுவிட்டது.

4. 19ம் பக்கத்திலும் 3ம் பக்கத்திலும் ஒரே செய்தி தவறுதலாக பிரசுரமாகிவிட்டது - வெவ்வேறு தலைப்புக்களுடன்!

தவறுகட்கு வருந்துகிறோம்.

ஆர்

வாசுகியின்
வண்ணங்களில் உணர்வெழுதி
ஓவியத் தபால் அட்டைகள் அறிமுகம்
தலைமை: வே.தவராசா
அறிமுகவுரை: கமலினி கணேசன்
ஆர்.ருஷாந்தன் (கிக்கோ)
எம்.பிரியதர்ஷினி
நன்றியுரை: வாசுகி
இடம்: மட்டு . புனித சிசிலியா பெண்கள் பாடசாலை
காலம் 05.11.200 காலை பத்து மணி
காட்சியில்: புதிய ஓவியங்கள்
விற்பனையில் புதிய ஓவியத் தபாலட்டைகள்.

**சரிநிகர் வார இதழ் சந்தாதாரர்களுக்கு ஒரு அறிவித்தல் !**

உங்கள் சந்தாக்களைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்!

புதிய சந்தா விபரம் :

| சந்தா விபரம்: ஆயுள்சந்தா | மாதங்கள் | ஒரு வருடம் |
|---|---|---|
| உள்நாடு: | 350/= | 750/= |
| இந்தியா: | 15 US$ | 25 US$ |
| வெளிநாடு: | 30 US$ | 50 US$ |

முகவரி:
சரிநிகர், 19/4, நாவல வீதி, நுகேகொட, இலங்கை.

தொலைபேசி : 815004, 814859
தொலைமடல் : 815003

மின்னஞ்சல்:sarini@sltnet.lk

ஏற்கனவே சந்தா கட்டியுள்ளவர்களுக்கு வார இதழ் சந்தா விபரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கவனத்திற்கு: சந்தாவுக்கான பணத்தினை காசோலையாக அனுப்புவோர் 'Sarinihar' என குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a Newspaper in Sri Lanka

# சரிநிகர்

வாரஇதழ்

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.

மின்னஞ்சல்: sarini@sltnet.lk

## ஜே. ஆரின் வாரிசும் தமிழ்க்கட்சிகளும்

நாடுபூராவும் தலைவிரித்தாடிய இனக்கலவரம் நடந்து கொண்டிருக்கையில், வீதிவீதியாக தமிழர்களும், அவர்களது உடமைகளும் கொல்லப்பட்டும் தீயிட்டுக் கொழுத்தப்பட்டுக் கொண்டும் இருக்கையில் வெலிக்கடையில் சிறை-வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகள் மட்டும் பாதுகாப்பாக இருப்பார்கள் என்று நம்பிக் கொண்டிருந்த வேளையில் முழு உலகையும் திடுக்கிடச் செய்வது போல் 52 தமிழ்க் கைதிகள் சிறையிலிருந்து இழுத்து வரப்பட்டு அடித்து நொருக்கிக் கொல்லப்பட்டார்கள். அவர்களது உடல்கள் துண்டுகளாக வெட்டப்படவும், செய்தன.

குரூரமான இனவெறியுடனும், மனித விழுமியங்களை, மனிதாபி-மானத்தையெல்லாம் உதறிவிட்டே மிலேச்சத்தனதுடனும் நடந்த இந்தப் படுகள் முழு உலகையுமே அதிர்ச்சிக்குள்ளாகின.

இது நடந்தது 1983ல்.

இப்போது திரும்பவும் பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் இருந்த 28 தமிழ்க் கைதிகள் கத்தி, கோடாரி, பொல்லு போன்ற ஆயுதங்களினால் அடித்தும், கொத்தியும், வெட்டியும் கொல்லப்பட்டுள்ளார்கள். கிராமவாசிகள் ஆத்திரம் கொண்டு வந்து தாக்கியதாக முதலில் அறிவிக்கப்பட்டது. 1983இலும் இப்படித்தான் ஜே.ஆர். ஜயவர்த்தன - அன்றைய ஜனாதிபதி சிங்கள மக்கள் தம் உணர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்கள் என்று சொன்னார்.

ஆனால், பிறகு தான் தெரிந்தது அது ஒன்றும் சிங்கள மக்களின் உணர்ச்சி வெளிப்பாடு அல்ல மாறாக சிறை அதிகாரிகளாலும், காவலாளிகளாலும் அரச ஆதரவுடன் நடந்த திட்டமிட்ட நடவடிக்கை என்று. இப்போதும் முதலில் பண்டாரவளை கிராமவாசிகள் "உணர்ச்சியை" காரணமாக்கி தப்பிவிட முனைகின்றார்கள் சம்பந்தப்பட்டவர்கள். ஆனால், அந்த நோக்கம் பிசுபிசுத்து விட்டது.

காவலுக்கு நின்ற பொலிசார், இராணுவ அதிகாரி மட்டத்தைச் சேர்ந்தவர்களின் ஓரிரு உறவினர்கள், அப்பிராந்திய ஆளுங்கட்சி முக்கியஸ்தர்கள்; வீரவீதானவின் முக்கியஸ்தர்கள் ஆகியோரின் கூட்டான முயற்சி இது என்பதற்கான ஆதாரங்கள் இப்போது கிடைத்து வருகின்றன.

ஆனால், பொலிசுக்கும், சி.ஐ.டி. விசாரணையாளர்கட்கும் இந்தத் தகவல்களை விட, இந்தச் செயலை செய்தவர்கள் பற்றிய ஆதாரங்களைவிட முகாமில் இருந்தவர்கள் எப்படி இவ்வாறான ஒரு சம்பவம் உருவாகக் காரணமாக இருந்தார்கள் என்று கண்டுபிடிப்பதே முக்கியமாகப் படுகின்றது.

புலி உறுப்பினர்கள் இப்படி ஒரு சூழலை உருவாக்கும் நோக்குடன் முகாமுக்கு தமது உறுப்பினர்களை அனுப்பி வைத்திருந்தார்கள் என்று அறிக்கையிடுகின்றன அரசுதரப்புச் செய்திகள். சம்பவத்தின் பின்னணியில் "ஒரு சக்தி" செயற்பட்டு இருப்பதாக பூடகமாக அறிவித்த ஜனாதிபதி புதிய கொலையாளிகளை ஊக்குவிக்கும் விதத்தில் தான் ஜே.ஆருக்கு சளைத்தவர் அல்ல என்ற விதத்தில் தனது உரையை ஆற்றியிருக்கின்றார்.

"தலதா மாளிகா உடைக்கப்பட்ட போதும் சரி திம்புலாகல தேரர் கொல்லப்பட்டபோதும் சரி, சிங்கள மக்கள் நிதானமாக இருந்தனர்" என்று அவர் அறிவித்திருக்கிறார்.

"சிங்கள மக்களின் நிதானத்தை இடிக்க வைக்கும் வித்தில் நடக்காதீர்" என்ற மிரட்டும் பாணியிலான இந்த வார்த்தை சிங்கள மக்களது நல்லெண்ண உணர்வு காரணமாகவும், நிதானம் காரணமாகவும் தான் இந்நாட்டில் தமிழர்கள் சகித்துக கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற "பேரினவாதப் பெருந்தன்மை" உணர்வுடன் வெளிவந்திருக்கிறது.

"தமிழர்கட்கு இந்த நாட்டில் உரிமை இல்லை" சிங்கள மக்கள் ஏதோ பாவம் இருக்கட்டும் என்று விட்டால் தலைக்கு மேல் ஏற முயல்கிறார்கள் புலிகள்" என்பது அவரது உரையின் சாரம்.

ஜே.ஆருக்கு உரிய சரியான வாரிசு.

"மக்களின் உணர்வுகள்" என்ற பதாகையை வசதியாக மாட்டிக் கொண்டு தமக்கு வேண்டிய எல்லாவற்றையும் செய்துகொள்கிற சராசரி அரசியல்வாதியாக சீரழிந்து போய் பேசியிருக்கிறர் ஜனாதிபதி சந்திரிகா.

இந்தப் படுகொலைகளைக் கண்டித்து அமைதியாக நடந்த ஆர்ப்பாட்டம் எதிர்ப்பு நடவடிக்கைகள் போன்றவற்றை அடக்குவதிலும், அதில் சம்பந்தப்பட்ட சந்திரசேகரனைப் பிடித்து வைத்து விசாரிப்பதிலும் அரசும் ஜனாதிபதியும் காட்டும் அக்கறையை கொலையாளிகளைக் கண்டு பிடிப்பதில் காட்டுவதாகத் தெரியவில்லை.

எப்படியாவது புலிகளால் தான் இது நடந்து என்று நிரூபிப்பதற்கேற்ற விதத்தில் விசாரணைகள் சோடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

சுயாதீனமான விசாரணை தேவை: விசாரணைக் கொமிசன் தேவை என்றெல்லாம் பலரும் கேட்டிருக்கிறார்கள். ஆனால், அரசாங்கம் எதுவும் செய்யப் போவதில்லை.

ஆனால், அரசாங்கத்தின் அங்கமாகி விட்ட தமிழ்க்கட்சிகள் என்ன சொல்லப் போகின்றன? இதெல்லாம் எமக்கு முக்கியமல்ல, பதவி தான் முக்கியம் என்று இருக்கப் போகின்றனவா? அல்லது உண்மையான விசாரணை நடாத்தப்பட்டு கொலையாளிகள் தண்டிக்கப்படுவதற்கு முயற்சி செய்யப் போகின்றனவா?

எதைச் செய்யப் போகிறார்கள்?

## யுத்தத்தால் பாதிக்கப்பட்டது எமது சிங்கள மைந்தர்களே என்கிறார் ஜனாதிபதி

சுனந்த தேசப்ரிய

யுத்தம் காரணமாக இந்நாட்டில் அதிகம் பாதிக்கப்படுவது யார்? யுத்தம் காரணமாக இந்நாட்டில் அதிகம் கொலையுண்ட மக்கள் யார்? இந்நாட்டு இனப்பிரச்சினை குறித்து இக் கேள்விகள் இரண்டும் கேட்கப்பட்டால் நீங்கள் கொடுக்கும் பதில் என்ன?

உங்கள் பதில் எவ்வாறாக இருந்த போதிலும், இந்நாட்டின் பிரபல பிரஜையும் அதிக அதிகாரங்களைப் பெற்றவருமான சந்திரிகா குமாரண்துங்க இக்கேள்விகள் இரண்டிற்கும் கடந்த 8ம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு, தொலைக்காட்சி நேரடி நேர்காணலின் போது பதிலளித்தார்.

அவர் அளித்த பதிலை நான் இங்கு எழுதுகிறேன். அதனை வாசிப்பதற்கு முன்னர் நீங்கள் சற்று நன்கு மூச்சுவிட்டுக் கொள்ளுங்கள். அப்பதில் காரணமாக நீங்கள் மூச்சு விட மறந்து போகலாம்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவின் கருத்தின்படி வடக்கு போர் நிலைமை காரணமாக இந்நாட்டில் அதிகம் பாதிக்கப் படுவது தென்னிலங்கை சிங்கள மக்களாவர். யுத்தம் காரணமாக அதிகம் கொலையுண்டவர்களாக இருப்பதும் அவரது மொழியில் கூறுவதாயின் அவரது சிங்கள மைந்தர்களாவர். மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள் அவரது சொற்பதத்தை - எமது சிங்கள மைந்தர்கள்!-

யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்திருக்கும் சிங்கள மக்களின் எண்ணிக்கை யாது? யுத்தம் காரணமாக குண்டு தாக்குதல் களுக்குள்ளாகி புல்டோசர் மற்றும் கவசவாகனங்களினால் அரைபட்டுப் போன சிங்கள மக்களின் வீடுவாசல்களின் எண்ணிக்கை யாது? படையினரால் முகாமாக மாற்றப்பட்டதனால் மூடப்பட்ட சிங்களப் பிள்ளைகள் கல்வி கற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை என்ன? வவுனியாவில் தமிழ் அகதி முகாம்களைப் போன்று சிங்கள அகதி முகாம்கள் எத்தனை ஸ்தாபிக்கப்பட்டுள்ளன? யுத்த பீதி காரணமாக இந்தியாவுக்கு தப்பிச் சென்று வாழும் சிங்களவர்களின் எண்ணிக்கை யாது? படையினர் மீன்பிடித்தலை தடை செய்ததன் காரணமாக தமது வாழக்கைத் தொழிலை இழந்த சிங்கள மீனவர்களின் எண்ணிக்கை யாது? படையினரின் விசேட அனுமதிச் சீட்டின்றி நாடு முழுவதும் பயணிக்க சுதந்திரம் இன்றி இருக்கும் சிங்கள மக்கள் எங்கிருக்கின்றனர்? யுத்தம் காரணமாக பத்து வருடங்களுக்கு அதிகமாக மின்சாரம் இன்றி வாழும் சிங்கள மக்கள் எங்கிருக்கின்றனர்? பெற்றோல் மற்றும் மண்ணெண்ணையை அதிக விலை கொடுத்து கொள்வனவு செய்யும் சிங்கள மக்கள் எந்தப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்? பொருட்கள் மற்றும் மருந்துகள் எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டதன் காரணமாக பாதிக்கப்படும் சிங்கள மக்கள் எங்கிருக்கின்றனர்?

இவ்வாறான மிக நீண்ட பல கேள்விகளைத் தொடர்ச்சியாகக் கேட்டுக் கொண்டேயிருக்கலாம். உண்மையில் இந்நாட்டு யுத்தம் காரணமாக அதிகம் பாதிக்கப்படுவது சிங்கள மக்கள் தான் எனக் கூறுவதற்கு முன்னர் சற்று சிந்தித்து செயல்பட ஜனாதிபதிக்கு நேரம் கிடைக்கவில்லையா? கடந்த பொதுத் தேர்தலின் போது அவர் இதனை விட முற்றிலும் மாறுபட்ட வகையிலேயே உரையாற்றியிருந்தார். அதாவது இந்நாட்டு பெரும்பான்மை மக்கள் இன்று முன்னெப்போதுமில்லாத அளவுக்கு சுதந்திரமாகவும் சமாதானமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் எனக் கூறியிருந்தார். ஜனாதிபதியின் இந்த அதிகம் பாதிக்கப்படும் மக்கள் சிங்களவர்கள் என்ற கூற்றும், எமது சிங்கள மைந்தர்கள் தான் அதிகம் மரணமடைகின்றார்கள் என்ற கூற்றும் அவர் சுயமாக உருவாக்கிய கூற்றல்ல. சிங்கள உறுமய கட்சியின் தேசிய அமைப்பாளரும் பயங்கரவாதத்திற்கெதிரான தேசிய இயக்கத்தினைச் சேர்ந்தவருமான சம்பிக்க ரணவக்கவிடமிருந்து அவர் இக்கூற்றுக்களைத் திருடியுள்ளார். 'கொட்டி விளிவிதிமி' எனும் நூலில் சம்பிக்க ஆச்சரியத்தக்க வகையிலான புள்ளிவிபரங்களின் அடிப்படையில் இது பற்றிக் கூறியுள்ளார். 1988-90 காலப்பகுதியில் ஜே.வி.பி சிவில் யுத்தம் காரணமாக .கொலையுண்ட அனைத்து சிங்கள இளைஞர்களையும் வடக்கு கிழக்கு யத்தத்தில் இறந்தவர்களின் பட்டியலில் உள்ளடக்கியுள்ளார். ஏனெனில் சம்பிக்க ரணவக்கவின் கருத்தின்படி தெற்கின் 88-90ம் ஆண்டு கிளர்ச்சி வடக்கு தமிழ் இனவாதத்தின் காரணமாகவே ஏற்பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுத் தேர்தலின் போது பொ.ஐ.முவைச் சேர்ந்த பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க சிங்கள இனவாதத்தின் கோஷங்களை தனது கோஷங்களாக உருமாற்றிக் கொண்டமையைக் காணக் கூடியதாக வுள்ளது. தற்போது ஜனாதிபதி இனவாதிகளின் கூற்றுக்களையும் தர்க்கங்களையும் கடன் வாங்க ஆரம்பித்துள்ளார். இது இலங்கையின் அரசியலில் நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய காரணியாகும். சிங்கள இனவாதத்தின் கோஷங்களை உள்வாங்கி உச்சரிப்பதனால் இவ் இனவாதம் பொ.ஐ.முக்குள்ளும் ஊடுருவும் அபாயம் தான் ஏற்படப் போகின்றது எனலாம். அத்துடன் இக்கோஷங்களுக்கு மக்கள் மத்தியில் நம்பகத் தன்மை ஏற்படக் கூடும்.

மோசமான நிலையை அடைந்திருக்கும் இனப்பிரச்சினையினால் இனவாதச் சக்திகள் தமிழ் அரசியலில் தலைமைத்துவத்தை பெற்றுக் கொண்ட முறையில் அன்றி, தெற்கில் ஆரம்பித்துள்ள சிங்கள பௌத்த இனவாதச் சக்திகள் பலமடையும் காலப்பகுதியில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அதாவது வெளிப்படையாகவே இவையெலாம் தற்போது நடைபெறும் சூழலிலாகும்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஒக்.31 அன்று ஜனாதிபதியின் உரையும் இனக்கலவரம் ஒன்று ஏற்படாதிருப்பதனை தடுப்பதனை நோக்கமாகக் கொண்டிருந்தது. அவர் இனங்களுக்கிடையில் சமாதானத்தையும், ஒற்றுமையையும் வலியுறுத்தினார். எனினும் அவரது உரை அக் கோரிக்கைகளுக்கு முரணானதாகவே காணப்பட்டது. அதாவது சிங்கள பௌத்த இனவாதத்தின் கருத்தியலாகவே அது காணப்பட்டது. தவறான வழியில் சென்று சரியான இலக்கை அடைய முடியாது என்பதைப் போல் அவரது உரையும் போக்கும் தவறானது ஆகும். சரியாகக் கூறுவதாயின் சமாதானத்திற்காக யுத்தம் போன்று தவறான ஒரு முயற்சியாகும்.

* இன்றைய இளைஞர்கள் என்ன சிந்திக்கிறார்கள்?

நவம்பர் மாதம் 07 ஆம் திகதி மாலை 7.30 மணிக்கு
ரி.என்.எல். தொலைக்காட்சியில் விழிப்பு நிகழ்ச்சியைப் பாருங்கள்



செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கு
ரி.என்.எல் தொலைக்காட்சியில்

எரியும் இனப்பிரச்சினை ! மக்களின் அவலங்கள் போதும் !!

இன நல்லிணக்கம் மூலமான சமாதானத்திற்கு
இளையவர்களின் பணி !!!

சமஉரிமை, சகவாழ்வு, சமாதானம்

இலங்கையின் வரலாற்றில் இனப்பிரச்சினை தொடர்பான
முதலாவது தமிழ் தொலைக்காட்சி சஞ்சிகை நிகழ்ச்சி இது.

ஆசிரியர் : பாலசுப்ரமணியம் வசந்தன், வெளியீட்டாசிரியர் : எஸ்.கே.விக்னேஸ்வரன். 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட. அச்சுப்பதிவு : நவமக 66/04, தர்மாராம வீதி, இரத்மலானை. 31.10.2000